
www.malankaralibrary.com




**வினா விடைகள்**

**5.4.2021**

**தொடர்புக்கு : frmariajohn@gmail.com**

**தனிச்சுற்று**

www.malankaralibrary.com

பாடம் 1

## திருவிவிலியம் - இறைவார்த்தை

பயிற்சி வினாக்கள்

1. கடவுள் தம்மைத் தாமே வெளிப்படுத்தியதன் தொகுப்பே விவிலியம் - விளக்குக?

மனிதன் இறைவனை தேடியதான வரலாறு மனித வரலாற்றைப் போன்று பழமையான ஒன்றாகும். எல்லா சமய நூல்களிலும் இறைவனை தேடும் மனிதனின் தேடல் தான் கூறப்பட்டுள்ளது. ஆனால் யூத-கிறிஸ்தவ சமய நூலான திருவிவிலியத்தில் மனிதனைத் தேடும் இறைவனையே நாம் காண முடிகிறது. இவ்வாறாக மனிதனுக்கு தன்னையே வெளிப்படுத்தும் இறைவனையே கிறிஸ்தவ சமயத்தில் நாம் காண்கின்றோம்.

இவ்வுலக படைப்பின் வழியாக இறைவெளிப்பாடு ஆரம்பமானது. தமது உருவிலும் சாயலிலும் மனிதனைப் படைத்ததன் வழியாக கடவுள் தமது வெளிப்படுத்துதலைத் தொடர்ந்து நிகழ்த்தினார். மேலும் மனித வரலாற்றில் கடவுள் ஆபிரகாமுக்கு தன்னை வெளிப்படுத்தவும், அவர் வழியாக இஸ்ரயேல் என்ற ஒரு இனத்தை உருவாக்கவும், அவர்களை வழிநடத்தவும், அவர்கள் வாழ்வுக்கு நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் ஏற்படுத்தவும் செய்தார். இறைவாக்கினர்கள், அரசர்கள் மற்றும் குருக்கள் வாயிலாக கடவுளின் வெளிப்படுத்துதல் தொடர்ந்தது.

அனைத்திற்கும் மேலாக காலநிறைவில் தன் ஒரே பேறான மகனை உலகிற்கு அனுப்பி தம்மைத்தாமே வெளிப்படுத்தினார். இயேசு கிறிஸ்துவின் மனிதராதல் வழியாக கடவுள் தம் வெளிப்படுத்துதலை நிறைவு செய்தார். கிறிஸ்து அனுப்பிய தூய ஆவியின் வழியாகவும், கிறிஸ்துவின் உடலான திருச்சபையின் வழியாகவும் கடவுள் தம் வெளிப்படுத்துதலை இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறார். இவ்வாறு கடவுளின் வெளிப்படுத்துதலும் அதற்கு மனிதன் அளித்த மறுமொழியுமே திருவிவிலியத்தின் பொருளடக்கம்.

'கடவுள் தம்மைத்தாமே வெளிப்படுத்தியதன் நிறைவே திருவிவிலியம், கடவுள் எவ்வாறு தமது சொல்லாலும், செயலாலும் தம்மையே வெளிப்படுத்தினார் என்பதை திருவிவிலியம் விளக்குகிறது. திருவிவிலியத்திலுள்ள இறைவார்த்தைகளின் வழியாக நாம் கடவுளை முழுமையாக அறிந்துகொள்வதனால், கடவுள் தம்மை நம்மிடம் வெளிப்படுத்துகின்றதான ஓர் வழிமுறையே திருவிவிலியம்' என்று இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் இறைவெளிப்பாடு என்னும் ஏடு.

2. விவிலியம் இறை ஏவுதலால் எழுதப்பட்டது?

கி.மு. 1300-க்கும் கி.பி. 100-க்கும் இடைப்பட்ட 1400 வருடங்களில் பல மனிதர்களால் 73 நூல்களின் தொகுப்பே விவிலியம் என்று புரிந்துக்கொண்டோம். இறைவனின் சித்தமும் விருப்பமும் தூய ஆவியால் தூண்டப்பட்டு எழுதப்பட்டது. ஆகையால் இறைவிருப்பத்தால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களால் தூய ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்டதே விவிலியம் ஆகும். இதற்கான இறைவனின் தூண்டுதலையும், ஏவுதலையும் குறிப்பதற்காக பயன்படுத்தும் வார்த்தையே இறை ஏவுதல்.

திருவிவிலியம் மனிதரால் எழுதப்பட்டதனால் மனிதருக்குரிய தவறுகளும் (குறைபாடுகளும் திருவிவிலியத்தில் காணப்பட வாய்ப்புண்டு. இத்தகைய தவறுகள் இறை ஏவுதலையோ உண்மைத்தன்மையையோ பாதிப்பதில்லை.

2. விவிலிய திருமுறை நூல்களுக்கும் திருமுறை புற நூல்களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாது??

பழைய ஏற்பாட்டில் உள்ள 46 நூல்களும், புதிய ஏற்பாட்டில் உள்ள 27 நூல்களும் அன்றி மற்று பல நூல்களும் பழைய ஏற்பாட்டு காலத்திலும் புதிய ஏற்பாட்டு காலத்திலும் இறைவார்த்தை நூல்களாக இருந்தன. ஆனால் அவற்றை இறை ஏவுதல் நூற்கள் என்று திருச்சபை ஏற்கவில்லை. இறை ஏவுதல் நூற்களையும், இறை ஏவுதலல்லாத நாற்களையும் திருச்சபை வேறுபடுத்தியிருந்தது. இறை ஏவுதல் என்ற நிலையில் திருச்சபையின் அங்கீகாரமுடைய நூற் படிவமே விவிலியத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

சில நூல்களை இறை ஏவுதல் நூல்களாக தொடக்க காலத்திலிருந்தே விசுவாசிகள் கூட்டம் கருதியது. நாளடைவில் அந்த நூல்கள் புனித நூல்களாக அடையாளம் காணப்பட்டது. பின்னர் திருச்சபை அதற்கு அதிகாரபூர்வமான அங்கீகாரம் வழங்கியது. இவ்வாறு திருச்சபை ஏற்றுக்கொண்ட நூல்களின் முழுமையான பட்டியலே மறை நூலின் திருமுறை அல்லது விவிலியத்திருமுறை என்று அழைக்கப்படுகிறது. இவற்றை கானோனிக நூல்கள் என்றும் அழைக்கிறோம். கானோன் என்ற சொல் அளவுகோல் எனப் பொருள்படுகிறது. விவிலியத்தின்

www.malankaralibrary.com

அதிகாரபூர்வமான பட்டியலை கானோன் என்று அழைக்கிறோம். ஆனால் அதிகாரபூர்வமான அங்கீகாரம் இல்லாத நூல்களை திருமறைபுற நூல்கள் என்று அழைக்கிறோம். இவ்வாறு அப்போஸ்தலர்களுடையவும் முக்கிய நபர்களுடையவும் பெயரில் அனேகம் திருமறை புறநூல்கள் உள்ளன.

தொடக்கத் திருச்சபை புனித ஜெறோம், புனித அகுஸ்தினார் ஆகியோர் அங்கீகரித்த விவிலிய திருமுறை 16-ாம் நூற்றாண்டு வரை விவாதிக்கப்படவில்லை. ஆனால் 16-ாம் நூற்றாண்டில் சீர்திருத்த கிறிஸ்தவர்கள் விவிலியத் திருமுறையில் மாறுதல் செய்தனர். இதற்கு எதிராக 1546-ல் திரிதெந்து திருச்சங்கம் விவிலிய திருமுறையை குறித்து அதிகாரபூர்வமான அறிக்கை வெளியிட்டது. புனித ஜெறோமின் இலத்தீன் வுல்காத்தாவிலுள்ள நூல்களனைத்தையும் அதன் முழுமையான பொருளில் ஏற்றுக்கொள்ளாத மக்களை சபிக்கப்பட்டவர்களாக இத்திருச்சங்கம் அறிவித்தது. இது விவிலிய திருமுறையில் கடைசி அறிவித்தலாக நிலைத்து நிற்கின்றது.

4. விவிலியத்தின் உருவாக்கம் குறித்து ஒரு குறிப்பு வரைக?

திருவிவிலியத்தில் 75 நூல்கள் உள்ளன. ஒவ்வொரு நூலும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளன. இந்நூல்களனைத்தும் தூய ஆவியின் தூண்டுதலால், மனிதர்களால் எழுதப்பட்டவையாகும். இதில் பழைய ஏற்பாட்டில் உள்ள 46 நூல்கள் எழுதுவதற்கும் நூற்றாண்டுகளுக்கு முன்னரே கடவுள் இஸ்ரயேல் மக்களை அழைத்து அவர்களை வழிநடத்தி தயார் செய்தார். எழுதப்பட்ட ஒரு நூலின் வழியாக அன்று, மாறாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் வழியாகவே கடவுள் தம்மை வெளிப்படுத்தினார். இந்த சமூகத்தின் இறை அனுபவம் தூய ஆவியின் தூண்டுதலால் மனிதர்களால் எழுதப்பட்டது தான் பழைய ஏற்பாடு.

அவ்வாறே இயேசுவின் உயிர்த்தெழுதல் நடந்து பல ஆண்டுகளுக்கு பின் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது. தூய ஆவியால் வழிநடத்தப்பட்ட சபைதான் முதலில் உருவானது. சபையில் இயேசுவின் அனுபவமும், தூய ஆவியின் ஆட்கொள்ளுதலும் கிடைத்த மக்கள் புத்தக வடிவில் உருவாக்கியது தான் புதிய ஏற்பாட்டு நூல்கள். -

எழுதப்படுவதற்கு முன் இறைவார்த்தை வாய்மொழியாக சொற்களிலும் பாடல்களிலும் நிலைகொண்டிருந்தது. பின்னர் எழுதப்பட்டபோது அவற்றிற்கு நிலையான வடிவம் கிடைத்தது. இந்நூல் முதலில் எபிரேயம், கிரேக்கம் மற்றும் அரமாய் மொழிகளில் எழுதப்பட்டது. காகிதத்தாளின் முதல் வடிவமான பப்பீரஸ், தோல், உலோகத்தகடுகள் போன்றவற்றில் விவிலியம் எழுதப்பட்டது. அதை சுருளேடுகளாகப் பாதுகாத்தனர். பிற்காலங்களில் இவற்றின் பகர்ப்புகள் உருவாயின. 15-ம் நூற்றாண்டில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டபோது முதலில் அச்சிடப்பட்ட நூல் விவிலியம் ஆகும்.

5. கத்தோலிக்கத் திருச்சபை விவிலியத்தை எவ்வாறு வகைப்படுத்தியுள்ளது?

பழைய ஏற்பாட்டை யூதர்கள் மூன்றாகப் பிரித்தனர். அவையாவன, (1) தோரா (சட்டங்கள்), (2) நபீம் (இறைவாக்கினர்கள்), (3) கேத்துபிம் (இலக்கியம்) ஆனால் கி.பி. 13-ம் நூற்றாண்டு முதல் கத்தோலிக்க விவிலிய நூல்களை அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் மூன்றாகப் பிரித்தனர். அவை வரலாறு, அறிவுரை, இறைவாக்கு நூல்கள் ஆகும்.

பழைய ஏற்பாட்டு நூல்கள் (46)

1. வரலாற்று நூல்கள் (21)

தொடக்க நூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம், யோசுவா, நீதித்தலைவர்கள், ரூத்து, 1, 2 சாமுவேல், 1, 2 அரசர்கள், 1, 2 குறிப்பேடு, தோபித்து, யூதித்து, எஸ்ரா, நெகேமியா, எஸ்தர், 1, 2 மக்கபேயர்.

2. போதனை நூல்கள் (7) -

யோபு, திருப்பாடல்கள், நீதிமொழிகள், சபை உரையாளர், இனிமைமிகு பாடல், சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம்.

3. இறைவாக்கு நூல்கள் (18)

எசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியேல், தானியேல், ஒசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீக்கா, நகூம், அபகூக்கு, செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி, பாருக்கு.

புதிய ஏற்பாட்டு நூல்கள் (27)

1. வரலாற்று நூல்கள் (5)

நற்செய்திகள் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்), திருத்தூதர் பணிகள்.

www.malankaralibrary.com

2. போதனை நூல்கள் (21) -

புனித பவுல் எழுதிய 14 திருமுகங்கள் : உரோமையர், 1, 2 கொரிந்தியர், கலாத்தியர். பேசியர். பிலிப்பியர், கொலோசையர், 1, 2, தெசலோனிக்கர், 1, 2 திமொத்தேயு, கீத்து, பிலமோன், எபிரேயர், பொதுத்திருமுகங்கள் 7 : யாக்கோபு, 1, 2 பேதுரு, 1, 2, 3 யோவான், யூதா.

3. இறைவாக்கு நூல் (1)

திருவெளிப்பாடு.

6. கத்தோலிக்க விவிலியத்திற்கும், புரொட்டஸ்டன்டு விவிலியத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு யாது??

கி.மு. 3-ாம் நூற்றாண்டில் 70 யூத பண்டிதர்களால் கிரேக்க மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட செப்துவஜிந்த், அலக்சாண்ட்ரியன் திருமுறை என்று அறியப்படுகிறது. ஆதித்திருச்சபையும், புனித ஜெறோமும், திரிதெந்து திருச்சங்கமும் இந்த செப்துவஜிந்த் திருமுறையை ஏற்றுக்கொண்டனர். ஆனால் பிற்காலத்தில் யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாலஸ்தீனியன் திருமுறையில் அலக்சான்ட்ரியன் திருமுறையிலுள்ள ஏழு நூல்கள் உட்படுத்தப்படவில்லை. அவைகள் முறையே 1, 2 மக்கபேயர், தோபித்து, யூதித்து, சீராக்கில் ஞானம் சாலமோனின் ஞானம், பாரூக்கு ஆகியவை ஆகும்

16-ாம் நூற்றாண்டு வரை பழைய ஏற்பாட்டில் உள்ள 46 நூல்கள் உட்பட்ட அலக்சான்ட்ரியன் திருமுறையைப்பற்றி திருச்சபையில் எவரும் விவாதிக்க முன்வரவில்லை. புரொட்டஸ்டன்டு புரட்சிக்குப்பின் மார்ட்டின் லூதர் கத்தோலிக்கத் திருச்சபையின் திருமுறையை விவாதிக்கவும் பழைய ஏற்பாட்டில் 30 நூல்கள் மட்டுமே உள்ள யூதர்களின் பாலஸ்தீனியன் திருமுறையை ஏற்றுக்கொள்ளவும் செய்தார். ஆகையால் புரொட்டஸ்டன்டு விவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் ஏழு நூல்கள் குறைவாகக் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் உள்ள 27 நூல்கள் கத்தோலிக்க விவிலியத்திலும் புரொட்டஸ்டன்டு விவிலியத்திலும் ஒன்றுபோல் காணப்படுகிறது.

அவ்வாறு கத்தோலிக்க விவிலியத்தில் மொத்தம் 73 நூல்களும், புரொட்டஸ்டன்டு விவிலியத்தில் மொத்தம் 66 நூல்களும் உள்ளன.

குறு வினா விடைகள்

1. இன்றைய உலகில் மிக அதிக மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ள நூல் எது? விவிலியம்
2. மனித வாழ்க்கையையும், வரலாற்றையும் ஒன்றாக கவர்ந்த நூல் எது? திருவிவிலியம்
3. மனிதன் இறைவனை தேடியதான வரலாறு எதைப் போன்று பழமையானது? மனித வரலாற்றை
4. எல்லா சமய நூல்களிலும் மனிதனின் தேடல் யாருக்காக எனக் கூறப்பட்டுள்ளது? இறைவனை
5. மனிதனைத் தேடும் இறைவனை குறிப்பிடும் சமய நூல் எது? திருவிவிலியத்தில்.
6. இவ்வுலக படைப்பின் வழியாக **இறைவெளிப்பாடு** ஆரம்பமானது.
7. எதன் வழியாக கடவுள் தம் வெளிப்படுத்துதலை நிறைவு செய்தார்? இயேசு கிறிஸ்துவின் மனிதராதல்
8. கடவுளின் வெளிப்படுத்துதலும் அதற்கு மனிதன் அளித்த மறுமொழியும் என்பது எதன் பொருளடக்கம் ஆகும்? திருவிவிலியத்தின்
9. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கடவுள் தம்மை நம்மிடம் வெளிப்படுத்துகின்ற ஓர் வழிமுறை என்று எதனைக் குறிப்பிடுகிறது? திருவிவிலியம்'
10. பைபிள் என்ற சொல்லுக்கு பொருள். என்ன?? 'நூல்'
11. பைபிள் என்னும் சொல் எந்த கிரேக்கச் சொல்லிலிருந்து உருவானது? பிப்ளியா
12. இஸ்ரயேல் மக்கள் சமூகத்தின் இறை அனுபவத்தை தூய ஆவியின் தூண்டுதலால் மனிதர்களால் எழுதப்பட்டது என்ன?? பழைய ஏற்பாடு.
13. தூய ஆவியால் வழிநடத்தப்பட்ட திருச்சபை மக்கள் புத்தக வடிவில் உருவாக்கியது என்ன?? புதிய ஏற்பாட்டு நூல்கள்
14. விவிலியம் முதலில் எந்தெந்த மொழிகளில் எழுதப்பட்டது? எபிரேயம், கிரேக்கம் மற்றும் அரமாய் மொழிகளில்

15. விவிலியம் முதலில் எதனில் எழுதப்பட்டது? காகிதத்தாளின் முதல் வடிவமான பப்பீரஸ், தோல், உலோகத்தகடுகள்
16. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டபோது முதலில் அச்சிடப்பட்ட நூல் எது? விவிலியம்
17. பழைய ஏற்பாடு எழுதப்பட்ட காலம் எது? கி.மு. 1300-க்கும் கி.மு. 50-க்கும் இடைப்பட்ட காலம்
18. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலம் எது? கி.பி 50-க்கும், 100-க்கும் இடைப்பட்ட காலம்
19. விவிலியம் உருவாக எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் எவ்வளவு? 1400 ஆண்டுகாலம்
20. ஐஞ்சுருள் நூல்கள் யாவை? தொடக்கநூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்ட நூல்
21. ஐஞ்சுருள் நூல்கள் எப்போது முழுவதுமாக எழுதி முடிக்கப்பட்டன? கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில்
22. புதிய ஏற்பாட்டில் முதலில் எழுதப்பட்டவை யாவை? புனித பவுலடியாரின் திருமுகங்கள்
23. புனித பவுலடியாரின் திருமுகங்களுள் முதலாவதாக கி.பி. 51 -ல் எழுதப்பட்டது எந்நூல்? தெசலோனிக்கியருக்கு முதல் திருமுகம்.
24. புதிய ஏற்பாட்டில் கடைசியில் எழுதப்பட்ட நூல்கள் யாவை? யோவான் நற்செய்தி, யோவானின் 3 திருமுகங்கள், திருவெளிப்பாடு
25. பழைய ஏற்பாட்டு நூல்கள் பெரும்பாலும் எந்த மொழியில் முதலில் எழுதப்பட்டன? எபிரேயம்
26. முதலில் பழைய ஏற்பாடு முழுவதுமாக எந்தெந்த மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டன? அரமேயம், கிரேக்கம், இலத்தீன்
27. எழுபது பண்டிதர்கள் சேர்ந்து கிரேக்க மொழியில் முதன்முதலாக மொழிபெயர்ப்பு செய்த பழைய ஏற்பாட்டு நூல் எவ்வாறு அழைக்கப்படுகிறது? 'செப்துவஜிந்த்'
28. 'செப்துவஜிந்த்' எப்போது உருவாக்கப்பட்டது? கி.மு. 275-ல்
29. செப்துவஜிந்த் என்பதன் பொருள் என்ன?? எழுபதின்மர்.
30. முதல் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொண்ட பழைய ஏற்பாட்டு நூலின் பெயர் என்ன?? செப்துவஜிந்த்
31. ஆதித்திருச்சபையில் சுறியானி மொழியில் மொழிபெயர்த்த விவிலியத்தின் பெயர் என்ன?? பசித்தா
32. பசித்தா என்பதன் பொருள் என்ன? "எளிதாக மொழிபெயர்த்தல்"
33. விவிலியத்தின் இலத்தீன் மொழிபெயர்ப்புக்கு என்ன பெயர்? 'வுல்காத்தா'
34. 'வுல்காத்தா' எப்போது தயார்க்கப்பட்டது? கி.பி. 382 -க்கும் 405 - க்கும் இடையே
35. 'வுல்காத்தா'வை தயாரித்தவர் யார்? புனித ஜெறோம்
36. 'வுல்காத்தா' வின் பொருள் என்ன? 'எளிதான மொழிபெயர்த்தல்'
37. இன்றைய விவிலிய மொழிபெயர்ப்புகள் எந்நெந்த மொழிபெயர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டவை? எபிரேயம், கிரேக்கம், ப்சீத்தா, வுல்காத்தா
38. கி.மு. 1300-க்கும் கி.பி. 100-க்கும் இடைப்பட்ட 1400 வருடங்களில் பல மனிதர்களால் உருவாக்கப்பட்ட 73 நூல்களின் தொகுப்பை எவ்வாறு அழைக்கிறோம்? விவிலியம்
39. இறைவிருப்பத்தால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களால் தூய ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்ட நூல் எது? விவிலியம்
40. இறை ஏவுதல் நூற்களாக திருச்சபை ஏற்றுக் கொண்ட விவிலிய நூற்கள் எத்தனை? 73
41. இறை ஏவுதல் நூல்களாக திருச்சபை ஏற்றுக்கொண்ட நூல்களின் முழுமையான பட்டியலுக்குப் பெயர் என்ன? மறைநூலின் திருமுறை அல்லது விவிலியத்திருமுறை
42. விவிலியத்திருமுறை எவ்வாறு அழைக்கப்படுகிறது? கானோனிக நூல்கள்
43. கானோன் என்ற சொல்லின் பொருள் என்ன? அளவுகோல்
44. விவிலியத்தின் அதிகாரபூர்வமான பட்டியலுக்குப் பெயர் என்ன? கானோன்

45. திருச்சபை அதிகாரபூர்வமான அங்கீகாரம் இல்லாத நூல்களை எவ்வாறு அழைக்கப்படுகிறோம்? திருமறைபுற நூல்கள்
46. தொடக்கத் திருச்சபையின் விவிலியத்திருமுறையை அங்கீகரித்த முக்கியமானவர்கள் யாவர்? புனித ஜெறோம், புனித அகுஸ்தினார்
47. 16-ாம் நூற்றாண்டில் விவிலியத் திருமுறையில் மாற்றம் செய்து கொண்டவர்கள் யாவர்? சீர்திருத்த கிறிஸ்தவர்கள்
48. 1546-ல் விவிலிய திருமுறையை குறித்து அதிகாரபூர்வமான அறிக்கை வெளியிட்ட திருச்சங்கம் எது? திரிதெந்து திருச்சங்கம்
49. செப்துவஜிந்த் விவிலியத்திற்கு மற்றொரு பெயர் என்ன? அலக்சாண்ட்ரியன் திருமுறை
50. ஆதித்திருச்சபையும், புனித ஜெறோமும், திரிதெந்து திருச்சங்கமும் ஏற்றுக்கொண்ட திருமுறை யாது? செப்துவஜிந்த்
51. யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருமுறை யாது? பாலஸ்தீனியன் திருமுறை
52. பாலஸ்தீனியன் திருமுறையில் உட்படுத்தப்படாத நூல்கள் எத்தனை? 7
53. பாலஸ்தீனியன் திருமுறையில் உட்படுத்தப்படாத நூல்கள் யாவை? 1, 2 மக்கபேயர், தோபித்து, யூதித்து, சீராக்கின் ஞானம் சாலமோனின் ஞானம், பாரூக்கு
54. கத்தோலிக்க விவிலியத்தில் மொத்தம் எத்தனை நூல்கள் உள்ளன? 73
55. புரொட்டஸ்டன்டு விவிலியத்தில் மொத்தம் எத்தனை நூல்கள் உள்ளன? 66
56. பழைய ஏற்பாட்டை யூதர்கள் எவ்வாறு பிரித்தனர். அவையாவன? (1) தோரா (சட்டங்கள்), (2) நபீம் (இறைவாக்கினர்கள்), (3) கேத்துபிம் (இலக்கியம்)
57. கி.பி. 13-ம் நூற்றாண்டு முதல் கத்தோலிக்க விவிலிய நூல்களை உள்ளடக்கத்தின் அடிப்படையில் எவ்வாறு பிரித்தனர்? வரலாறு, அறிவுரை, இறைவாக்கு நூல்கள்
58. பழைய ஏற்பாட்டு நூல்கள் மொத்தம் எத்தனை? 46
59. பழைய ஏற்பாட்டு நூல்களில் வரலாற்று நூல்கள் எத்தனை? 21
60. பழைய ஏற்பாட்டு நூல்களில் வரலாற்று நூல்கள் யாவை? தொடக்க நூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம், யோசுவா, நீதித்தலைவர்கள், ரூத்து, 1, 2 சாமுவேல், 1, 2 அரசர்கள், 1, 2 குறிப்பேடு, தோபித்து, யூதித்து, எஸ்ரா, நெகேமியா, எஸ்தர், 1, 2 மக்கபேயர்.
61. பழைய ஏற்பாட்டு நூல்களில் போதனை நூல்கள் எத்தனை? 7
62. பழைய ஏற்பாட்டு நூல்களில் போதனை நூல்கள் யாவை? யோபு, திருப்பாடல்கள், நீதிமொழிகள், சபை உரையாளர், இனிமைமிகு பாடல், சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம்.
63. பழைய ஏற்பாட்டு நூல்களில் இறைவாக்கு நூல்கள் எத்தனை? 18
64. பழைய ஏற்பாட்டு நூல்களில் இறைவாக்கு நூல்கள் யாவை? எசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியேல், தானியேல், ஓசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீக்கா, நகூம், அபகூக்கு, செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி, பாருக்கு.
65. புதிய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? 27
66. புதிய ஏற்பாட்டு நூல்களில் வரலாற்று நூல்கள் எத்தனை? 5
67. புதிய ஏற்பாட்டு நூல்களில் வரலாற்று நூல்கள் யாவை? மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், திருத்தூதர் பணிகள்
68. புதிய ஏற்பாட்டு நூல்களில் போதனை நூல்கள் எத்தனை? 21
69. புதிய ஏற்பாட்டு நூல்களில் போதனை நூல்கள் யாவை? உரோமையர், 1, 2 கொரிந்தியர், கலாத்தியர். பேசியர். பிலிப்பியர், கொலோசையர், 1, 2, தெசலோனிக்கர், 1, 2 திமொத்தேயு, கீத்து, பிலமோன், எபிரேயர், யாக்கோபு, 1, 2 பேதுரு, 1, 2, 3 யோவான், யூதா.
70. புனித பவுல் எழுதிய 14 திருமுகங்கள் யாவை? உரோமையர், 1, 2 கொரிந்தியர், கலாத்தியர். பேசியர். பிலிப்பியர், கொலோசையர், 1, 2, தெசலோனிக்கர், 1, 2 திமொத்தேயு, கீத்து, பிலமோன், எபிரேயர்
71. பொதுத்திருமுகங்கள் 7 யாவை? யாக்கோபு, 1, 2 பேதுரு, 1, 2, 3 யோவான், யூதா.

www.malankaralibrary.com

72. புதிய ஏற்பாட்டு நூல்களில் இறைவாக்கு நூல் எனப்படுவது யாது? திருவெளிப்பாடு.

73. "ஆண்டவரே நாங்கள் எங்கு போவோம்? **நிலைவாழ்வு** அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன" (யோவான் 6:68),

## பாடம் 2

## திருவிவிலியம் - கிறிஸ்தவ வாழ்வில்

பயிற்சி வினாக்கள்

1. திருவிவிலியத்திற்கும் ஆராதனைமுறைக்கும் உள்ள தொடர்பு யாது?

கிறிஸ்தவ வாழ்வு திருச்சபையின் திருவழிபாட்டு முறையோடு வேறுபடுத்த இயலாதவாறு ஒன்றுபட்டிருக்கிறது. விசுவாசிகளின் ஆன்மீக வாழ்வுக்கு திருச்சபையின் திருவழிபாட்டு முறை மிகவும் இன்றியமையாததாகும். திருச்சபையின் அதிகாரப் பூர்வமான செபங்கள், அருள்குறிகள், அருட்கொண்டாட்டங்கள், ஆண்டவரின் திருநாள்கள், வேளைச் செபங்கள் போன்றவை அனைத்தும் திருவழிபாட்டு முறைக்குட்பட்டதாகும். திருச்சபையின் திருவழிபாட்டு முறைகளில் உள்ள செபங்களனைத்தும் விவிலிய நிகழ்ச்சிகளின் விளக்கமாகவோ அல்லது விவிலிய வார்த்தைகள் நேரடியாக பயன்படுத்துவதாகவோ அமைந்துள்ளன. திருவழிபாட்டு முறையில் முக்கியமாக விவிலியத்தில் கூறப்பட்டிருக்கும் மீட்பின் வரலாற்றின் நினைவு கூர்தலே செயல்படுத்தப்படுகிறது. ஆகையால் திருவழிபாட்டு முறையும் விவிலியமும் ஒன்றுக்கொன்று வேறுபடுத்த இயலாதது ஆகும்.

திருச்சபையின் திருவழிபாட்டு முறையில் வார்த்தை வழிபாடு என்ற ஒரு பகுதி காணப்படுகிறது. இதில் திருவிவிலியத்திலுள்ள வாசகங்களே வாசிக்கப்படுகின்றன. ஒவ்வொரு திருவழிபாட்டிலும் அந்த சூழலுக்கு ஏற்ப பழைய ஏற்பாட்டிலிருந்தும், புதிய ஏற்பாட்டிலிருந்தும் வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன. திருவழிபாட்டு முறையின் வாயிலாக விசுவாசிகள் இறைவார்த்தையைக் கேட்டு அதனை செபத்தின் ஒரு பகுதியாக மாற்றுகிறார்கள். இவ்வாறு திருவிவிலியம் திருவழிபாட்டு முறையோடும், கிறிஸ்தவ வாழ்வோடும் வேறுபடுத்த இயலாதவாறு ஒன்றுபட்டிருக்கிறது.

2. திருவிவிலியத்தில் இயேசுவின் பிரசன்னத்தைக் குறித்த திருச்சபையின் கண்ணோட்டத்தை விளக்குக?

கடவுளின் ஏவுதல் பெற்ற மனித ஆசிரியர்கள் எழுதியதே திருவிவிலியம். அதனால் விவிலியத்தை இறைபிரசன்னம் உடையதாக திருச்சபை ஏற்றுக்கொண்டு மதிப்பு அளிக்கிறது.

முதல் கிறிஸ்தவர்கள் திருப்பலியில் இயேசுவின் பிரசன்னத்தை அனுபவித்து உணர்ந்திருந்தனர். அதுபோன்று திருவிவிலிய வார்த்தைகளிலும் இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்தனர். திருப்பலியின் முதல் பகுதி வார்த்தை வழிபாடும், இரண்டாம் பகுதி அனாஃபெறா அதாவது நற்கருணை மன்றாட்டும் ஆகும். இந்த இரண்டு பகுதிகளிலும் இயேசுவின் மீட்பின் பிரசன்னத்தை முதல் கிறிஸ்தவர்கள் அனுபவித்திருந்தனர். அதாவது வார்த்தை வடிவத்திலும், அப்பத்தின் வடிவத்திலும் இயேசுவின் பிரசன்னத்தை முதல் கிறிஸ்தவர்கள் புரிந்து கொண்டனர்.

இறைவன் வெவ்வேறு வழிகளில் மனிதனுக்குத் தன்னை வெளிப்படுத்தினார். இதில் முதன்மையானது அருளடையாளங்களும் திருவிவிலியமும் ஆகும். இறை அன்பின் தொடுதலே அருளடையாளங்கள். ஆனால், இறை அன்பின் வார்த்தைகளே திருவிவிலியம். அருளடையாளங்கள் வழியாக நாம் இறைவனை அனுபவிக்கின்றோம். இறைவார்த்தைகள் வாயிலாக நாம் இறைவனின் குரலைக் கேட்கின்றோம். இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் திருவிவிலியத்திற்கும், திருப்பலிக்கும் உள்ள உறவைப் பற்றி விளக்குகின்றது. இவை இரண்டும் இயேசு என்னும் நபருடன் இணை பிரியா நிலையில் உள்ளன. மேலும் இவை இறைமக்களுக்கு ஆன்மீக உணவைத் தருகின்றன. இயேசுவின் திரு உடலை வணங்குவதைப் போன்று திருவிவிலியத்தையும் திருச்சபை வணங்குகின்றது. திருப்பலியில் நற்செய்தி பீடத்திலிருந்து வாழ்வின் வார்த்தையும் பலிபீடத்திலிருந்து வாழ்வின் அப்பமும் ஒன்றுபோல் விசுவாசிகளுக்குக் கிடைக்கிறது என்று இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் இறை வெளிப்பாடு என்னும் கொள்கைத்திரட்டு குறிப்பிடுகின்றது.

கி.பி. 431-ல் நடைபெற்ற எபேசு திருச்சங்கத்தில் திருவிவிலியம் மிகவும் ஆடம்பரமாகக் கொண்டு வந்து திருச்சங்கம் நடைபெற்ற இடத்தில் வைக்கப்பட்டது. இயேசு நம் வார்த்தை வழியாக திருச்சங்கத்தை வழிநடத்தினார். பறைசாற்றப்படும் வார்த்தைகள் திருப்பலிபீடத்தில் வைத்து திருவழிபாட்டு செலுத்தப்பட வேண்டும் என்று திருப்பலியின் ஒழுங்குமுறைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. திருவிவிலியத்திலுள்ள இயேசுவின் பிரசன்னத்தை பலிபீடத்திலுள்ள இயேசுவின் அருளடையாள பிரசன்னத்தைப் போன்று தூபம் காட்டி திருச்சபை

www.malankaralibrary.com

ஆராதிக்கிறது. திருப்பலியின் இடையில் குருவும் திருத்தொண்டர்களும் திருவிவிலியத்தை முத்தம் செய்து விவிலியத்திலுள்ள இயேசுவின் பிரசன்னத்தை ஆதரிக்கின்றனர். திருவழிபாட்டின் வேளையில் விவிலியம் வாசிக்கும்போது இயேசுவின் பிரசன்னம் உள்ளது போன்று நம் வாழ்வில் எவ்வேளையில் திருவிவிலியம் வாசித்தாலும் தியானித்தாலும் இயேசுவின் பிரசன்னம் உணர முடிகின்றது.

3. அனுதின வாழ்வில் திருவிவிலியம் வாசிப்பதன் தேவை யாது?

இறைவனுடன் ஆழமான உறவு கொள்ள உதவும் மிகச் சிறந்த வழி அனுதினம் நாம் விவிலியம் வாசிப்பதாகும். நாம் ஏதேனும் பிரச்சனைகளில் உட்படும்போது கவலைகொள்ளும் போதும் மட்டுமல்ல விவிலியம் வாசிக்க வேண்டியது. இறைவன் நம்மிடம் வைத்துக்கொள்ள விரும்பும் உறவு ஒரு சுருங்கிய நிமிட உறவு அன்று. மாறாக நமது வாழ்க்கையில் ஏற்படும் இன்பத்திலும் துன்பத்திலும் அவர் நம்முடன் உறவு வைத்துக்கொள்ள விரும்புகிறார். ஒருநாளில் 1440 நிமிடங்கள் உள்ளன. இதில் 10 நிமிட நேரமாவது நாம் விவிலியம் வாசித்தலின் வழியாக இறைவனுடன் உறவு கொள்ள முடிந்தால் நம்மில் மகிழ்ச்சி உண்டாகும். மனமாற்றம் உருவாகும். இதன்வழியாக இறைவனுடன் ஒன்றுபட்டிருக்கவும் அதுபோன்று இறைவார்த்தை நம் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறவும் செய்கிறது.

திருவிவிலியத்தை தனிநபராகவும், சமூகமாகவும் வாசிக்க இயலும். நம் இல்லங்களில் ஒவ்வொரு நாளும் மாலை மன்றாட்டின் போது சமூகமாக திருவிவிலியம் வாசிக்கப்படுகிறது. இது குடும்ப திருவழிபாட்டின் ஒரு பகுதியாகும். தனிநபராக விவிலியம் வாசிப்பது மிகுந்த ஆசீர் வாய்ந்த ஒன்றாகும். இதன் வழியாக ஒவ்வொரு நாளும் நம்மோடு பேசவும் நாம் இறைவனோடு உறவாடவும் முடிகிறது.

4. திருவிவிலியம் வாசிக்கும்போது தூயஆவி எவ்வாறு செயல்படுகிறார்?

திருவிவிலியம் வாசிக்கும்போது அவ்வார்த்தை நம்மில் பலனுள்ளதாக மாற்றப்படுவது தூய ஆவியின் செயல் என்றும், இறைவார்த்தை என்னும் நிலையில் நாம் வாசிக்கும் போது தூய ஆவி நம்மில் செயல்படுகிறார். இறைவனோடு உண்மையான பற்றுறுதி உருவாகவும், உறவாடவும் இறைவார்த்தை வாசிக்கும் போது நாம் தூய ஆவியோடு சிறப்பாக மன்றாட வேண்டும்.

இறைவார்த்தை வாசிக்கும் போது பல்வேறு வழிகளில் தூய ஆவி நம்மில் செயல்படுகிறார். முதலாவதாக : திருவிவிலியம் இறைவார்த்தை என்ற நிலையில் வாசிப்பதற்காக தூய ஆவி நம்மை வலிமைப்படுத்துகிறார். இதன் வழியாக திருவிவிலியத்தை வாசிக்கும் போதும், புரிந்து கொள்ளும்போதும் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அனுபவப்படும். இரண்டாவதாக, திருவிவிலியத்தின் தெய்வீக அர்த்தங்களைப் புரிந்துகொள்ள தூய ஆவி துணைபுரிகிறது. தூய ஆவி நம் உள்ளத்தைத் திறந்து இறைவார்த்தை தனிப்பட்ட முறையில் நம்மோடு சொல்ல வேண்டியதைத் தெளிவுபடுத்துகிறது. மூன்றாவதாக, இறைவார்த்தையோடுள்ள நமது மறுமொழியைத் தூய ஆவி தூண்டுகிறது. நாம் வாசிக்கும் இறைவார்த்தைக்கு என்ன பதிலுரைக்க வேண்டும், எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும், நமது வாழ்க்கைக்கு என்ன மாறுதல் ஏற்படுத்த வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு தூய ஆவி நமக்குத் துணைபுரிகிறது.

தூய ஆவியோடு சேர்ந்து திருவிவிலியம் வாசிக்கும்போது நம்மால் ஒன்றும் செய்யாமல் இருக்க முடியாது. ஏதேனும் முறையில் நாம் கடவுளின் ஆவிக்கு பதிலளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். சிலவேளையில் கடவுளுடன் ஆழமான ஓர் உறவை ஏற்படுத்திக்கொண்டு நாம் பதிலுரைக்க வேண்டும். அனுதின வாழ்வில் இயேசுவைப் பின்செல்லும் அனுபவம் கிடைக்க வேண்டுமெனில் தூய ஆவியின் தூண்டுதலால் இறைவார்த்தை வாசிக்க வேண்டும். அவ்வாறு இறைவார்த்தை நம்மில் வாழ்கின்ற உண்மையாக்கிடவும் நமது உள்ளத்தையும் சிந்தனைகளையும் ஒளிரச்செய்யவும் செய்கின்ற, ஆண்டவர் நமக்கு வழங்கிய கொடையே தூய ஆவியார். ஆண்டவரின் கொடையான தூய ஆவிக்காக நாம் மன்றாட வேண்டும். இறைவார்த்தை வாசித்து அதற்கேற்ப வாழும்போது இறைவாழ்வு நம்மில் ஒளிர்கின்றது.

குறு வினா விடைகள்

1. திருவிவிலியத்தின் மறுபெயர்கள் யாவை? பரிசுத்த வேதாகமம், மறைநூல், திருநூல்
2. இறைவனை அறிந்து கொள்ளவும், தெய்வீக மறையுண்மைகளின் ஆழத்தை அறிந்து கொள்ளவும் அடித்தளமாக அமைவது எது? திருவிவிலியம்
3. திருநூலை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன் என்ற திருச்சங்கம் எது? இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம்

4. திருச்சபையின் திருவழிபாட்டு முறைகளில் உள்ள செபங்களனைத்தும் எதனை பயன்படுத்துவதாகவோ அமைந்துள்ளன? விவிலியத்தை
5. திருவழிபாட்டு முறையில் திருவிவிலிய வாசகங்கள் வாசிக்கப்படுகின்ற பகுதிக்குப் பெயர் என்ன? இறைவார்த்தை வழிபாடு
6. திருவழிபாட்டுடன் வேறுபடுத்த இயலாதது எது? விவிலியம்
7. திருவிவிலியத்திலுள்ள இயேசுவின் பிரசன்னத்தை பலிபீடத்திலுள்ள இயேசுவின் அருளடையாள பிரசன்னத்தைப் போன்று திருச்சபை எவ்வாறு ஆராதிக்கிறது? தூபம் காட்டி
8. திருப்பலியின் இடையில் குருவும் திருத்தொண்டர்களும் திருவிவிலியத்திலுள்ள இயேசுவின் பிரசன்னத்தை எவ்வாறு ஆதரிக்கின்றனர்? முத்தம் செய்து.
9. திருப்பலியில் நற்செய்தி பீடத்திலிருந்து வாழ்வின் வார்த்தையும் பலிபீடத்திலிருந்து வாழ்வின் அப்பமும் ஒன்றுபோல் விசுவாசிகளுக்குக் கிடைக்கிறது என்ற திருச்சங்கம் எது? இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம்
10. எந்த திருச்சங்கத்தின் போது திருவிவிலியம் மிகவும் ஆடம்பரமாகக் கொண்டு வரப்பட்டது? எபேசு திருச்சங்கத்தில்
11. எதனை பக்தியுடன் வாசிக்கும் போது இறைவன் நம்மோடு பேசவும், தமது பிரசன்னத்தால் நம்மை உறுதிபடுத்தவும் நமது வாழ்வைப் புதுப்பிக்கவும் செய்கின்றார்? திருவிவிலியம்
12. திருவிவிலியம் வாசிக்கும்போது அவ்வார்த்தை நம்மில் பலனுள்ளதாக மாற்றப்படுவது யாருடைய செயல் ஆகும்? தூய ஆவியின்
13. இறைவார்த்தை என்னும் நிலையில் நாம் திருவிவிலியம் வாசிக்கும் போது நம்மில் செயல்படுபவர் யார்? தூய ஆவி
14. இறைவார்த்தை வாசிக்கும் போது பல்வேறு வழிகளில் தூய ஆவி எவ்வாறு நம்மில் செயல்படுகிறார்? 1. தூய ஆவி நம்மை வலிமைப்படுத்துகிறார். இரண்டாவதாக, 2. தெய்வீக அர்த்தங்களைப் புரிந்துகொள்ள துணைபுரிகிறார் 3. இறைவார்த்தையோடுள்ள நமது மறுமொழியைத் தூண்டுகிறார்
15. "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது. இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த **வாளினும்** கூர்மையானது. **ஆன்மாவையும்**, ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது" (எபிரேயர் 4:12)
16. "நின்வார்த்தைகளென் காலடியதனின் சுடர்விளக்காகும் **வெய்யோன்** சுடரில் நடப்பது போல்தான் நடந்திடுவேனே" (திங்கள் மாலை மன்றாட்டு)

பாடம் 3

மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் திருவழிபாட்டு முறை

பயிற்சி வினாக்கள்

1. தொடக்கத் திருச்சபையில் வளர்ந்து வந்த திருவழிபாட்டு முறைகளைக் குறித்து குறிப்பு வரைக?

கத்தோலிக்கத் திருச்சபையில் 24 தனித்திருச்சபைகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் தனிப்பட்ட திருவழிபாட்டு முறைகளைக் கொண்டுள்ளன. இன்றைய திருவழிபாட்டு முறைகளனைத்தும் பழமையான மூன்று கத்தோலிக்க ஆராதனை மரபில் நின்று வளர்ந்து வந்தவை ஆகும்.

உரோமை மையமாகக் கொண்டு இலத்தீன் திருவழிபாட்டு முறையும், கான் ஸ் தாந்தி நோபிளை மையமாகக் கொண்டு கிரேக்க திருவழிபாட்டு முறையும், செலூஷ்யா ஸ்டே ஸிபோன் (மெசபொத்தாமியா), பார்சீகம் அந்தியோக்கியா போன்ற இடங்களை மையமாகக் கொண்டு சுறியானி திருவழிபாட்டு முறையும் வளர்ந்து வந்தது. இலத்தீன், கிரேக்க மரபுகள் உரோமைப் பேரரசிலும், சுறியானி மரபு பாரசீக பேரரசிலும் வளர்ந்து வந்தது. நாளடைவில் ஆறு திருவழிபாட்டு முறைகள் திருச்சபையில் வந்தன. உரோமைப் பேரரசு கிழக்கத்தியநாடு என்றும் மேற்கத்தியநாடு என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

மேற்கத்திய உரோமைப் பேரரசில் இலத்தீன் திருவழிபாட்டு முறையும், கிழக்கத்திய உரோமைப் பேரரசில் அந்தியோக்கியன், அலக்சான்ட்ரியன், அர்மேனியன், பைசன்டெயின் போன்ற திருவழிபாட்டு முறைகளும், பாரசீக பேரரசில் கல்தேயா சுறியானி திருவழிபாட்டு முறையும் வளர்ந்து வந்தது. சுருங்கக்கூறின் இன்று திருச்சபையில் உள்ள எல்லா திருவழிபாட்டு

முறைகளும் இந்த ஆறு ஆராதனைக் குடும்பத்திலிருந்து தோன்றியவை ஆகும். இந்தியக் கத்தோலிக்கத் திருச்சபையில் மூன்று திருவழிபாட்டு முறைகள் உள்ளன. இலத்தீன் கத்தோலிக்கர்கள் இலத்தீன் திருவழிபாட்டு முறையையும், சீறோ மலபார் கத்தோலிக்கர்கள் கல்தேயா சுறியானி திருவழிபாட்டு முறையையும், மலங்கரைக் கத்தோலிக்கர்கள் அந்தியோக்கியன் சுறியானி திருவழிபாட்டு முறையையும் பயன்படுத்தி வருகின்றனர்.

2. அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறையின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் விளக்குக?

இந்தியாவிலுள்ள மலங்கரைக் கத்தோலிக்கத் திருச்சபை அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறையையே பயன்படுத்தி வருகிறது. இந்த திருவழிபாட்டு முறையின் தோற்றம் எருசலேமிலாகும். ஆனால் கி.பி. 70-ஆம் நூற்றாண்டில் எருசலேம் தகர்க்கப்பட்ட போது திருச்சபையின் மையமாக அந்தியோக்கியா வளர்ந்து வந்தது. எனவே அந்த திருவழிபாட்டு முறை நாளடைவில் அந்த இடத்தின் பெயரில் அறியப்படலாயிற்று. இன்று பல திருச்சபைகளும் இந்த திருவழிபாட்டு முறையை பயன்படுத்துகின்றன. அந்தியோக்கியாவிலுள்ள சிறியன் ஆர்த்தடோக்ஸ் திருச்சபை. சிறியன் கத்தோலிக்கத் திருச்சபை, மலங்கரை யாக்கோபாயத் திருச்சபை, மலங்கரை ஆத்தடோக்ஸ் திருச்சபை, மலங்கரை மார்த்தோமா திருச்சபை, மலங்கரைக் கத்தோலிக்கத் திருச்சபை ஆகிய திருச்சபைகள் இந்த திருவழிபாட்டு முறையையே பயன்படுத்துகின்றன.

1653-ஆம் ஆண்டில் கூனன்குரிசு சபதம் ஏற்பட்டதன் பலனாக இந்தியாத் திருச்சபை இரண்டாகப் பிரிந்தது. 'புத்தன்கூர்' என்னும் பிரிவினையைச் சார்ந்த மக்கள் அந்தியோக்கியாவிலுள்ள யாக்கோபாயத் திருச்சபையுடன் தொடர்புகொண்டு விளைவாக அவ்விடத்தில் உள்ள ஆயர்களின் வழியாக அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறை இங்கு வளர்ந்து வந்தது.

3. மலங்கரை திருவழிபாட்டு முறையின் மறைபொருள் தன்மையைக் குறித்து விளக்குக?

அந்தியோக்கியன் முறையில் திருப்பலியை புனித மறைபொருள் (Holy Mystery) என்று கூறுவர். அதாவது மனித அறிவால் முழுமையாக புரிந்துகொள்ள முடியாதது என்பதே திருப்பலியின் பொருள். இறைவனின் முன்னிலையில் நெருப்பை அணிந்திருக்கும் தூதர்கள் நடுங்குகின்றார்கள் என்றும் அவர்கள் தங்கள் சிறகால் முகத்தை மறைத்துக்கொண்டு இறைவனின் திருமுன்னில் நிற்கின்றார்கள் என்றும் மன்றாட்டுக்களின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது. மனிதனின் கண்களுக்கும் அறிவுக்கும் இறைவனின் பிரசன்னத்தை நேரடியாக காணவும் புரிந்து கொள்ளவும் ஆற்றல் இல்லாமையால் இறைபிரசன்னம் ஒரு மறையுண்மையாகவே இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த மறைபொருள் தன்மை பல மறைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, ஆராதனையிலுள்ள மென்குரல் செபங்கள் தூயகம் திரையால் மறைக்கப்படுதல், திரையின் உள்ளே நடைபெறும் திருச்சடங்குகள் திருப்பலியில் இறைவனின் திருஉடலையும், திருஇரத்தத்தையும் விசுவாசிகளை நேரடியாகக் காண்பிக்காமல் எப்போதும் மூடிவைத்திருப்பது இவையனைத்தும் மறைபொருள் தன்மையைக் குறிக்கின்றன.

4. அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறை இசைமயமானது விளக்குக?

அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறை பாடல் வடிவம் கொண்டது. ஆராதனையில் பாடல்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. எல்லா அருளடையாளங்களுக்கும், திருநாட்களுக்கும், மன்றாட்டுகளுக்கும் தனிப்பட்ட பாடல்கள் உள்ளன. திருவழிபாட்டு முறையிலுள்ள மன்றாட்டுகளனைத்தும் கவிதை மரபு உடையதும் இசை மெட்டுக்களில் பாட இயல்வதும் ஆகும். இந்த திருவழிபாட்டு முறையிலுள்ள பாடல்களும் மன்றாட்டுகளில் உள்ள இசைத்தன்மையும் விசுவாசியை ஆன்மீக அனுபவத்திற்கு இட்டுச்செல்கிறது. மறையுரையைத் தவிர இசைவடிவம் இல்லாத எந்த செபமும் இந்த திருவழிபாட்டு முறையில் இல்லை. பாடல்கள் இல்லாத திருச்சடங்குகள் இந்த திருவழிபாட்டு முறையில் இல்லை. பாடல்களைக் கேட்பதும் பாடுவதும் ஒன்றுபோல் ஆன்மீக உணர்வை வளர்க்கிறது. ஒருமுறை பாடுபவன் இரண்டுமுறை செபிக்கிறான் என்னும் சிந்தனை திருவழிபாட்டு முறையிலுள்ள பாடலின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறையிலுள்ள பாடல்களை அதிகமாக எழுதியவர்கள் மார் எப்ஃரேம், மார் யாக்கோபு, மார் பாலாய் போன்ற தந்தையர்களாவர்.

சுறியானி பாடல்கள் எட்டு மெட்டுகளில் பாடும்பொருட்டு இசை அமைத்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு திருச்சடங்குகளினுடையவும் தனிச் சூழலை வெளிப்படுத்த இந்த எட்டு மெட்டுகளும் துணைபுரிகின்றன. இந்த ஆராதனை முறையிலுள்ள மன்றாட்டுக்களையெல்லாம் பல்வேறு மெட்டுகளிலும், முறைகளிலும் சொல்லுவது இதன்

www.malankaralibrary.com

தனித்தன்மை ஆகும். மன்றாட்டுக்களை சாதாரணமாகச் சொல்லும் முறை இந்த ஆராதனை முறையில் இல்லை.

5. மீட்பின் மறையுண்மைகளின் நினைவுகூர்தலே திருப்பலி என்பதன் வழியாகப் பொருள்கொள்வது என்ன?

இறைவனின் மீட்பின் வரலாற்றுடன் இந்த ஆராதனை முறைக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. திருப்பலி முழுவதும் மீட்பின் மறையுண்மைகள் அதாவது மீட்பு நிகழ்வுகளில் நினைவுகூர்தல் ஆகும். உலகப் படைப்பு முதல் இயேசுவின் இரண்டாம் வருகை வரையிலான மீட்பு நிகழ்வுகளனைத்தும் திருப்பலியில் நினைவு கூரப்படுகிறது. பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள், மீட்பின் பிறப்பு, திருமுழுக்கு, பகிரங்க வாழ்வு, பாடுகள், சிலவை மரணம், கல்லறை அடக்கம், உயிர்ப்பு, விண்ணேற்றம், தந்தைக்கடவுளின் வலப்பக்க வாழ்வு, இரண்டாம் வருகை ஆகியவையனைத்தும் திருப்பலியில் நினைவுகூரப்படுகிறது. அதுபோன்று ஒருவருடத்தில் ஆராதனைமுறை ஆண்டுவட்டம் வழியாக இயேசுவின் நிகழ்வுகளனைத்தையும் திருச்சபை நினைவு கூர்கின்றது.

**குறு வினா விடைகள்**

1. கத்தோலிக்கத் திருச்சபையில் எத்தனை தனித்திருச்சபைகள் உள்ளன? 24
2. உரோமை மையமாகக் கொண்டு வளர்ந்த திருவழிபாட்டு மரபு எது? இலத்தீன் திருவழிபாட்டு மரபு
3. கான்ஸ்தாந்திநோபிளை மையமாகக் கொண்டு வளர்ந்த திருவழிபாட்டு மரபு எது? கிரேக்க திருவழிபாட்டு மரபு
4. செலூஷ்யா ஸ்டேஸிபோன் (மெசபொத்தாமியா), பார்சீகம் அந்தியோக்கியா போன்ற இடங்களை மையமாகக் கொண்டு வளர்ந்த திருவழிபாட்டு மரபு எது? சுறியானி திருவழிபாட்டு மரபு
5. உரோமைப் பேரரசில் வளர்ந்த திருவழிபாட்டு மரபுகள் எவை? இலத்தீன், கிரேக்க திருவழிபாட்டு மரபுகள்
6. பாரசீக பேரரசில் வளர்ந்து வந்த திருவழிபாட்டு மரபு எது? சுறியானி மரபு
7. முதல் மூன்று திருவழிபாட்டு மரபுகள் நாளடைவில் எத்தனை திருவழிபாட்டு மரபுகளாக திருச்சபையில் வளர்ந்தன? ஆறு
8. உரோமைப் பேரரசு எவ்வாறு இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது? கிழக்குநாடுகள் என்றும் மேற்குநாடுகள்
9. மேற்கத்திய உரோமைப் பேரரசில் வளர்ந்த திருவழிபாட்டு மரபு எது? இலத்தீன் திருவழிபாடு
10. கிழக்கத்திய உரோமைப் பேரரசில் வளர்ந்த திருவழிபாட்டு மரபுகள் எவை? அந்தியோக்கியன், அலக்சான்ட்ரியன், அர்மேனியன், பைசன்டெயின்
11. நாளடைவில் பாரசீக பேரரசில் வளர்ந்த திருவழிபாட்டு மரபு எது? கல்தேயா சுறியானி திருவழிபாட்டு முறை
12. இன்றைய திருச்சபையின் 24 திருவழிபாட்டு முறைகளும் அடங்கும் ஆறு திருவழிபாட்டு மரபுகள் எவை? இலத்தீன், அந்தியோக்கியன், அலக்சான்ட்ரியன், அர்மேனியன், பைசன்டெயின், கல்தேயா
13. இந்தியக் கத்தோலிக்கத் திருச்சபையினரின் மூன்று திருவழிபாட்டு மரபுகள் யாவை? இலத்தீன் திருவழிபாடு, கல்தேயா சுறியானி திருவழிபாடு, அந்தியோக்கியன் சுறியானி திருவழிபாடு
14. அந்தியோக்கியன் திருவழிபாட்டு மரபை பயன்படுத்தும் இந்திய கத்தோலிக்க திருச்சபை எது? மலங்கரைக் கத்தோலிக்கத் திருச்சபை
15. அந்தியோக்கியன் திருவழிபாட்டு மரபு எங்கே தோன்றியது? எருசலேம்
16. கி.பி. 70-ஆம் நூற்றாண்டில் எருசலேம் தகர்க்கப்பட்ட போது திருச்சபையின் மையமாக வளர்ந்து வந்த இடம் எது? அந்தியோக்கியா
17. அந்தியோக்கியன் திருவழிபாட்டு மரபை பயன்படுத்தும் திருச்சபைகள் யாவை? அந்தியோக்கியாவின் சிறியன் ஆர்த்தடோக்ஸ் திருச்சபை. சிறியன் கத்தோலிக்கத்

www.malankaralibrary.com

திருச்சபை, மலங்கரை யாக்கோபாயத் திருச்சபை, மலங்கரை ஆர்த்தடோக்ஸ் திருச்சபை, மலங்கரை மார்த்தோமா திருச்சபை, மலங்கரைக் கத்தோலிக்கத் திருச்சபை

18. 1653 ல் 'புத்தன்கூர்' பிரிவினரின் அந்தியோக்கிய யாக்கோபாய திருச்சபையுடன் தொடர்பின் விளைவாக இந்தியாவில் புகுந்த திருவழிபாட்டு மரபு எது? அந்தியோக்கியன் திருவழிபாட்டு மரபு
19. அந்தியோக்கியன் திருவழிபாட்டு மரபுக்கு மறுபெயர் என்ன? மேற்கத்திய சுறியானி திருவழிபாட்டு முறை
20. பழைய சிரியாவின் தலைநகராக விளங்கிய இடம் எது? அந்தியோக்கியா
21. யாக்கோபின் மன்றாட்டு என்னும் எருசலேமிலுள்ள சிறப்புமிக்க திருப்பலி தக்ஸாவை பயன்படுத்தியவர்கள் யாவர்? அந்தியோக்கியன் கிறிஸ்தவ சமூகத்தினர்
22. அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறை கிரேக்க மொழியில் உருவானது எப்போது? மூன்றாம் நூற்றாண்டு முதல்
23. கிரேக்க மொழியிலிருந்து பின்னர் எம்மொழியில் அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறை வளர்ந்து வந்தது? சுறியானி மொழியில்
24. எருசலேமில் தோன்றிய அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறை யாருடைய பின்னணியில் தோன்றியவை? யூதக் கிறிஸ்தவர்கள்
25. யூதர்களின் சடங்கு முறைகளும் அடையாளங்களும் எந்த திருவழிபாட்டு முறையில் காணப்படுகின்றன? அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறை
26. அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறையில் பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளை புதிய ஏற்பாட்டுடன் தொடர்புபடுத்துகின்றதான செபங்களும், பாடல்களும் கொண்டது ஏன்? பழைய ஏற்பாட்டு பலிகள் மற்றும் காணிக்கைகளின் முழுமை புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவின் வழியாக நிறைவடைந்தது.
27. அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறையில் பயன்படுத்தப்படும் அடையாளங்களும் நிகழ்ச்சிகளும் எவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்? விவிலியத்தை
28. அந்தியோக்கியன் முறையில் **திருப்பலியை** புனித மறைபொருள் (Holy Mystery) என்று கூறுவர்.
29. திருப்பலியை புனித மறைபொருள் (Holy Mystery) என்பது ஏன்? மனித அறிவால் முழுமையாக புரிந்துகொள்ள முடியாதது
30. திருப்பலியின் மறைபொருள் தன்மையைக் காட்டும் செயல்கள் எவை? மென்குரல் செபங்கள், தூயகம் திரையால் மறைக்கப்படுதல், திரையின் உள்ளே நடைபெறும் திருச்சடங்குகள், திருப்பலியில் இறைவனின் திருஉடலையும், திருஇரத்தத்தையும் விசுவாசிகளை நேரடியாகக் காண்பிக்காமல் எப்போதும் மூடிவைத்திருப்பது
31. சாதாரணமாக வார்த்தைகளால் முழுவதுமாக எடுத்துக்கூற முடியாததான இறைசெயல்களை மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துரைக்க பயன்படுத்தும் கருவிகளுக்கு பெயர் என்ன? அடையாளங்கள்.
32. இயேசுவின் உயிர்ப்புக்கு பின் கொல்கொதாவில் உள்ள சிலுவை 40 நாட்களுக்கு சிவப்புத்துணியால் மூடுவதன் அர்த்தம் என்ன? உயிர்த்தெழுந்த இயேசுவின் பிரசன்னம்
33. திருச்சபையின் விசுவாச உண்மைகளை எம்மன்றாட்டுகளின் வாயிலாக விசுவாசிகளுக்கு எடுத்துரைக்கப்படுகிறது? ப்றுமியோன் செதறா மன்றாட்டுகள்
34. அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறையிலுள்ள பாடல்களை அதிகமாக எழுதியவர்கள் யாவர்? மார் எப்ஃரேம், மார் யாக்கோபு, மார் பாலாய்
35. சுறியானி பாடல்கள் எத்தனை மெட்டுகளில் பாடும்படி இசை அமைக்கப்பட்டுள்ளது? எட்டு
36. அந்தியோக்கியன் ஆராதனை முறையில் தூப அர்ப்பணத்தின் மூன்று அர்த்தங்கள் எவை? தூப அர்ப்பணம் வழியாக ஆராதனை சமூகம் முழுவதும் தூய்மையாக்கப்படுகிறது. விசுவாசிகளின் உள்ளிருந்து இறைவனின் திருமுன்னில் செல்கின்ற மன்றாட்டுக்களை தூபம் குறிப்பிடுகிறது. ஒரு நபரையோ, பொருளையோ ஏற்றுக்கொள்வதனுடையவும், மதிப்பளிப்பதனுடையவும் அடையாளமாக தூப அர்ப்பணத்தை புரிந்து கொள்ளலாம்.
37. திருப்பலியில் ஒருவருடத்தில் ஆராதனைமுறை ஆண்டுவட்டம் வழியாக திருச்சபை நினைவு கூர்வது என்ன? இயேசுவின் மீட்பு நிகழ்வுகள்

38. அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறையின் இறைப்புகழ்ச்சியின் தனித்தன்மை என்ன? மூவொரு கடவுளின் புகழ்

39. அடிப்படை செபமான கௌமா மன்றாட்டில் தூய இறையன்னை குறித்த மன்றாட்டு எது? "அருள் நிறைந்த மரியே" என்னும் செபம்.

40. திருப்பலியின் பகிரங்கத் திருச்சடங்கின் தொடக்கத்தில் மரியாவை நினைவு கூரும் சொற்கள் எவை? உம்மை ஈன்றெடுத்த மரியாவும் ...........

41. அந்தியோக்கியன் திருவழிபாட்டு முறையில் உள்ள எசாயா இறைவாக்கினரின் திருக்காட்சியின் அடிப்படையிலான வியப்பும் பயமும் மதிப்பும் குறிப்பிடப்படும் விவிலியப் பகுதி எது? எசாயா 6:1-13

42. "ஆண்டவரே உம்மை ஆராதிப்போரின் வேண்டுதல்களை **<u>வெகுவாஞ்சையுடன்</u>** கேட்டு, உம் திருச்சபை உமக்குச் செலுத்தும் பலிகளையும், காணிக்கைகளையும் கனிவோடு ஏற்றுக்கொண்டருளும்.

43. நாங்கள் உம்மையும் உமது ஒரே மகனையும், தூய ஆவியையும் இப்பொழுதும் எப்பொழுதும் **<u>என்றென்றும்</u>** போற்றிப் புகழ்கின்றோம்." (திருப்பலி தக்ஸா)

44. "வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாள்களிலும் உம் **<u>கோவில்முற்றங்களில்</u>** தங்கும் ஒரு நாளே மேலானது" (திருப்பாடல்கள் 84:10).

பாடம் 4

## சீறோ மலபார் திருவழிபாட்டு முறை

### பயிற்சி வினாக்கள்

1. சீறோ மலபார் திருவழிபாட்டு முறையின் தொடக்கத்தையும் வளர்ச்சியையும் குறித்து விளக்குக?

கிறிஸ்துவின் சீடரான புனித தோமையார் கி.பி. 52 ஆம் ஆண்டில் இந்தியாவில் அன்றைய தமிழகமான இன்றைய கேரளாவுக்கு வருகை தந்து கிறிஸ்துவின் நற்செய்தியை இங்கு பறை சாற்றினார். புனித தோமையாரிடமிருந்து விசுவாசம் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள் பாரசீகத் திருச்சபையுடன் அதாவது கல்தேயா திருச்சபையுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அவ்வாறு பாரசீக திருச்சபையின் திருவழிபாட்டு முறையான கிழக்கத்திய சுறியானி திருவழிபாட்டு முறை அதாவது கல்தேயா திருவழிபாட்டு முறை தொடக்க காலம் முதலே இங்குள்ள கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. சீறோமலபார் திருச்சபை புனித தோமையாரின் வருகை முதல் கத்தோலிக்க ஒன்றிப்பை பாதுகாக்கவும், தொடக்க காலம் முதல் பயன்படுத்தி வந்த கிழக்கத்திய திருவழிபாட்டு முறையை பயன்படுத்தவும் செய்கின்றது.

முதல் யூத கிறிஸ்தவ மையமான எடேசாவை மையமாகக் கொண்டு வளர்ந்துவந்த பழமையான சுறியானி திருவழிபாட்டு முறையை சீறோமலபார் திருச்சபையினர் பயன்படுத்தி வருகின்றனர். புனித தோமையாரின் சீடரும் எடேசாவின் அப்போஸ்தலருமான மார் அதாயி அவருடைய சீடரான மார் மாறி என்பவர்களின் பெயரிலேயே சீறோ மலபார் திருப்பலியின் முக்கிய நற்கருணை மன்றாட்டு அறியப்படுகிறது.

2. சீறோ மலபார் திருப்பலி எத்தனை பகுதியாக பகுக்கப்பட்டுள்ளது? அவை யாவை?

**1. தொடக்கத் திருச்சடங்கு**

திருப்பலியின் ஆரம்பம் முதல் 'அனைத்தின் ஆண்டவரே' என்ற மன்றாட்டு வரையிலான பகுதியே தொடக்கத் திருச்சடங்கு.

"அன்று பாஸ்கா திருநாளில்

ஆண்டவர் தந்த கட்டளை போல்"

என்ற பாடலுடன் அல்லது "நமக்குக் கிடைத்த கட்டளையின்படி இந்த பலியை தொடங்குவோம்" என்ற அழைப்புடன் திருப்பலி ஆரம்பமாகிறது.

இப்பகுதியில் ஆண்டவரின் கட்டளையின் நினைவுகூர்தல், பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, தூயவர் தூயவர் தூயவர் என்ற வானதூதர்களின் பாடல், திருப்பாடல்கள், தூப அர்ப்பணம் போன்றவை அடங்கியுள்ளன.

ஆண்டவரின் மனிதாவதாரம், பிறப்பு, ஆண்டவரை எதிர்பார்த்திருந்த முற்பிதாக்களின் கனவுகள் போன்றவை இப்பகுதியில் நினைவுகூரப்படுகின்றன.

**2. இறைவார்த்தைத் திருச்சடங்கு**

நாம் உரத்த குரலில் உயிருள்ள இறைவனைப் புகழ்வோம் என்ற அறிவிப்புடன் இறைவார்த்தைத் திருச்சடங்கு ஆரம்பமாகிறது. இப்பகுதியில் தூயவரான இறைவா எனத் தொடங்கும் தூய திருத்துவப் பாடல், சட்ட நூலிலிருந்து முதல் பழைய ஏற்பாட்டு வாசகம், இறைவாக்கினர் நூலிலிருந்து இரண்டாம் பழைய ஏற்பாட்டுவாசகம் மற்றும் புதிய ஏற்பாட்டு வாசகங்கள், காறோஜுசா, கைவைப்பு மன்றாட்டு போன்ற திருச்சடங்குகள் உள்ளன.

ஆண்டவரின் பகிரங்க வாழ்வு, வார்த்தை மற்றும் செயல்கள் வழியாக வாழ்க்கை போன்றவை இங்கு நினைவுகூரப்படுகிறது.

**3. ஆயத்தத் திருச்சடங்கு**

இறைவார்த்தைத் திருச்சடங்கிற்கும், நற்கருணை மன்றாட்டிற்கும் இடைப்பட்ட மன்றாட்டுக்களும் ஆராதனைகளுமே ஆயத்தத் திருச்சடங்கு என்னும் பெயரில் அறியப்படுகிறது. பலிப்பொருட்களை தயார் செய்தலும், குருவானவருடையவும், சமூகத்தினுடையவும் ஆன்மீக ஆயத்தமும் இப்பகுதியில் நடைபெறுகிறது. அப்பமும் இரசமும் தயார் செய்து பலிபீடத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. தொடர்ந்து குருவானவர் தம் கரங்களை கழுவுகிறார். புனிதப் பொருட்கள் பலிபீடத்தில் வைத்து மென்துகிலால் மூடப்படுகிறது. தொடர்ந்து நினைவுகூர்தல் மன்றாட்டு, விசுவாசப் பிரமாணம், பலிபீடத்தினுள் புகுதல் போன்ற திருச்சட்குகள் நடைபெறுகின்றன.

இப்பகுதியில் ஆண்டவரின் பாடுகள், இறப்பு, கல்லறை அடக்கம் போன்றவை நினைவுகூரப்படுகின்றன. மேலும் கன்னிமரியாள், புனித தோமையார் போன்றோரையும் நம்மை விட்டுப்பிரிந்து சென்ற அனைவரையும் இங்கு நினைவுகூருகின்றோம்.

**4. நற்கருணை மன்றாட்டு - அனாஃபொறா**

திருப்பலியின் முக்கிய பகுதியே அனாஃபொறா அல்லது நற்கருணை மன்றாட்டு. அனாஃபொறாவுக்கு நன்றி நவில் மன்றாட்டு என்ற பெயரும் உண்டு. “எங்கள் இறைவனாகிய ஆண்டவரே நாங்கள் உமக்கு நன்றி கூறுகின்றோம்” என்று தொடங்குகின்ற மன்றாட்டு முதல் “ஆண்டவரே உமது தூய ஆவியார் எழுந்தருளி வருவதாக” என்று ஆரம்பிக்கும் தூய ஆவியாரின் அழைப்பு மன்றாட்டு வரையிலான பகுதியையே அனாஃபொறா என்று அழைக்கின்றோம். இந்த பகுதியில் சமாதானம் அளித்தலும் நான்கு ககாந்த மன்றாட்டுகளும் (தலைவணங்கி நின்று நடத்தும் வேண்டுதலும் நன்றி நவில்தலும்) மீட்புச் செயல்களின் நினைவுகூர்தலும், இறுதி உணவின் விளக்கமும், பரிந்துரை மன்றாட்டுகளும் மற்றும் தூய ஆவியாரை அழைக்கும் மன்றாட்டும் அடங்கியுள்ளன.

படைப்பச்செயல் வழியாகவும், மீட்புச்செயல் வழியாகவும், தூய்மையாக்கல் வழியாகவும் இறைவன் நமக்கு அருளிய முடிவில்லா இரக்கத்தை நினைத்து இம்மன்றாட்டுக்களின் வழியாக திருச்சபை இறைவனைப் புகழ்கின்றது. நமது ஆண்டவரின் உயிர்ப்பு இப்பகுதியில் சிறப்பாக நினைவு கூரப்படுகிறது.

**5. அப்பம் பிட்குதல் திருச்சடங்கு**

திரு உடலை உயர்த்தி குருவானவர் சொல்கின்றதான மன்றாட்டுடன் அப்பம் பிட்குதல் திருச்சடங்கு ஆரம்பமாகிறது. குருவானவர் அப்பத்தை இரண்டாக பிட்டு திரு இரத்தத்துடன் இணைக்கின்றார். பின்னர் நற்கருணை ஏற்றுக்கொள்ள மக்கள் ஆயத்தமாகின்றனர். ஆண்டவரின் மறையுண்மைகளின் நிறைவை இது குறிக்கிறது. உயிர்த்தெழுந்த இயேசு சீடர்களுக்கு காட்சியளித்தபோது அவர்கள் வணங்கியது போன்று நற்கருணையில் பிரசன்னமாயிருக்கும் இயேசுவை சமூகம் வணங்குகின்றது.

**6. ஒப்புரவுத் திருச்சடங்கு**

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயும் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயும் உள்ள ஒப்புரவுக்காக மன்றாடப்படுகிறது. இப்பகுதியில் ஒப்புரவுக்காக அழைக்கும் செபங்களும் தூப அர்ப்பணவும், பாவபரிகார மன்றாட்டுகளும் நடத்தப்படுகின்றன. இங்கு விசுவாசிகள் இயேசுவைப் பெற்றுக்கொள்ள ஆன்மீகமாக ஆயத்தமாகின்றனர்.

**7. இறை ஒன்றிப்புத் திருச்சடங்கு**

நற்கருணை பெற்றுக்கொள்தலும் அதனோடு தொடர்புடைய மன்றாட்டுக்களும் இங்கு நடத்தப்படுகின்றன. ஆண்டவரின் செபம், நற்கருணை

தூபமக்களினத்தார்களுக்குடையதாகும் என்னும் அழைப்பு, குருக்களும் விசுவாசிகளும் நற்கருணை பெற்றுக்கொள்ளுதல் போன்றவை இப்பகுதியில் அடங்கியுள்ளன. நற்கருணை உட்கொள்ளுதலின் வழியாக உயிர்த்தெழுந்த இயேசுவை விசுவாசிகள் ஏற்றுக்கொண்டு அவருடைய வாழ்வில் பங்குகொள்ளவும் செய்கின்றனர்.

**8. இறுதித் திருச்சடங்கு**

கிறிஸ்துவின் திருஉடலையும் திரு இரத்தத்தையும் பெற்றுக்கொண்டு அவருடைய மீட்புச் செயலில் பங்குகொள்ளவும் அவரோடு ஒன்றிணையவம் செய்த சமூகம் இறைவனுக்கு நன்றி நவில்கின்ற பகுதியே இறுதித் திருச்சடங்கு. இப்பகுதியில் குருவானவர் மூவொரு கடவுளுக்கு நன்றி கூறி மன்றாடுகின்றார். குருவானவர் சமூகத்துக்கு இறுதி ஆசீர்வாதம் அளிக்கின்றார். சிலுவை அடையாளத்தால் குருவானவர் சமூகத்தை முத்திரையிடுகின்றார். ஆண்டவரின் இரண்டாம் வருகை, நிலைவாழ்வு ஆகியவை இங்கு நினைவுகூரப்படுகின்றன. இறுதியில் ஆண்டவரின் கல்லறையான பலிபீடத்தை முத்தம் செய்து குருவானவர் திருப்பலியை நிறைவு செய்கின்றார்.

திருப்பலியில் பங்கு கொள்வதன் வழியாக இயேசுவின் பாஸ்கா மறையுண்மை**களை (மனிதராதல் முதல் இரண்டாம் வருகை) நாம் நினைவு கூரவும் அவற்றில்** பங்குகொள்ளவும் செய்கின்றோம். தந்தை மகனிடம் ஒப்படைத்து தூய ஆவியின் வழியாக முழுமையாக்கப்பட்ட இந்த மீட்பின் அனுபவத்தில் பங்கு கொண்டு ஆண்டவரின் தூதுவர்களாக மாற நாம் தயாராகிறோம். கடவுள் மனித குலத்திற்கு வழங்கிய அருட்கொடையாகிய மெசியாவின் மீட்பு மறையுண்மைகளில் திருச்சபை மக்கள் பங்கு சேர அவரே தயாரிக்கின்ற பொன்னான நேரமே திருப்பலி. இந்த மறையுண்மைகளிலுள்ள பங்கேற்பு ஒரு அனுபவமாக மாறும் வகையில் சீறோ மலபார் திருச்சபையின் திருப்பலி அமைக்கப்பட்டுள்ளது. திருவிவிலியத்தின் உள்ளுணர்வும் பாணிகளும் நிறைந்து நிற்கும் செபங்கள் மற்றும் செயல்கள் வாயிலாக மெசியா மறையுண்மைகளை தொட்டு அறிந்து உலகத்தில் அவற்றின் தூதுவர்களாக மாற ஒவ்வொரு விசுவாசிக்கும் இது உதவுகிறது.

**குறுவினா விடைகள்**

1. புனித தோமையாரிடமிருந்து விசுவாசம் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள் தொடர்பு கொண்டிருந்த பாரசீகத் திருச்சபையின் திருவழிபாட்டு முறை எது? கிழக்கு சுறியானி திருவழிபாடு அல்லது கல்தேயா திருவழிபாட்டு முறை
2. சீறோமலபார் திருச்சபையினர் பயன்படுத்தும் பழமையான சுறியானி திருவழிபாட்டு முறை எங்கே வளர்ந்து வந்தது? முதல் யூத கிறிஸ்தவ மையமான எடேசா
3. எடேசாவின் அப்போஸ்தலரும் புனித தோமாவின் சீடருமானவர் யார்? மார் அதாயி
4. மார் அதாயியின் சீடர் யார்? மார் மாறி
5. சீறோ மலபார் திருப்பலியின் முக்கிய நற்கருணை மன்றாட்டு எப்பெயரால் அறியப்படுகிறது? மார் அதாயி மற்றும் மார் மாறி
6. சீறோ மலபார் திருப்பலிக்கான அழைப்பின் அடிப்படைக் கருத்து என்ன? "என் பெயரால் ஒன்றுகூடும் போது என் நினைவாக இதைச் செய்யுங்கள்".
7. சீறோ மலபார் திருப்பலியின் ஆரம்பப் பாடல் எது? “அன்று பாஸ்கா திருநாளில் ஆண்டவர் தந்த கட்டளை போல்"
8. சீறோ மலபார் திருப்பலியின் தொடக்க திருச்சடங்கில் உள்ளவை என்ன? ஆண்டவரின் கட்டளை நினைவுகூர்தல், பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, தூயவர் தூயவர் தூயவர் என்ற வானதூதர்களின் பாடல், திருப்பாடல்கள், தூப அர்ப்பணம்
9. சீறோ மலபார் திருப்பலியின் தொடக்க திருச்சடங்கில் நினைவுகூரப்படுபவை எவை? ஆண்டவரின் மனிதாவதாரம், பிறப்பு, ஆண்டவரை எதிர்பார்த்திருந்த முற்பிதாக்களின் கனவுகள்
10. சீறோ மலபார் திருப்பலியின் இறைவார்த்தைத் திருச்சடங்கு எவ்வாறு ஆரம்பமாகிறது? நாம் உரத்த குரலில் உயிருள்ள இறைவனைப் புகழ்வோம் என்ற அறிவிப்புடன்
11. சீறோ மலபார் திருப்பலியின் இறைவார்த்தைத் திருச்சடங்கில் நினைவுகூரப்படுபவை எவை? ஆண்டவரின் பகிரங்க வாழ்வு, வார்த்தை மற்றும் செயல்கள் வழியாக வாழ்க்கை
12. சீறோ மலபார் திருப்பலியின் இறைவார்த்தைத் திருச்சடங்கிற்கும், நற்கருணை மன்றாட்டிற்கும் இடைப்பட்ட மன்றாட்டுக்களும் ஆராதனைகளும் எவ்வாறு அழைக்கப்படுகிறது? ஆயத்தத் திருச்சடங்கு

13. சீறோ மலபார் திருப்பலியின் ஆயத்தத் திருச்சடங்கின் போது நடைபெறுபவை என்ன? பலிப்பொருட்களை தயார் செய்தலும், குரு மற்றும் சமூகத்தின் ஆன்மீக ஆயத்தமும் அப்பமும் இரசமும் தயார் செய்து பலிபீடத்திற்கு கொண்டு வருதலும், நினைவுகூர்தல் மன்றாட்டு, விசுவாசப் பிரமாணம், பலிபீடத்தினுள் புகுதல்
14. சீறோ மலபார் திருப்பலியின் ஆயத்தத் திருச்சடங்கின் போது நினைவுகூரப்படுபவை என்ன? ஆண்டவரின் பாடுகள், இறப்பு, கல்லறை அடக்கம் கன்னிமரியாள், புனித தோமையார் போன்றோரையும் நம்மை விட்டுப்பிரிந்து சென்ற அனைவரையும்
15. சீறோ மலபார் திருப்பலியின் நற்கருணை மன்றாட்டுக்கு மற்றுப் பெயர் என்ன? நன்றி நவில் மன்றாட்டு
16. சீறோ மலபார் திருப்பலியின் நற்கருணை மன்றாட்டுப் பகுதியில் உள்ளவை என்ன? சமாதானம் அளித்தலும் நான்கு ககாந்த மன்றாட்டுகளும் மீட்புச் செயல்களின் நினைவுகூர்தலும், இறுதி உணவின் விளக்கமும், பரிந்துரை மன்றாட்டுகளும் மற்றும் தூய ஆவியாரை அழைக்கும் மன்றாட்டும் அடங்கியுள்ளன.
17. ககாந்த மன்றாட்டுகள் என்றால் என்ன? தலைவணங்கி நின்று நடத்தும் வேண்டுதல் மற்றும் நன்றி நவில்தல்
18. சீறோ மலபார் திருப்பலியின் ஒப்புரவுத் திருச்சடங்கின் மையக்கருத்து என்ன? இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயும் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயும் உள்ள ஒப்புரவு
19. சீறோ மலபார் திருப்பலியின் இறை ஒன்றிப்புத் திருச்சடங்கில் நடைபெறுவது என்ன? நற்கருணை பெற்றுக்கொள்தலும் அதனோடு தொடர்புடைய மன்றாட்டுக்களும்
20. “படைகளின் ஆண்டவரே! உமது **உறைவிடம்** எத்துணை அருமையானது' (திருப்பாடல்கள் 84:1).

## பாடம் 5

## இலத்தீன் திருவழிபாட்டு முறை

பயிற்சி வினாக்கள்

1. இலத்தீன் திருவழிபாட்டு முறையின் தொடக்கமும், வளர்ச்சியும் குறித்து விளக்குக?

மேற்கத்திய நாடுகளில் உருவான திருவழிபாட்டு முறைகளிலெல்லாம் முக்கிமானவையே உரோமை (இலத்தீன்), அம்புரோசியன் (Ambrosian), கள்ளிக்கன் (Gallican), கெல்டிக் (Celtic) போன்றவை. ஆனால் இவற்றுள் இன்றும் வழக்கில் உள்ளவை உரோமன் முறையும் அம்புரோசியன் முறையும் மட்டுமே ஆகும். மேற்கத்திய நாடுகள், ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, கிழக்கத்திய நாடுகள் போன்ற இடங்களில் உரோமை திருவழிபாட்டு முறை பயன்படுத்தப்படுகிறது. அம்புரோசியன் திருவழிபாட்டு முறை மிலான் மறைமாநிலத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உரோமை பேதுருவின் அரியணையாதலால் தொடக்கம் முதலே உரோமை நகர் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. அவ்வாறே உரோமை நகரை மையமாகக் கொண்ட திருவழிபாட்டு முறையும் எட்டாம் நூற்றாண்டு முதல் மேற்கத்திய நாடுகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது.

உரோமை நகரை மையமாகக் கொண்டும், உரோமை திருத்தந்தையின் அதிகாரத்திற்குட்பட்டும், உரோமைச் சுற்றியுள்ள பங்குகளில் உள்ள குருக்களால் வழிநடத்தப்படும் தேவாலயங்களிலும் உருவாகி வளர்ந்து வந்த திருவழிபாட்டு முறையையே உரோமை (இலத்தீன்) திருவழிபாட்டு முறை என்கிறோம்.

நான்காம் நூற்றாண்டு முதல் கிரேக்க மொழிக்குப் பதிலாக இலத்தீன் மொழி உரோமை திருவழிபாட்டு முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் வேளைச் செபங்கள் மற்றும் அருளடையாள நூல்களை பெருமளவில் உருவாக்கத் தொடங்கினர்.

படிப்படியாக இந்த திருவழிபாட்டு முறை உரோமை நகருக்கு வெளியேயும் பரவத் தொடங்கியது. சார்லிமெயின் மன்னர் தனது பேரரசில் இந்த திருவழிபாட்டு முறையை ஏற்றுக்கொண்டு உரோமை திருவழிபாட்டு முறை நூல்களை அங்கே பரப்பவும் செய்தார்.

நாளடைவில் இந்த திருவழிபாட்டு முறை அம்புரோசியன் திருவழிபாட்டு முறையைத் தவிர மற்ற திருவழிபாட்டு முறைகளின் மேல் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. அவ்வாறு ஏழாம் கிரகோரியார் பாப்பரசரின் காலத்தில் (1073-1085) திருவழிபாட்டு முறையை ஒன்றுபடுத்தும் முயற்சி மேற்கத்திய நாடுகளில் உருவானது. பதினைந்தாம் நூற்றாண்டில் (1492) அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டபோது இந்த திருவழிபாட்டு முறை அங்கும் பயன்படுத்தப்பட்டது.

பதினாறாம் நூற்றாண்டின் மறைபரப்புப் பணிகளின் பலனாக உரோமை திருவழிபாட்டு முறை கீழைநாடுகளிலும் பரவத் தொடங்கியது. (பிலிப்பைன்ஸ், இந்தியா, ஜப்பான், சீனா, ஆப்பிரிக்கா கண்டம் முதலியவை)

பதினாறாம் நூற்றாண்டில் கூட்டப்பட்ட திரிதெந்து திருச்சங்கம் Council of Trent (1545 - 1563) ஆராதனைமுறையின் புதுப்பித்தலை ஊக்குவித்தது. பாப்பரசர்களான புனித பத்தாம் பத்திநாதர், பன்னிரண்டாம் பத்திநாதர், இருபத்து மூன்றாம் யோவான் முதலானவர்களின் காலத்தில் ஏற்பட்ட புதுப்பித்தலின் வழியாக இலத்தீன் திருவழிபாட்டு முறை மேலும் வளர்ச்சியடைந்தது. அதன் முழுமையை இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தில் காணமுடிகிறது.

2. இலத்தீன் திருப்பலியை எத்தனை பகுதிகளாக பகுத்திருக்கின்றனர்? அவை யாவை?

திருப்பலிக்கு நான்கு பகுதிகள் உள்ளன. 1. ஆரம்பத் திருச்சடங்கு, 2. இறை வார்த்தைத் திருச்சடங்கு, 3. நற்கருணைத் திருச்சடங்கு, 4. இறுதித் திருச்சடங்கு, இந்த பகுதிகளனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு அமைந்திருக்கின்றன.

**1. ஆரம்பத் திருச்சடங்கு**

இது திருப்பலியில் இறைவார்த்தை வழிபாட்டுக்கு முன்னால் உள்ள பகுதியாகும். அதாவது நுழைவுப்பவனி, நுழைவுப்பாடல், வாழ்த்து தெரிவித்தல், மனம் வருந்துதலின் திருச்சடங்கு, ஆண்டவரே இரக்கமாயிரும், உன்னதங்களிலே பாடல், அந்தந்த தினத்தின் சிறப்பு மன்றாட்டு போன்றவை இப்பகுதியில் வருகின்றன. திருச்சடங்குகளின் ஆரம்பம், ஆயத்தம், முன்னுரை என்பவைகளுக்காகவே இவை உட்படுத்தப்பட்டுள்ளன. இவைகளின் குறிக்கோள் விசுவாசிகளை ஒரு சமூகமாக்குவதும், இறைவார்த்தை வழிபாட்டுக்கும், நற்கருணை வழிபாட்டுக்கும் அவர்களை தயார் செய்வதும் ஆகும்.

**2. இறைவார்த்தைத் திருச்சடங்கு**

திருவழிபாட்டு முறையில் இறைவார்த்தையை பறைசாற்றுதலும், இறைவார்த்தையை பகிர்ந்து கொள்ளுதலும் முக்கிய இடம் வகிக்கின்றன. இறைவார்த்தை வழிபாடு இல்லாமல் எந்த திருவழிபாட்டு முறையும் இல்லை. வத்திக்கான் திருச்சங்கம் கூறுவதாவது: இறைவார்த்தை மேசையிலிருந்து சத்துமிகுந்த செய்திகள் அதிகமாகக் கிடைப்பதற்கு மறைநூலில் அடங்கியிருக்கும் செல்வங்களை விசுவாசிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். இதற்காக ஒரு குறிப்பிட்ட கால அளவினுள் விவிலியத்திலுள்ள முக்கிய பகுதிகளை அவர்களுக்கு வாசித்து கொடுக்க வேண்டும்." (திருவழிபாட்டு முறை

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் படிப்பினையை கருத்தில் கொண்டு திருப்பலியில் மறைநூல் வாசகம் உருவாக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையின் வாசகங்களுக்காக மூன்று வருட சுழற்சியும், வாரநாட்களின் வாசகங்களுக்காக இரண்டுவருட சுழற்சியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நற்செய்தி வாசகத்திற்கு பின்னர் நற்செய்தி விளக்கமும், விசுவாசம் அறிக்கையிடுதலும் விசுவாசிகளுக்கான மன்றாட்டும் நடத்தப்படுகிறது.

**3. நற்கருணைத் திருச்சடங்கு**

இது திருப்பலியிலுள்ள இரண்டாவது முக்கியமான பகுதியாகும். முழுத்திருச்சடங்குகளுக்கும் மையமாகவும் உறைவிடமாகவும் அமைவது இப்பகுதியாகும். குறிப்பாக நற்கருணை மன்றாட்டு (Eucharistic Prayer). இயேசு கிறிஸ்து இறுதி உணவின்போது சொன்னவற்றையும், செய்தவற்றையும் இப்பகுதியில் நாம் நினைவு கூர்கின்றோம். அவர் அப்பத்தை எடுத்து இவ்வாறு கூறினார்: "வாங்கி உண்ணுங்கள், இது என் உடல்", பின்னர் கிண்ணத்தை எடுத்து பின்வருமாறு கூறினார் : "வாங்கி பருகுங்கள் இது என் இரத்தம். இதை என் நினைவாகச் செய்யுங்கள்". பின்னர் அவர் அவற்றை சீடர்களுக்குக் கொடுத்தார்.

இந்த நற்கருணைத் திருச்சடங்கிற்கு மூன்று பகுதிகள் உள்ளன. அவை i. காணிக்கை பொருட்களை தயார் செய்தல். ii. நற்கருணை மன்றாட்டுகள், iii. நற்கருணை உட்கொள்ளுதல்.

**i.காணிக்கைப் பொருட்களைத் தயார் செய்தல்**

இத்திருச்சடங்கின் தொடக்கத்தில் காணிக்கை பொருட்களான அப்பமும் இரசமும் தண்ணீரும் பலிபீடத்தில் கொண்டுவரப்படுகிறது. இவை திருச்சடங்கில் பங்குகொள்ளும் விசுவாசிகளையே குறிக்கின்றது. இந்த காணிக்கை பொருட்களை பலிபீடத்தில் அர்ப்பணிப்பதன் வழியாக அவர்கள் தங்களையே கிறிஸ்துவின் பலியோடு சேர்த்து இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றனர். தொடர்ந்து காணிக்கைப் பொருட்களை ஆசீர்வதிக்கின்றதான மன்றாட்டு நடத்தப்படுகிறது. காணிக்கைகளை இறைவனுக்கு அர்ப்பித்தல், அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மன்றாடுகல் போன்றைவையே இதன் உள்ளடக்கமாகும்.

**ii. நற்கருணை மன்றாட்டு**

இது திருச்சடங்குகளின் மையப்பகுதி ஆகும். மேலும் இது நன்றி நவில்தலினுடையவும், புனிதப்படுத்துதலினுடையவும் மன்றாட்டு ஆகும். உரையாடலின் வழியாக ('இதயங்களை ஆண்டவரிடம்') குருவானவர் மக்களுக்காக கிறிஸ்துவின் வழியாக தந்தைக்கடவுளுக்கு அளிக்கும் மன்றாட்டே இது. ஆண்டவரின் மீட்புச் செயல்களை நன்றி நிறைந்த உள்ளத்தோடு நினைவுகூர்ந்து நன்றிபலி அர்ப்பிக்க வேண்டிய நேரமே இது ஆகும்.

எல்லா நற்கருணை மன்றாட்டுக்களினுடையவும் முக்கிய பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. முன்னுரை (Preface), 2. தூயவர் பாடல் (Sanctus), 3. தூய ஆவியாரின் எழுந்தருளர் (Epiclesis), 4. நற்கருணை நிறுவல் நிகழ்வுரை (Institution Narrative), 5. நினைவாக்கம் (Anamnesis), 6. பலி அர்ப்பணம், 7. பரிந்துரை மன்றாட்டு, 8. இறுதிப் புகழ்பாடல் (Doxology).

**iii. நற்கருணை உட்கொள்ளுதல்**

நற்கருணை மன்றாட்டு நிறைவடைந்தவுடன், கிறிஸ்துவின் திருஉடலையும், திரு இரத்தத்தையும் ஏற்றுக்கொள்வதன் வழியாக திருச்சடங்குகள் முழுமையடைகின்றன. இப்பகுதியில் பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே......என்ற செபம், சமாதானம் வழங்குதல், அப்பம் பிட்குதல் போன்ற திருச்சடங்குகள் நடத்தப்படுகின்றன. ஆண்டவரின் திருஉடலையும் திரு இரத்தத்தையும் தகுந்த ஆயத்தத்தோடும் பயபக்தியோடும் பெற்றுக்கொள்ள விசுவாசிகளை ஆயத்தப்படுத்துவதே இப்பகுதியின் நோக்கம்.

பின்னர் குருவானவர் அப்பத்தை எடுத்து முன்பகுதியில் மக்களுக்கு காணும் வகையில் பிடித்துக்கொண்டு திருசெம்மறியின் விருந்துக்கு ("இதோ இறைவனின் செம்மறி....." என்று கூறிக்கொண்டு) அனைவரையும் அழைக்கின்றார். ஆண்டவரைப் பெற்றுக்கொள்ள ஒருவருக்கும் தகுதியில்லை (மத்தேயு 8:8) என்று குருவானவரும், மக்களும் ஒன்றாகப் பதிலளிக்கின்றனர்.

திருப்பலியின் நிறைவாக நற்கருணை பெற்றுக்கொள்ளுதல் நடத்தப்படுகிறது. குருவானவரும் மக்களும் நற்கருணை பெற்றுக்கொள்கின்றனர். தொடர்ந்து நற்கருணை மன்றாட்டை கூறிக்கொண்டு குருவானவரும் மக்களும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகின்றனர்.

**4. இறுதித்திருச்சடங்கு**

இறுதித் திருச்சடங்கில் குருவானவரின் வாழ்த்துச் செய்தியும் ஆசீர்வாதமுமே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். "கிறிஸ்துவின் அமைதியில் சென்று வாருங்கள்" என்னும் வாழ்த்துரையோடு அடையாளங்களின் வழியாக கொண்டாடிய மறையுண்மைகளை வாழ்வில் செயல்படுத்த மக்களை குருவானவர் அனுப்பி வைக்கின்றார். தொடர்ந்து குருவானவரும், திருத்தொண்டரும் பலிபீடத்தை முத்தம் செய்தும் பீடத்திலுள்ள மற்றனைவரோடும் சேர்ந்து வணங்கிக் கொண்டும் இறுதித் திருச்சடங்கை முழுமையாக்குகின்றனர்.

கிறிஸ்துவின் வார்த்தையினாலும், உடலுதிரங்களினாலும் ஊட்டம் பெற்றவர்களாக கிறிஸ்துவில் ஒன்றிணைந்து விசுவாசிகள் இந்த உலகில் இறைவன் கட்டளையிட்டிருக்கின்ற கடமைகளை நிறைவேற்றுவதற்காக தேவாலயத்திலிருந்து பிரிந்து செல்கின்றனர். திருப்பலியின் தொடர்ச்சியாக அவர்கள் சமூகத்தில் கடவுளுக்கு சான்று பகர்ந்து வாழக் கடமைப்பட்டுள்ளனர். அதனால் திருப்பலியில் பங்குகொள்ள வேண்டியது தேவையான ஒன்றாகும். திருப்பலியில் ஒவ்வொரு நபருக்கும் அவர்களுடையதான கடமை உண்டு. அதனை நிறைவேற்ற முயன்றால் மட்டுமே ஒவ்வொரு பலி அர்ப்பணமும் அனுபவமாக மாறும். அவ்வாறு நற்கருணையை மையப்படுத்திய ஒரு கிறிஸ்தவ சமூகத்தை கட்டியெழுப்ப நற்கருணை நாதரோடு நாம் இடைவிடாது மன்றாடுவோம்.

**குறு வினா விடைகள்**

www.malankaralibrary.com

1. மேற்கு நாடுகளில் உருவான திருவழிபாட்டு முறைகளிலெல்லாம் முக்கிமானவை எவை? உரோமை (இலத்தீன்), அம்புரோசியன் (Ambrosian), கள்ளிக்கன் (Gallican), கெல்டிக் (Celtic)
2. மேற்கு நாடுகளில் இன்றும் வழக்கில் உள்ள திருவழிபாட்டு முறைகள் எவை? உரோமன் முறையும் அம்புரோசியன் முறையும்
3. அம்புரோசியன் திருவழிபாட்டு முறை பயன்படுத்தப்பட்டு வரும் உயர்மறைமாவட்டம் எது? மிலான் உயர் மறைமாவட்டம்
4. திருச்சபையில் உரோமை நகர் முக்கியத்துவம் வாய்ந்தது ஏன்? உரோமை பேதுருவின் அரியணையாதலால்
5. உரோமை நகரை மையமாகக் கொண்ட திருவழிபாட்டு முறை எக்காலம் முதல் மேற்கத்திய நாடுகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது? எட்டாம் நூற்றாண்டு முதல்
6. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் எப்போது முதல் கிரேக்க மொழிக்குப் பதிலாக இலத்தீன் மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது? நான்காம் நூற்றாண்டு முதல்
7. இலத்தீன் திருவழிபாட்டு முறையை உரோமை நகருக்கு வெளியேயும் பரவ உதவிய மன்னர் யார் சார்லிமெயின் மன்னர்
8. எத்திருத்தந்தையின் காலத்தில் இலத்தீன் திருவழிபாட்டு முறையை ஒன்றுபடுத்தும் முயற்சி மேற்கத்திய நாடுகளில் உருவானது? திருத்தந்தை ஏழாம் கிரகோரியார் (1073-1085)
9. அமெரிக்காவில் எப்போது முதல் இலத்தீன் திருவழிபாட்டு முறை பயன்படுத்தும் முறை ஆரம்பமானது? பதினைந்தாம் நூற்றாண்டு முதல்
10. இலத்தீன் திருவழிபாட்டு முறை பதினாறாம் நூற்றாண்டின் மறைபரப்புப் பணிகளின் பலனாக இலத்தீன் திருவழிபாட்டு முறை எந்நாடுகளில் பரவத் தொடங்கியது? பிலிப்பைன்ஸ், இந்தியா, ஜப்பான், சீனா, ஆப்பிரிக்கா கண்டம்
11. இலத்தீன் திருவழிபாட்டு முறையின் புதுப்பித்தலை ஊக்குவித்த திருச்சங்கம் எது? திரிதெந்து திருச்சங்கம் Council of Trent (1545 - 1563)
12. இலத்தீன் திருவழிபாட்டு முறையை புதுப்பித்த திருத்தந்தையர்கள் யாவர்? திருத்தந்தையர்கள் புனித பத்தாம் பத்திநாதர், பன்னிரண்டாம் பத்திநாதர், இருபத்து மூன்றாம் யோவான்
13. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் திருப்பலியின் நான்கு பகுதிகள் எவை? 1. ஆரம்பத் திருச்சடங்கு, 2. இறைவார்த்தைத் திருச்சடங்கு, 3. நற்கருணைத் திருச்சடங்கு, 4. இறுதித் திருச்சடங்கு
14. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் ஆரம்பத் திருச்சடங்கின் பகுதிகள் எவை? நுழைவுப்பவனி, நுழைவுப்பாடல், வாழ்த்து தெரிவித்தல், மனம் வருந்துதலின் திருச்சடங்கு, ஆண்டவரே இரக்கமாயிரும், உன்னதங்களிலே பாடல், அந்தந்த தினத்தின் சிறப்பு மன்றாட்டு
15. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் இறைவார்த்தைத் திருச்சடங்கில் முக்கிய இடம் வகிப்பவை என்ன? இறைவார்த்தையை பறைசாற்றுதலும், இறைவார்த்தையை பகிர்ந்து கொள்ளுதலும்
16. இறைவார்த்தை மேசையிலிருந்து சத்துமிகுந்த செய்திகள் அதிகமாகக் கிடைப்பதற்கு மறைநூலில் அடங்கியிருக்கும் செல்வங்களை விசுவாசிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். இதற்காக ஒரு குறிப்பிட்ட கால அளவினுள் விவிலியத்திலுள்ள முக்கிய பகுதிகளை அவர்களுக்கு வாசித்து கொடுக்க வேண்டும்." எனக்கூறுவது எது? வத்திக்கான் திருச்சங்கம்
17. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் ஞாயிற்றுக்கிழமையின் வாசகங்களுக்காக எத்தனை வருட சுழற்சிகள் உள்ளன? மூன்று
18. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் வாரநாட்களின் வாசகங்களுக்காக எத்தனை வருடச் சுழற்சிகள் உள்ளன? இரண்டு
19. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் இறைவார்த்தைத் திருச்சடங்கில் உள்ளவை என்ன? நற்செய்தி வாசகம், நற்செய்தி விளக்கமும், விசுவாசம் அறிக்கையிடுதல், விசுவாசிகளுக்கான மன்றாட்டு
20. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் நற்கருணைத் திருச்சடங்கின் மூன்று பகுதிகள் உள்ளன? அவை i. காணிக்கை பொருட்களை தயார் செய்தல். ii. நற்கருணை மன்றாட்டுகள், iii. நற்கருணை உட்கொள்ளுதல்.

www.malankaralibrary.com

21. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் நற்கருணை மன்றாட்டுகளின் பகுதிகள் எவை? 1. முன்னுரை (Preface), 2. தூயவர் பாடல் (Sanctus), 3. தூய ஆவியாரின் எழுந்தருளர் (Epiclesis), 4. நற்கருணை நிறுவல் நிகழ்வுரை (Institution Narrative), 5. நினைவாக்கம் (Anamnesis), 6. பலி அர்ப்பணம், 7. பரிந்துரை மன்றாட்டு, 8. இறுதிப் புகழ்பாடல் (Doxology).

22. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் குருவானவர் நற்கருணை உட்கொள்ள எவ்வாறு அழைக்கின்றார்? "இதோ இறைவனின் செம்மறி....."

23. இலத்தீன் திருவழிபாட்டு முறையில் இறுதித் திருச்சடங்கில் குருவானவரின் வாழ்த்துச் செய்தியும் ஆசீர்வாதமும் என்ன? "கிறிஸ்துவின் அமைதியில் சென்று வாருங்கள்"

24. "ஆண்டவரே, நீர் குடிகொள்ளும் **இல்லத்தை** நான் விரும்புகின்றேன். உமது மாட்சி தங்கியுள்ள இடத்தை நான் விரும்புகின்றேன்" (தி.பா. 26:8),

பாடம் 6

## திருச்சபையும் துறவறமும்

### பயிற்சி வினாக்கள்

1. தொடக்கத் திருச்சபையின் துறவறவாழ்வு எவ்வாறு அமைந்திருந்தது?

நற்செய்தியின்படி வாழவும் இயேசு கிறிஸ்துவோடு ஒன்றுபட்டிருக்கவும் தொடக்கக்கால திருச்சபையினர் ஆர்வம் கொண்டிருந்தனர். இயேசுவின் இரண்டாம் வருகை உடனே நடைபெறும் என்னும் எதிர்பார்ப்பு பலமக்களையும் துறவற வாழ்வு வாழத் தூண்டியது. சிலை வழிபாட்டிலிருந்தும், மதக்கலவரங்களிலிருந்தும் மீள்வதற்காக பல கிறிஸ்தவர்கள் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்திருந்தனர். இவர்கள் படிப்படியாக துறவறவாழ்வுக்கு வழிநடத்தப்பட்டனர். வாழ்க்கையை முழுவதுமாக இறைவனுக்கு ஒப்புக் கொடுப்பவர்களே துறவிகள். அவர்கள் வீட்டைக் குறித்தோ செல்வத்தைக் குறித்தோ ஒன்றும் கவலைப்படாமல் தங்களையே முழுவதுமாக இயேசுவுக்கு அர்ப்பணித்தனர்.

தொடக்கத் திருச்சபையில் துறவறவாழ்வு எகிப்திலுள்ள பாலைநிலங்களில் ஆரம்பமானது. தனிமை வாழ்வு வாழ்ந்த துறவிகளே அங்கு வாழ்ந்திருந்தனர். துறவற சமூகத்தை நிறுவிய தந்தையர்கள் புனித அந்தோணியார், புனித பக்கோமியார், புனித பசேலியோஸ், புனித ஆசீர்வாதப்பர் போன்றோர் ஆவார்.

2. தொடக்கத் திருச்சபையின் துறவறத் தந்தையர்களைக் குறித்து குறிப்பு வரைக?

எகிப்தின் புனித அந்தோணியார் (கி.பி. 250-356)

தனிமையான துறவு வாழ்வின் நிறுவனரும் தந்தையுமாக புனித அந்தோணியார் அறியப்படுகிறார். கி.பி. 250-ம் ஆண்டு எகிப்திலுள்ள கெமான் என்ற இடத்தில் கிறிஸ்தவ பெற்றோர்களிடமிருந்து இவர் பிறந்தார். 18 வயதிற்கு முன்பே இவருடைய பெற்றோர் இறந்தனர். ஒருநாள் தேவாலயத்திலிருந்து கேட்ட நற்செய்திப் பகுதி அவருடைய உள்ளத்தைத் தொட்டது : "அதற்கு இயேசு, நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும் என்றார்" (மத்தேயு 19:21). இந்நற்செய்திப்பகுதி தன்னோடு மட்டும் சொல்வதாக நினைத்த அவர் தனது உடைமைகளையும் செல்வங்களையும் முழுவதுமாக ஏழைகளுக்குக் கொடுத்தார். பின்னர் அவர் தனிமையாக வாழ்வதற்காக எகிப்திலுள்ள பாலை நிலத்துக்குச் சென்றார்.

கி.பி. 271-ம் ஆண்டு தனது 21-வது வயதில் அவர் துறவு பூண்டார். அந்தோணியாரின் தீவிரமான துறவற வாழ்வு அனேகமான மக்களை ஈர்த்தது. அனேகமானோர் அவரைப் பின்பற்றினர். ஏராளமானோர் அவரைக் கண்டு அவருடைய நல்லுரையைக் கேட்க வந்து கொண்டிருந்தனர். இவர் 40 ஆண்டுகள் பாலைநிலத்தில் தனிமையாக வாழ்ந்து, தமது 105-வது வயதில் இவ்வுலக வாழ்வை விட்டு சென்றார்.

எகிப்திலுள்ள லிக்கோபோனிஸ் முதல் அலக்சான்ட்ரியா வரையிலான இடங்களில் புனித அந்தோணியாரின் சீடர்கள் தனிமையாகவும் கூட்டமாகவும் வாழ்ந்திருந்தனர். முதல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையை பின்பற்ற விரும்பிய புனித அந்தோணியார் துறவற வாழ்வுக்கு அடித்தளமிடவும் அனேகமான மக்களை துறவறவாழ்வு ஈர்க்கவும் செய்தார்.

**புனித பக்கோமியோஸ் (கி.பி. 290-346)**

எகிப்திலுள்ள எஸ்னா என்னும் இடத்தில் கி.பி. 290-ல் புறவினத்தாரான பெற்றோருக்கு மகனாக பக்கோமியோஸ் பிறந்தார். உரோமைப் படைப்பிரிவின் உறுப்பினராகயிருந்த பக்கோமியோஸ் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையாலும் பண்பு நலன்களாலும் ஈர்க்கப்பட்டு கிறிஸ்தவராக மாறினார். பின்னர் துறவறவாழ்வால் ஈர்க்கப்பட்ட அவர் பலெமோன் என்ற துறவியிடம் சீடராகச் சேர்ந்து தனிமை வாழ்வை ஆரம்பித்தார். ஆனால் அவர் துறவறத்தார்களின் சமூகவாழ்வையே அதிகம் விரும்பினார். எகிப்திலுள்ள தாபென்னிசில் அவர் ஒரு துறவற இல்லம் தொடங்கினார். படிப்படியாக அவரைப் பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. இவருடைய இறப்புவரையிலும் இவர் திருச்சபையின் தலைவராகயிருந்தார். சமூகவாழ்வை எளிதாக்க அவர் ஒரு சட்டநூலை உருவாக்கினார். அவருடைய பல ஆண்டு சிந்தனையினுடையவும், செபத்தினுடையவும் பலனாகவே அவர் இந்த நூலை உருவாக்கினார். ஒரு நல்ல துறவியாக மாறுவதற்கு கீழ்ப்படிதல், அன்பு, ஏழ்மை, மணத்துறவு, பக்தி போன்றவை தேவை என்று புனித பக்கோமியோஸ் கற்பித்தார். விவிலிய படிப்பினைகளுக்கும், துறவிகளின் கல்விக்கும் அவர் முக்கியத்துவம் அளித்தார். அவர் உருவாக்கிய சட்டங்கள் பிற்காலத்தில் துறவற சபை சமூகத்தில் மிகப்பெரிய செல்வாக்கை செலுத்தியது.

**புனித பசேலியோஸ் (பேசில்) (கி.பி. 330 -379)**

கி.பி. 330 ஆம் ஆண்டு ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பசேலியோஸ் பிறந்தார். ஏதென்சில் உயர் கல்வியைப் முடித்தபின் அவர் பின் துறவறத்தைக் குறித்துக் கற்றார். புனித பக்கோமியோசைப் போன்ற சிந்தனையாளரே கப்படோசியாவிலுள்ள புனித பசேலியோஸ் ஆசியாத் துணைக்கண்டத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அவர் துறவற வாழ்வை ஊக்குவித்தார். சமூகமான துறவற வாழ்வு தனிமையான துறவற வாழ்வை விட சிறந்தது என்று அவர் கருதினார். ஏனெனில் தனியாக வாழும் ஒருவரால் எவ்வாறு பிறருடைய பாதங்களைக் கழுவ இயலும் என்பதே அவர் கேள்வி. அதனால் அவருடைய சட்டங்கள் சமூக வாழ்வுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக அமைந்திருந்தது. உணவு, வேலை, செபம் முதலானவற்றை துறவற இல்லத்தில் வைத்து ஒன்றாகச் செய்யத் தொடங்கினார். மணத்துறவு, ஏழ்மை, கீழ்ப்படிதல் போன்ற விரதங்களை அவர்கள் கடைபிடிக்கத் தொடங்கினார். மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள், பள்ளிகள் போன்றவற்றை நிறுவி பிறரன்புப் பணிகள் செய்யத் தொடங்கினார். ஒரு நாளில் ஏழுமுறை செபிக்கும் முறையை ஏற்படுத்தினார். கி.பி. 360-ல் கேசரியாவுக்கு அருகே பசேலியோசின் துறவற இல்லம் நிறுவப்பட்டது. புனித பசேலியோஸ் கேசரியாவின் ஆயரான பின்னரும் துறவறம் குறித்து பறைசாற்றிக் கொண்டேயிருந்தார். துறவறத்துக்கு அவர் ஒரு சட்டத்தொகுப்பை உருவாக்கினார். பசேலியோஸ் சட்டத்தொகுப்பு என்றே இது அறியப்படுகிறது.

**புனித பெனடிக்ட் (ஆசீர்வாதப்பர்) (கி.பி. 480 - 547)**

மேலைநாடுகளிலும் இக்காலகட்டத்திலும் துறவறம் ஆரம்பமானதும், வளர்ந்ததும், புனித அத்தனாசியார் (373) எவுசேபியஸ் (365), மிலானிலுள்ள புனித அம்புரோசியார் (374) போன்றவர்களின் துணையால் ஆகும். மேலைநாட்டு துறவற முயற்சியில் முதன்மையானவரே புனித பெனடிக்ட்.

புனித பெனடிக்ட் ஒரு குகையில் தனிமை வாழ்வை ஆரம்பித்தார். அதன்பின்னர் அவர் 12 துறவற இல்லங்களை நிறுவினார். கி.பி. 524-ல் மோந்தெகஸீனோயில் ஒரு பெரிய துறவற இல்லத்தை இவர் நிறுவினார். இந்த துறவற இல்லம் பெனடிக்டைன் துறவற சமூகத்தின் அன்னை இல்லமாக மாறியது. அவர் புதிய துறவற சட்டத்தொகுப்பை உருவாக்கினார். இதனால் மேலைநாட்டு துறவிகளின் பிதாப்பிதா என்னும் சிறப்புப் பெயரை மேலைநாடு அவருக்கு அளித்தது.

பெனடிக்டின் சட்டத்தொகுப்பை கிரேகோரி பாப்பரசர் (590-604) ஏற்றுக்கொண்டார். ஏழ்மை, மணத்துறவு, கீழ்ப்படிதல், சட்டங்களை கடைபிடித்தல், அறநெறி வாழ்வில் புதுப்பித்தல், துறவற வாழ்விலுள்ள நிலைத்தன்மை போன்ற விரதங்களை அவர் கட்டாயப்படுத்தினார். செபம், வேலை, ஆன்மீக வாசிப்பு என்பவையே துறவற வாழ்வின் அனுதின் கடமைகளாகும். ஆராதனைமுறைக்கும் பெனடிக்டைன் சட்டத்தொகுப்பில் தனிப்பிட்ட முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

3. துறவறத்தின் உள்ளடக்கம் குறித்து விளக்குக?

கடவுளையும் மனிதரையும் முழுவதுமாக அன்பு செய்து கிறிஸ்தவத்தின் முழுமையை அடைய அழைக்கப்பட்டவர்களே துறவிகள். ஏழ்மை, மணத்துறவு, கீழ்ப்படிதல் போன்ற விரதங்களை ஏற்று கடவுளுக்கும் மனிதருக்கும் சேவைபுரிய துறவிகள் கடமைப்பட்டுள்ளனர். இயேசுவைப் போன்று தம்மையே வெறுமையாக்கிக் கொண்டு பிறருக்காக வாழ வேண்டிய

www.malankaralibrary.com

அழைப்பே இது. ஆராதனைக்கும், தியானத்திற்கும், வேலைக்கும், சேவைக்கும், கற்றலுக்குமாக துறவி தன் வாழ்வை முழுவதுமாக அர்ப்பணிக்கின்றார். ஒரு துறவி தன் செபத்தின் வழியாக திருச்சபையையும் உலக முழுமையையும் நினைக்கின்றார். பல துறவிகளும் தங்களுடைய நேரத்தை திருவிவிலியம் படிப்பதிலும், புத்தகம் எழுதுவதிலும் செலவிடுகின்றனர். அவ்வாறு துறவிகளால் எழுதப்பட்ட பல நூல்களும் திருச்சபையின் பெரிய செல்வமாக விளங்குகிறது. திருவிவிலியத்தின் புதிய பகர்ப்புகளை எழுதியதும் பல மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்ததும் துறவிகளே. அவ்வாறு துறவற இல்லங்கள் நாளடைவில் பெரிய கல்வி மையங்களாக மாறின. பல துறவிகளும் கல்விநிலையங்களை நிறுவி அறிவை அனைவருக்கும் பகிர்ந்தளித்தனர்.

துறவி இறையரசின் அடையாளமாகக் கருதப்படுகிறார். இறையரசின் விழுமியங்களுக்கு ஏற்ப வாழ்ந்து அனைவருக்கும் முன்மாதிரியாக மாற துறவிகள் அழைக்கப்பட்டுள்ளனர். தீமைக்கு எதிராக போராடவும் இந்த உலகத்தின் ஒன்றுமில்லாமையில் ஆர்வம் கொண்டு உண்மை கிறிஸ்தவர்களின் அடையாளமாக நிற்க துறவிகள் கடமைப்பட்டுள்ளனர். இவ்வாறு தொடக்கத் திருச்சபையில் தோன்றிய துறவறம் திருச்சபைக்கும் உலகம் முழுமைக்கும் நன்மை செய்துகொண்டு இன்றும் திருச்சபையில் தொடர்கின்றது.

**குறு வினா விடைகள்**

1. திருச்சபையின் ஆரம்பகாலம் முதலே இவ்வுலக வாழ்வை விட்டுவிட்டு இயேசுவுக்காக தனிமை மற்றும் சமூக வாழ்வை வாழ்ந்தவர்கள் எவற்றை செய்து வந்தனர்? இயேசுவோடுள்ள அன்பை முன்னிட்டு செபம், உபவாசம், தியானம், விவிலியம் வாசித்தல், ஏழை மக்களைப் பாதுகாத்தல், கல்வி, எழுத்து போன்ற பணிகள்
2. எலியா இறைவாக்கினர் எங்கே துறவற இல்லம் அமைத்திருந்ததாக விவிலியம் சான்று பகர்கின்றது (1அரசர் 17:34) ? கார்மேல் மலையில்
3. இயேசுவின் வருகைக்கு முன்னர் துறவிகள் எங்கே சமூகமாக வாழ்ந்தனர்? பாலஸ்தீனாவிலுள்ள பாலை நிலத்திலும், மலைகளிலும்
4. துறவற வாழ்விற்கு முன்மாதிரியாக வாழ்ந்த இயேசுவின் காலத்தவர் யார்? திருமுழுக்கு யோவான்
5. திருமுழுக்கு யோவான் தனது துறவற வாழ்வில் உடுத்திய மற்றும் உண்டவை என்ன? தோலாடை மற்றும் காட்டுக் கிழங்கு
6. தொடக்கத் திருச்சபையில் துறவறவாழ்வு எங்கே ஆரம்பமானது? எகிப்தின் பாலைநிலங்களில்
7. துறவற சமூகத்தை நிறுவிய தொடக்க கால தந்தையர்கள் யாவர்? புனித அந்தோணியார், புனித பக்கோமியார், புனித பசேலியோஸ், புனித ஆசீர்வாதப்பர்
8. தனிமையான துறவு வாழ்வின் நிறுவனரும் தந்தையுமாக அறியப்படுபவர் யார்? புனித அந்தோணியார்.
9. எகிப்தின் புனித அந்தோணியார் எங்கே எப்போது பிறந்தார்? கி.பி. 250-ம் ஆண்டு எகிப்திலுள்ள கெமான் என்ற இடத்தில்
10. எகிப்தின் புனித அந்தோணியாரின் உள்ளத்தைத் தொட்ட தேவாலயத்திலிருந்து கேட்ட நற்செய்திப் பகுதி எது? "அதற்கு இயேசு, நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும் என்றார்" (மத்தேயு 19:21).
11. எகிப்தின் புனித அந்தோணியார் எப்போது துறவு பூண்டார்? கி.பி. 271-ம் ஆண்டு தனது 21-வது வயதில்
12. எகிப்தின் புனித அந்தோணியார் எத்தனை ஆண்டுகள் பாலைநிலத்தில் தனிமையாக வாழ்ந்து வந்தார்? 40 ஆண்டுகள்
13. எகிப்தின் புனித அந்தோணியார் எவ்வயதில் இறந்தார்? 105-வது வயதில்
14. எகிப்தின் புனித அந்தோணியாரின் சீடர்கள் எப்பகுதிகளில் தனிமையாகவும் கூட்டமாகவும் வாழ்ந்திருந்தனர்? எகிப்திலுள்ள லிக்கோபோனிஸ் முதல் அலக்சான்ட்ரியா வரையிலான இடங்களில்
15. புனித பக்கோமியோஸ் எங்கே எப்போது பிறந்தார்? எகிப்திலுள்ள எஸ்னா என்னும் இடத்தில் கி.பி. 290-ல்

www.malankaralibrary.com

16. புனித பக்கோமியோஸ் எந்த துறவியிடம் சீடராகச் சேர்ந்து தனிமை வாழ்வை ஆரம்பித்தார்? பலெமோன்
17. புனித பக்கோமியோஸ் எங்கே துறவற இல்லத்தை தொடங்கினார்? எகிப்திலுள்ள தாபென்னிசில்
18. கப்படோசியாவின் புனித பசேலியோஸ் எப்போது பிறந்தார்? கி.பி. 330 ஆம் ஆண்டு
19. கப்படோசியாவின் புனித பசேலியோஸ் எவ்விடங்களில் துறவற வாழ்வை ஊக்குவித்தார்? ஆசியாத் துணைக்கண்டத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும்
20. ஒரு நாளில் ஏழுமுறை செபிக்கும் முறையை ஏற்படுத்தியவர் யார்? கப்படோசியாவின் புனித பசேலியோஸ்
21. பசேலியோசின் துறவற இல்லம் எப்போது எங்கே நிறுவப்பட்டது? கி.பி. 360-ல் கேசரியாவுக்கு அருகே.
22. கப்படோசியாவின் புனித பசேலியோஸ் துறவறத்துக்கு நிறுவிய சட்டத்தொகுப்பின் பெயர் என்ன? பசேலியோஸ் சட்டத்தொகுப்பு
23. மேற்குநாடுகளில் துறவறம் ஆரம்பித்து வளர்த்தவர்கள் யாவர்? புனித அத்தனாசியார் (373) எவுசேபியஸ் (365), மிலானிலுள்ள புனித அம்புரோசியார் (374)
24. மேற்குநாடுகளில் துறவறம் ஆரம்பித்து வளர்த்தவர்களுள் முதன்மையானவர் யார்? புனித பெனடிக்ட்
25. புனித பெனடிக்ட் பெரிய துறவற இல்லத்தை எப்போது எங்கே நிறுவினார்? கி.பி. 524-ல் மோந்தெகஸீனோயில்
26. மேற்கு நாட்டு துறவிகளின் பிதாப்பிதா என்னும் சிறப்புப் பெயரல் அழைக்கப்படும் துறவி யார்? புனித பெனடிக்ட்
27. புனித பெனடிக்டின் துறவற சட்டத்தொகுப்பை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை யார்? திருத்தந்தை கிரகோரி (590-604).
28. புனித பெனடிக்ட் கட்டாயப்படுத்திய விரதங்கள் எவை? ஏழ்மை, மணத்துறவு, கீழ்ப்படிதல், சட்டங்களை கடைபிடித்தல், அறநெறி வாழ்வில் புதுப்பித்தல், துறவற வாழ்விலுள்ள நிலைத்தன்மை
29. தொடக்கத் திருச்சபையில் வழக்கத்திலிருந்த மூன்று துறவற மரபுகள் எவை? தனிமைத் துறவறம், சமூகத் துறவறம், செபத்துடன் பிறரன்புப் பணியையும் தொடர்புபடுத்திய துறவறம்
30. தனிமைத் துறவற வாழ்வை நிறுவியவர் யார்? புனித அந்தோணியார்
31. சமூகத் துறவறத்தை நிறுவியவர் யார்? புனித பக்கோமியோஸ்
32. செபத்தையும் பிறரன்புப் பணியையும் தொடர்புபடுத்திய துறவறத்தை நிறுவியவர் யார்? புனித பசேலியோஸ்
33. கடவுளையும் மனிதரையும் முழுவதுமாக அன்பு செய்து கிறிஸ்தவத்தின் முழுமையை அடைய அழைக்கப்பட்டவர்கள் யார்? துறவிகள்.
34. திருச்சபையில் இறையரசின் அடையாளமாகக் கருதப்படுபவர் யார்? துறவி.
35. “இயேசு, நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும். அப்பொழுது **விண்ணகத்தின்** நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப்பின்பற்றும் என்றார்” (மத்தேயு. 19:21).

## பாடம் 7

## உலகளாவிய முதல் ஏழு திருச்சங்கங்கள்

பயிற்சி வினாக்கள்

1. முதல் ஏழு உலகளாவிய திருச்சங்கங்கள் யாவை?

(1) நீசேயா - 1 (325), (2) கான்ஸ்தாந்திநோபுள் - 1 (381), (3) எபேசு - (431), (4) கல்க்கதானியா (கால்செதோன்) (451) (5) கான்ஸ்தாந்திநோபுள் - II (553), (6) கான்ஸ்தாந்திநோபுள் - III (680), (7) நீசேயா - II (787),

2. குறிப்பு வரைக :

**1. நீசேயா திருச்சங்கம் - 1 (கி.பி. 325)**

பித்தினியாவிலுள்ள நீசேயாவின் இன்றைய பெயர் துருக்கியிலுள்ள இஸ்னிக் என்பதாகும். நீசேயாவில் நடைபெற்ற திருச்சபைச் சங்கமே முதல் உலகளாவிய திருச்சங்கம் ஆகும். இதில் 318 பேர் கலந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. ஆரியூ என்ற அலெக்சான்டிரியா குருவின் திரிபு கொள்கையை எதிர்த்து உண்மை விசுவாசம் கற்பிக்கவே இத்திருச்சங்கம் கூட்டப்பட்டது. இறைமகனின் கடவுள் தன்மையை எதிர்ப்பதே ஆரியூவின் திரிபு கொள்கை. இறைமகன் ஒரு படைப்பு என்றும், உண்மையில் கடவுளுக்கு ஒப்பில்லாதவன் என்றும், மகன் இல்லாமல் ஒரு காலக்கட்டம் இருந்தது என்றும் ஆரியூ இறைமகனைப் பற்றிய திரிபுகொள்கைகளைப் போதித்தார். இந்த திரிபு கொள்கைகளுக்கெதிராக (கி.பி. 337) கான்ஸ்தாந்தியின் மன்னர் நீசேயாவில் வைத்து ஒரு திருச்சங்கம் கூட்டினார். இத்திருச்சங்கம் தந்தையும், மகனும் ஒரே பண்பு உடையவர்கள் என்று கூறி இறைமகனின் இறைத் தன்மையைப் போதித்தது. இதனை மையமாகக் கொண்டு ஒரு விசுவாசப் பிரமாணத்தையும் அவர்கள் வெளியிட்டனர். இது மட்டுமன்று இருபது சட்டங்களை இயற்றவும் குருக்களின் மணத்துறவு மற்றும் உயிர்ப்புத் திருநாள் போன்றவற்றைப் பற்றியும் ஆலோசனை செய்தனர். உண்மை விசுவாசத்தை அனைவருக்கும் எடுத்துக்கூறி ஆரியன் திரிபு கொள்கையை திருச்சபையிலிருந்து விரட்டியடித்தவுடன் இத்திருச்சங்கம் முடிவடைந்தது.

**2. கான்ஸ்தாந்திநோபுள் - 1 (கி.பி. 381)**

நீசேயா திருச்சங்கத்துடன் ஆரியன் திரிபுகொள்கை முடிவடையவில்லை. மாறாக பல்வேறு உருவங்களில் அது உரோமைப் பேரரசிலுள்ள பலத் திருச்சபைகளிலும் தொடர்ந்தது. இறையியல் வார்த்தைகளின் முழுமையான பொருள் அறிவுத் தெளிவு இல்லாமையே இதற்கு முக்கிய காரணமாகும். கப்பதேசியன் தந்தையர்கள் என்று அழைக்கப்படுகின்ற புனித பசேலியோஸ் (+379), புனித நசியான்ஸ் கிரிகோரியார் (+390), பனித நிசா கிரிகோரியார் (+394) போன்றோர் இறையியல் வார்த்தைகளுக்கு தெளிவான பொருள் விளக்கம் அளித்தனர். அவர்களின் இறையியல் பணிகளும், அன்புக் கலந்த பணிகளும் கொண்டு ஆரியன் பிரச்சனைகளுக்கு நிலையான தீர்வு காண முடிந்தது. கான்ஸ்தாந்திநோபுள் - 1 திருச்சங்கத்துடன் ஆரியன் திரிபு கொள்கை முடிவுக்கு வந்தது. ஒரே கடவுளும், அவரில் தந்தை, மகன், தூய ஆவி என்னும் மூன்று நபர்களும் உண்டு என்னும் உண்மை தெளிவுப்படுத்தப்பட்டது. கான்ஸ்தாந்திநோபுள் திருச்சங்கம் கி.பி. 381-ல் ஒன்றாம் தியடோசியஸ் என்னும் மன்னரால் அழைத்து ஒன்று கூட்டப்பட்டது. கப்பதோசியன் தந்தையர்களின் இறையியல் பணிகளின் ஒளியில் அங்கு ஒன்றுகூடிய 150 தந்தையர்களும் சேர்ந்து ஒரு விசுவாசப்பிரமாணம் உருவாக்கினர். இது நாயா கான்ஸ்தாந்தி நோபுள் விசுவாசப்பிரமாணம் என்று அறியுப்படுகிறது. இந்த வகை பிரமாணத்தையே திருச்சபைகள் பொதுவாக பயன்படுத்தி வருகின்றன. தூய ஆவியாரின் இறைக்கன்மையை சந்தேகப்பட்டவர்களுக்கு எதிராக சொல்லமைப்புக்கள் இந்த விசுவாசப் பிரமாணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**3. எபேசு (கி.பி. 431)**

எபேசு நகரில் வைத்து 431 -ல் நடைபெற்ற திருச்சங்கமே திருச்சபை வரலாற்றில் மூன்றாம் திருச்சங்கம். இது கிறிஸ்து ஒருவரே என்னும் கொள்கையை வலியுறுத்தியது. இரண்டாம் தியடாசியஸ் மன்னரே இத்திருச்சங்கத்துக்கு அழைப்பு விடுத்தார். அலக்சான்டிரியாவிலுள்ள புனித சிறில் இத்திருச்சங்கத்துக்கு தலைமை தாங்கி அலக்சான்டிரியாவில் உருவான இறையியல் சிந்தனைகளின் அடிப்படையில் கலந்து ஆலோசித்து தீர்மானங்கள் எடுக்கவும் செய்தார். அந்தியோக்கிய இறையியல் சிந்தனைகளை புறக்கணித்தனர் என்னும் குறைவு இத்திருச்சங்கத்துக்கு ஏற்பட்டது. அதனால் திருச்சபையில் மாபெரும் பிளவு ஏற்பட இத்திருச்சங்கம் காரணமானது. இதன் காரணமாக திருச்சபையில் அலக்சாண்ட்ரியர்களும், அந்தியோக்கியர்களும் இருபெரும் பிரிவுகளாக பிரிந்தனர். இரு கூட்டத்தினரும் உண்மை விசுவாசத்துக்காக போராடியவர்கள் ஆவார். ஆனால் ஒருவருக்கொருவர் மாறுபட்ட சிந்தனைகளை உருவாக்கிய இரு கூட்டத்தினரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதில் தோல்வி கண்டனர். இன்றும் நிலை கொள்கின்றதான பிளவு எபேசு திருச்சங்கத்தின் விளைவாக ஏற்பட்டதாகும். ஆனால் நாம் வாழ்கின்ற இந்த நாட்களில் எபேசிலுள்ள இரு பிரிவுகளையும் இன்னும் தெளிவாக புரிந்துக் கொள்ள முடிகிறது. அலக்சான்டிரியர்கள் ஒரே ஆளுமைக்கு, அந்தியோக்கியர்கள் இரண்டு இயல்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். இயேசுவுக்கு இறைவனும், மனிதனுமான இரண்டு ஆளுமைகள் உண்டு என்றும், மனிதனான இயேசுவின் தாய் மட்டுமே கன்னிமரியாள் என்றும் அதனால் கன்னிமரியாளை இறையன்னை என்று அழைக்காமல் இயேசுவின் தாய் என்று அழைக்க

www.malankaralibrary.com

வேண்டும் என்றும் தென் என்பவர் கற்பித்தார். எனவே இதனை நெஸ்தோரியன் திரிபு கொள்கை என்று கூறுவர். இதனை இத்திருச்சங்கம் எதிர்த்தது.

**4. கல்க்கதோனியா (கால்செதோன்) (கி.பி. 451)**

இயேசு கிறிஸ்துவின் ஒரே ஆளுமையும் இரண்டு இயல்புகளையும் ஒன்றுபோல் எடுத்துரைக்கின்றதான அந்தியோக்கியா மற்றும் அலக்சான்ட்ரியா என்னும் இரண்டு சிந்தனைபாணிகளையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சியே கால்செதோனில் நடந்தது. நான் அலக்சான்ட்ரியன் சிந்தனை மட்டுமே உண்மை விசுவாசத்தின் வெளிப்பாடு என்று அவர்கள் சாடினர். அவ்வாறு இயேசுவின் இரண்டு இயல்புகளும் சேர்ந்து இயேசுவில் ஒரு ஆளுமையும் ஒரு மனித இயல்பும் மட்டுமே உண்டு என்று அவர்கள் கற்பித்தனர். ஓரியல்பு கொள்கை என்னும் இந்த முறிவுக் கொள்கையை கால்செதோன் திருச்சங்கம் மறுத்தது. இயேசுவில் ஒரு ஆளுமையும் இரண்டு அர்ப்பணமும் உண்டு என்று இத்திருச்சங்கம் கற்பித்தது. கால்செதோன் திருச்சங்கம் புறக்கணித்த யாக்கோபாய சபையை சார்ந்த மார் கிரிகோரியோஸ் என்ற ஆயர் 17-ம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்து பிரிந்திருந்த புத்தன்கூர் மக்களை ஒன்று திரட்டி யாக்கோபாய சபையை உருவாக்கினார்.

குறு வினா விடைகள்

1. திருச்சங்கங்கள் என்றால் என்ன? திருச்சபையில் பொதுவான பிரச்சனைகள் ஏற்படும் போது அதற்கு தீர்வு காண்பதற்காக திருச்சபைத் தலைவர்கள் ஒன்று கூடி விவாதித்த கூட்டங்கள்
2. உலகளாவிய திருச்சங்கங்கள் எத்தனை? 7
3. உலகளாவிய திருச்சங்கங்கள் யாவை? நீசேயா - 1 (325), கான்ஸ்தாந்திநோபுள் - 1 (381), எபேசு - (431), கல்க்கதானியா (கால்செதோன்) (451) கான்ஸ்தாந்திநோபுள் - II (553), கான்ஸ்தாந்திநோபுள் - III (680), நீசேயா - II (787),
4. இன்றைய துருக்கியின் பழைய பெயர் என்ன? ஆசியாமைனர்.
5. முதலாம் நீசேயா திருச்சங்கம் எப்போது நடைபெற்றது? கி.பி. 325
6. நீசேயாவின் இன்றைய பெயர் என்ன? துருக்கி நாட்டின் இஸ்னிக்
7. முதலாம் நீசேயாவில் நடைபெற்ற திருச்சங்கத்தில் பேர் கலந்து கொண்டதாகக் கூறப்படுகிறது? 318.
8. ஆரியன் திரிபு கொள்கையை கற்பித்தவர் யார்? ஆரியூ என்ற அலெக்சான்டிரியா குரு
9. ஆரியன் திரிபு கொள்கைக்கு எதிராக கூட்டப்பட்ட திருச்சங்கம் எது? முதலாம் நீசேயா திருச்சங்கம்
10. முதலாம் நீசேயா திருச்சங்கத்தைக் கூட்டியவர் யார்? கான்ஸ்தாந்தியின் மன்னர்
11. முதலாம் கான்ஸ்தாந்திநோபுள் திருச்சங்கம் எப்போது நடைபெற்றது? கி.பி. 381
12. கப்பதோசியன் தந்தையர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் யாவர்? புனித பசேலியோஸ் (+379), புனித நசியான்ஸ் கிரிகோரியார் (+390), பனித நிசா கிரிகோரியார் (+394)
13. முதலாம் கான்ஸ்தாந்திநோபுள் திருச்சங்கத்தை கூட்டியவர் யார்? மன்னர் முதலாம் தியடோசியஸ்
14. தற்போதைய விசுவாசப்பிரமாணத்தை உருவாக்கிய திருச்சங்கம் எது? நிசேயா கான்ஸ்தாந்திநோபுள் விசுவாசப்பிரமாணம்
15. எபேசு திருச்சங்கம் எப்போது நடைபெற்றது? கி.பி. 431
16. எபேசு திருச்சங்கத்தை கூட்டியவர் யார்? மன்னர் இரண்டாம் தியடோசியஸ்
17. எபேசு திருச்சங்கத்துக்கு தலைமை தாங்கியவர் யார்? அலக்சான்டிரியாவின் புனித சிறில்
18. எபேசு திருச்சங்கம் எந்த திரிபுக் கொள்கையை எதிர்த்தது? நெஸ்தோரியன் திரிபுக் கொள்கை
19. கல்க்கதானியா (கால்செதோன்) திருச்சங்கம் எப்போது நடைபெற்றது? கி.பி. 451
20. ஓரியல்பு கொள்கை என்னும் இந்த முறிவுக் கொள்கையை மறுத்த திருச்சங்கம் எது? கால்செதோன் திருச்சங்கம்

21. 17-ம் நூற்றாண்டில் இந்தியாவில் புத்தன்கூர் மக்களை ஒன்று திரட்டி யாக்கோபாய சபையை உருவாக்கிய கால்செதோன் திருச்சங்கத்தை புறக்கணித்த யாக்கோபாய சபையை சார்ந்த ஆயர் யார்? ஆயர் மார் கிரிகோரியோஸ்
22. இரண்டாம் கான்ஸ்தாந்திநோபுள் திருச்சங்கம் எப்போது நடைபெற்றது? கி.பி. 553
23. இரண்டாம் கான்ஸ்தாந்திநோபுள் திருச்சங்கத்திற்கு அழைப்பு விடுத்தவர் யார்? ஜஸ்டீனியன் மன்னர்
24. மூன்றாம் கான்ஸ்தாந்திநோபுள் திருச்சங்கம் எப்போது நடைபெற்றது? கி.பி. 680
25. பைசன்றெயின் மன்னர்களின் ஒருவிருப்பாற்றல் (Monotheleticism) என்னும் திரிபு கொள்கைக்கு எதிராக கூட்டப்பட்ட திருச்சங்கம் எது? மூன்றாம் கான்ஸ்தாந்திநோபுள் திருச்சங்கம்
26. இரண்டாம் நீசேயா திருச்சங்கம் எப்போது நடைபெற்றது? கி.பி. 787
27. திருவுருவ தகர்ப்பு என்னும் திரிபு கொள்கைக்கு எதிராக கூட்டப்பட்ட திருச்சங்கம் எது? இரண்டாம் நீசேயா திருச்சங்கம்
28. “ஆண்டவரே உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும். உம் வழிகளை எனக்குக் **கற்பித்தருளும்**. உமது உண்மை நெறியில் என்னை நடத்தி எனக்குக் கற்பித்தருளும். ஏனெனில் நீரே என் மீட்பராம் கடவுள்” (திருப்பாடல்கள் 25:4-5).

## பாடம் 8

## இடைக்காலத் திருச்சபை

பயிற்சி வினாக்கள்

1. பேப்பல் மாநிலத்தின் ஆரம்பம் யாது?

கி.பி. 313-ல் கான்ஸ்டான்டைன் மன்னரின் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மிலான் சாசனத்தின் வழியாக திருச்சபை சுதந்திரமாக்கப்பட்ட போது அதற்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டன. விளைநிலங்களை வைத்திருப்பதற்கான தனிப்பட்ட உரிமையும் திருச்சபைக்கு வழங்கப்பட்டது. மன்னர்களும், நல்லுள்ளம் படைத்த பிரபுக்களும் ஏராளமான விளைநிலங்களை திருச்சபைக்கு அன்பளிப்பாக வழங்கினர். அவ்வாறாக இத்தாலியிலுள்ள பல இடங்களும் திருத்தந்தையின் அதிகாரத்திற்குட்பட்டதாக மாறியது பேப்பல் மாநிலங்களின் தொடக்கம் இது என கருதலாம்.

லொம்பார்டுகள் என்றழைக்கப்படுகின்ற ஜாமன் இனமக்கள் கி.பி 568-ல் இத்தாலியின் வடக்குப்பகுதி வழியாக இத்தாலியைத் தாக்கினார். ஆனால் இத்தாலியை முறியடிக்க அவர்களால் இயலவில்லை. இத்தாலி நாட்டு மக்கள் திருத்தந்தையிடம் அடைக்கலம் புகுந்தனர். திருத்தந்தை இத்தாலியர்களுக்கு தலைமை தாங்க முன்வந்தார். லொம்பார்டுகளின் தாக்குதலை திருத்தந்தை தடை செய்ததால் திருத்தந்தையின் ஆதிக்கம் மேலும் இத்தாலியில் வளர்ந்து வந்தது.

கான்ஸ்தாந்திநோபுளில் உள்ள மன்னர்களே இத்தாலியை ஆட்சி செய்து வந்தனர். கி.பி 717 முதல் 790 வரை கான்ஸ்தாந்திநோபுளின் மன்னராக இருந்த மூன்றாம் சிங்கராயர் என்பவர் திருச்சபையின் மறைசார்ந்த செயல்களில் பிரச்சனைகளை உருவாக்கத் தொடங்கினார். சிலைவழிபாடு எனக் கருதி கிறிஸ்து மற்றும் புனிதர்களின் உருவங்களை அழிக்கவும், அவற்றிற்கு வணக்கம் செலுத்தியதை எதிர்க்கவும் செய்தார். ஆனால் மன்னரின் முடிவை திருத்தந்தை ஏற்கவில்லை. 787-ல் நடைபெற்ற நீசேயா திருச்சங்கம் புனிதர்களின் உருவங்களை வணங்குவதில் தவறு இல்லை என்று கற்பித்தது. இது இத்தாலியும், கான்ஸ்தாந்திநோபுளும் பிளவுபடக் காரணமானது. இவ்வாறாக திருத்தந்தையின் திருச்சபை மற்றும் அரசியல் அதிகாரங்கள் உறுதியோடு வளுவடையத் தொடங்கியது.

ஆனால் லொம்பார்டுகளின் மிரட்டலும் வலுவடைந்து கொண்டேயிருந்தது. இச்சூழ்நிலையில் திருத்தந்தை பிரான்சு மன்னரான பெப்பின் என்பரின் உதவியை நாடினார். திருத்தந்தை சக்கரியாவும் (741-752) திருத்தந்தை இரண்டாம் ஸ்தேவானும் (752-757) பெப்பின் மன்னரை ஏற்றுக்கொண்டனர். எனவே பைசன்றெயின் மன்னருடனும் கான்ஸ்தாந்திநோபுளுடனும் இருந்த உறவை திருத்தந்தையர்கள் முறித்துக் கொண்டனர். பெப்பின் மன்னர் லொம்பார்டுகளைத் தோற்கடித்து பல நகரங்களையும், விளைநிலங்களையும் திருத்தந்தைக்கு வழங்கினார். இந்த இடங்களின் மேல் நிலையான அதிகாரத்தை திருத்தந்தைக்கு அளிப்பதும், பிறகாலத்தில் எல்லா உதவிகளும் வழங்கப்படும்

என்ற வாக்குறுதி அடங்கியதுமான ஒரு பத்திரம் தயாரிக்கப்பட்டது. இது ‘பெப்பின் கொடை’ என்று அறியப்படுகிறது. தொடர்ந்து அதிகமான இடங்களில் திருத்தந்தைக்கு அதிகாரம் கிடைத்தது. அவ்வாறு பேப்பல் மாநிலம் என்னும் சுதந்திர நாடு திருத்தந்தையின் பெயரில் உதயமானது. அவ்வாறு திருத்தந்தை ஒரே நேரத்தில் ஆன்மீக அதிகாரியும், அரசியல் அதிகாரியுமாகத் திகழ்ந்தார்.

2. 'பெப்பின் கொடை' என்றால் என்ன?

பெப்பின் மன்னர் லொம்பார்டுகளைத் தோற்கடித்து பல நகரங்களையும், விளைநிலங்களையும் திருத்தந்தைக்கு வழங்கினார். இந்த இடங்களின் மேல் நிலையான அதிகாரத்தை திருத்தந்தைக்கு அளிப்பதும், பிறகாலத்தில் எல்லா உதவிகளும் வழங்கப்படும் என்ற வாக்குறுதி அடங்கியதுமான ஒரு பத்திரம் தயாரிக்கப்பட்டது. இது ‘பெப்பின் கொடை’ என்று அறியப்படுகிறது.

3. இடைக்காலத் திருச்சபையின் மறுமலர்ச்சி எவ்வாறிருந்தது?

இடைக்காலத்தில் பொலிவிழந்த திருச்சபையின் புதுப்பித்தலுக்காக முதலில் முன்வந்தவர்கள் துறவற சமூகத்தினர் ஆவார். பிரான்சில் உள்ள க்ளூனி என்னும் இடத்தில் கி.பி 910-ல் நிறுவப்பட்ட துறவற சமூகம் க்ளூனியன் சமூகம் என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. நாளடைவில் இந்த க்ளூனியன் ஆசிரமம் புதுப்பித்தல் இயக்கங்களின் மையமாகத் திகழ்ந்தது. திருச்சபையின் அதிகாரிகளுக்கு உதவுவதில் க்ளூனி துறவற சமூகத்தினர் மிகுந்த கவனம் செலுத்தினர். மிகவும் கடுமையான சட்டங்களுடன் கூடிய துறவற சமூகம் அமைப்பதில் அவர்கள் ஆர்வம் காட்டினர். வேலைகளிலிருந்து மாறி செபங்களிலும், தியானங்களிலும் அவர்கள் தங்கள் வாழ்க்கையை செலவழித்தனர். இவர்களின் இந்த சிந்தனைகள் பிற துறவற சமூகத்தினரையும் கவர்ந்தது.

துறவற சமூகத்தின் புதுப்பித்தலைத் தொடர்ந்து திருத்தந்தையின் தலைமையிலும் புதுப்பித்தல் நடைபெற்றது. இதனைத் தொடங்கி வைத்தவர் ஒன்பதாம் சிங்கராயர் திருத்தந்தை ஆவார் (1049-1054). அவரைத் தொடர்ந்து வந்த திருத்தந்தையர்களும் புதுப்பித்தலுக்கு தலைமை வகித்தனர். இக்கால கட்டத்தில் திருச்சபைக்கு ஆன்மீகமான விடுதலை அளிக்க தங்களையே கையளித்தவர்கள் புனித பிரான்சிஸ் அசிசி, புனித பெர்னர்து, புனித கிளாரா, புனித டொமினிக் மற்றும் குட்மான் போன்றோர் ஆவர். அவர்களால் நிறுவப்பட்ட துறவறசமூகங்கள் திருச்சபையை மிகவும் வலுப்படுத்தியது.

4. ஒழுங்கு நடவடிக்கை என்றால் என்ன? **(Inquisition)**

திருச்சபையின் புதுப்பித்தலுக்காக திருச்சபையில் ஒழுங்கு நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டன. திருச்சபையின் உள்ளிருக்கும் தவறான போதனைகளை தடை செய்தல், விசுவாசத்துக்கு எதிராக உள்ள செயல்களைக் கண்டுபிடித்தல், மதத்துக்கு எதிரான செயல்பாடுகளை தடைசெய்தல், தவறு செய்பவர்களை தண்டித்தல், விசுவாசத்துக்கு எதிராக உள்ள நூல்களை தடை செய்தல் போன்ற செயல்களுக்காக உரோமில் திருத்தந்தை ஒன்பதாம் கிரிகோரியார் (1227-1241) நிறுவிய சிறப்பு ஒழுங்கு முறையே Inquisition என்ற ஒழுங்கு நடவடிக்கையாகும். இந்த இயக்கத்தின் எதிர்நோக்கு நல்லதாக இருந்தது. ஆனால் நாளடைவில் இந்த இயக்கத்திற்கு பின்னடைவு ஏற்பட்டது. கிறிஸ்தவ அருளுக்குத் தகாத பல தண்டனை நடவடிக்கைகளையும் அவர்கள் செயல்படுத்தினர். மனித உரிமை பலருக்கும் மறுக்கப்பட்டது. இதன் விளைவாக பலர் இன்னல்களை அனுபவித்தனர். இவை அனைத்தும் திருச்சபையின் மனித இயல்பின் தோல்விகளே ஆகும்.

5. சிலுவைப் போர்களையும் அதனை விளைவுகளையும் விளக்குக?

ஏழாம் நூற்றாண்டில் ஆரம்பமான இஸ்லாம் மதம் போர்களின் வழியாக பல இடங்களையும் கைப்பற்றி கிறிஸ்தவ கலாச்சாரத்தையும், கிறிஸ்தவ மதத்தையும் அதிக அளவில் அழித்தது. பாலஸ்தீனா, சிரியா, எகிப்து, பாரசீகம் போன்ற நாடுகளும் அந்தியோக்கியா, எருசலேம், அலக்சான்ட்ரியா போன்ற பிதாபிதாக்களின் ஆட்சித் தளங்களும் இஸ்லாமியர்களின் ஆட்சிக்கு உட்பட்டன. இஸ்லாமியர்களின் இந்த வளர்ச்சி திருச்சபைக்கு ஒரு மிரட்டலாக மாறியது. புனித இடங்கள் அனைத்தும் இஸ்லாமியர்களின் கைவசமானது.

இச் சூழ்நிலையில் பதினொன்றாம் நூற்றாண்டில் இஸ்லாமியர்களின் கையிலிருந்து புனித இடங்களையும் திருக்கல்லறையையும் மீட்டு இஸ்லாமியர்களின் ஆக்கிரமிப்பில் இருந்து மேற்கத்திய ஐரோப்பாவை பாதுகாப்பதற்காக திருத்தந்தையின் ஒப்புதலுடனும் ஆசீருடனும் மேற்கு நாட்டு கிறிஸ்தவர்கள் நடத்திய போராட்டங்களே சிலுவைப் போர்கள். சிலுவைப் போருக்கு போகலாம் என்று உறுதி மொழி கொண்டு நோன்பு இருந்தவர்களே சிலுவைப் போர் வீரர்கள். இதன் அடையாளமாக அவர்கள் தோளில் சிலுவை அடையாளமுள்ள ஆடையை

www.malankaralibrary.com

அணிந்திருப்பர். அதனாலேயே அவர்கள் நடத்திய போர்கள் சிலுவைப் போர்கள் என்று அழைக்கப்படுகின்றன.

1095-ல் க்ளெர்மோன் என்ற இடத்தில் வைத்து நடைபெற்ற திருச்சங்கத்தில் இரண்டாம் அர்பன் என்னும் திருத்தந்தை சிலுவைப் போர் எனும் கருத்தை முன்வைத்தார். 1095 முதல் 1272 வரை எட்டு சிலுவைப் போர்கள் நடைபெற்றன. அக்கால திருத்தந்தையர்கள் அனைவரும் சிலுவைப் போருக்கு வலுவான அழைப்பு விடுத்தனர்.

**சிலுவைப் போரின் பின் விளைவுகள்**

சிலுவைப் போர்கள் பொதுவாக வெற்றியைத் தந்தன. புனித இடங்கள் மீட்கப்பட்டன. மட்டுமன்று தங்கள் இடத்தை மீட்க முடியும் என்னும் ஆன்ம விசுவாசமும் கிறிஸ்தவர்களுக்கு கிடைத்தது. 1241-ல் எருசலேமிலுள்ள அதிகமான இலத்தீன் தேவாலயங்களும் வலுவடைந்து புத்துணர்வு பெற்றன. 1299-ல் எருசலேம், நசரேத்து, பெத்லகேம் போன்ற இடங்களை சுதந்திரமாக சந்திக்க திருப்பயணிகளால் முடிந்தது. அவ்வாறே இலத்தீன் குடியிருப்புகள் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட காரணமாக அமைந்தது சிலுவை போர்களாகும். திருப்பயணிகளின் வளர்ச்சிக்கு இப்போர்கள் வழிகோலியது. ஐரோப்பாவிலுள்ள மத நம்பிக்கையின் வளர்ச்சிக்கு இது உதவியது. உலகு சார்ந்ததும், கலாச்சாரம் சார்ந்ததுமான பல்வேறு நன்மைகள் சிலுவைப் போர்களினால் ஏற்பட்டன. கிழக்கு நாடுகளுடன் உறவு கொண்டு அவர்களுடன் வாணிபம் புரிவதற்கு மேற்கு நாடுகளுக்கு இது துணை புரிந்தது.

இந்த சிலுவைப் போர்களால் பல தீய விளைவுகளும் உருவாயின. இதில் நிரபராதிகள் இரத்தம் சிந்தவும், கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படவும் செய்தனர். கான்ஸ்தாந்திநோபுளில் நடைபெற்ற சிலுவைப் போர்கள் கிரேக்கத் திருச்சபைக்கும், இலத்தீன் திருச்சபைக்கும் இடையேயிருந்த பிரிவினையை வலுவடையச் செய்தது. புனித நாட்டை பாதுகாக்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் ஆரம்பமான சிலுவைப் போர்கள் சில வேளைகளில் தன்னலத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டது. அது சிலுவைப் போர்களுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

கிறிஸ்தவ விசுவாசம் பாதுகாக்கப்படவும், புண்ணிய தலங்கள் பாதுகாக்கப்படவும் கிறிஸ்தவர்கள் உயிரையும் பொருட்படுத்தாது போராடினார்கள். இது அவர்களின் திருச்சபை மீதுள்ள ஆழ்ந்த அன்பையும் தீவிரமான விசுவாசத்தின் அடையளமாகவும் அமைந்தது.

சிலுவைப் போர்களை கிறிஸ்தவ ஆன்மீகத்தின் அடிப்படையில் நியாயப்படுத்த இயலாது. காரணம் இலட்சியத்தை அடைய எத்தகைய வழிமுறையையும் கையாள இயலாது என்ற அறநெறி கொள்கைக்கு தோய்வு ஏற்பட்டது. ஆயுதங்களாலான வழி கிறிஸ்தவ வழி அன்று. சிலுவைப் போர்கள் என்னும் பெயரே முரண்பாடுடையது. அமைதியின் அடையாளமான சிலுவைக்கு போருடன் எந்த தொடர்பும் இல்லை. இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்களை முழுமையாக அழித்து விடக்கூடும் என்னும் சிந்தனையே சிலுவைப் போருக்கு காரணமாயின. எனினும் கிறிஸ்துவின் படிப்பினைகளை ஏற்று செயல்பட திருச்சபைக்கு கடமை உண்டு.

6. அவிஞ்ஞோண் வாசம் என்ன என்பதை விளக்குக?

திருச்சபையின் ஆரம்பம் முதல் பேதுருவின் வழிவந்தவர்களான திருந்தையர்களின் நிலையான இடம் உரோமை நகரமாகும். ஆனால் 1309 முல் 1376 வரை திருத்தந்தையர்களின் வாழிடம் பிரான்சு நாட்டிலுள்ள அவிஞ்ஞோண் என்னும் இடத்தில் அமைந்திருந்தது. இக்காலத்தில் திருத்தந்தையின் செயலகத்தில் பிரெஞ்சு ஆதிக்கம் வளர்ந்தது. இத்தாலியிலும், உரோமையிலும் அமைந்த பாதுகாப்பின்மையே திருத்தந்தையர்களை அவிஞ்ஞோண் நாட்டுக்கு இடம் பெயரச் செய்தது. பேப்பல் கட்சியைச் சார்ந்த குவல்ப் குடும்பத்தாரும், திருத்தந்தைக்கு எதிரான கிபல்னஸ் குடும்பத்தாரும் இத்தாலியை போர்க்களமாக மாற்றினர். இத்தகைய சூழல்களில் அடைக்கலம் தேடி பிற இடங்களில் வாழ்வது வழக்கம். ஆனால் எதிர்பாராத விதமாகவே அவிஞ்ஞோண் பல ஆண்டுகள் திருத்தந்தையர்களின் தங்குமிடமாக மாறியது.

1305-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்தாம் க்ளமென்ட் திருத்தந்தை உடல்நலக் குறைவால் உரோமை நகருக்குச் செல்லவில்லை. அவர் டொமினிக்கன் துவற சமூகத்தினரின் விருந்தினராக அவிஞ்ஞோணில் வாழ்ந்தார். அவரைத் தொடர்ந்து வந்த திருத்தந்தை 22-ம் யோவான் அவிஞ்ஞோணின் ஆயராக இருந்தவர். இக்காலத்தில் இத்தாலியிலும் உரோமிலும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்ததனால் அவரால் உரோமுக்குச் செல்ல இயலவில்லை. 1348 -ல் அன்றைய திருத்தந்தை அவிஞ்ஞோணை விலை கொடுத்து வாங்கி ஓர் ஆயர் இல்லம் கட்டினார். இவ்வாறு 1309 முதல் 1376 வரை திருத்தந்தையர்கள் அவிஞ்ஞோணில் வாழ்ந்து திருச்சபையை வழிநடத்தினர். 1377-ல் திருத்தந்தை பதினொன்றாம் கிரிகோரியார்

வத்திக்கானுக்கு திரும்பி வந்தது முதல் திருத்தந்தையர்களின் அவிஞ்ஞோண் வாசம் முடிவுற்றது.

குறு வினா விடைகள்

1. எதன் வழியாக திருச்சபை சுதந்திரமாக்கப்பட்ட போது அதற்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டன? மிலான் சாசனத்தின்
2. கி.பி. 313-ல் மிலான் சாசனம் யார் காலத்தில் உருவாக்கப்பட்டது? கான்ஸ்டான்டைன் மன்னர்
3. கி.பி 568-ல் இத்தாலியின் வடக்குப்பகுதி வழியாக இத்தாலியைத் தாக்கியவர்கள் யாவர்? லொம்பார்டுகள் எனப்படும் ஜாமன் இன மக்கள்
4. திருச்சபையில் தலையிட்டு பிரச்சனைகளை உருவாக்கிய கி.பி 717 முதல் 790 வரை கான்ஸ்தாந்திநோபுளின் மன்னர் யார்? மூன்றாம் சிங்கராயர்
5. சிலைவழிபாடு எனக் கருதி கிறிஸ்து மற்றும் புனிதர்களின் உருவங்களை அழிக்கவும், அவற்றிற்கு வணக்கம் செலுத்தியதை எதிர்க்கவும் செய்த கான்ஸ்தாந்திநோபுளின் மன்னர் யார்? மூன்றாம் சிங்கராயர்
6. புனிதர்களின் உருவங்களை வணங்குவதில் தவறு இல்லை என்று கற்பித்த திருச்சங்கம் எது? 787-ல் நடைபெற்ற நீசேயா திருச்சங்கம்.
7. லொம்பார்டுகளின் மிரட்டலை சமாளிக்க திருத்தந்தை யாருடைய உதவியை நாடினார்? பிரான்சு மன்னரான பெப்பின்
8. பிரான்சு மன்னரான பெப்பினை ஏற்றுக்கொண்ட திருத்தந்தையர்கள் யாவர்? திருத்தந்தை சக்கரியா (741-752) திருத்தந்தை இரண்டாம் ஸ்தேவான் (752-757)
9. பெப்பின் மன்னர் லொம்பார்டுகளைத் தோற்கடித்து பிற்காலத்தில் எல்லா உதவிகளும் வழங்கப்படும் என்ற பத்திரத்தின் பெயர் என்ன? ‘பெப்பின் கொடை’
10. ‘பெப்பின் கொடை’ மூலம் உரவான திருத்தநதைக்கு அதிகாரமுள்ள தனி சுதந்திர நாடு எது? பேப்பல் மாநிலம்
11. பேப்பல் மாநிலம் வழியாக திருத்தந்தையின் இரு முக்கிய அதிகாரங்கள் யாவை? ஆன்மீக அதிகாரியும், அரசியல் அதிகாரியும்
12. மன்னர் பெப்பினின் மகனான மன்னர் யார்? சார்லிமெயின்
13. கி.பி 800-ல் சார்லிமெயினை உரோமைப் பேரரசின் மன்னராக முடிசூட்டியவர் யார்? திருத்தந்தை மூன்றாம் சிங்கராயர் (795-816)
14. உரோமை மன்னர் திருத்தந்தையால் முடிசூட்டப்பட வேண்டும் மற்றும் உரோமை மன்னரே திருச்சபையின் பாதுகாவலராக வேண்டும் என்ற சிந்தனை யார் காலம் முதல் ஆரம்பமானது? திருத்தந்தை மூன்றாம் சிங்கராயர் (795-816)
15. கி.பி. 814-ல் சார்லிமெயின் மன்னர் இறந்த பின்னர் எத்தனை காலம் திருச்சபையின் இருளடைந்த காலமாகக் கருதப்படுகிறது? 200 ஆண்டுகள்.
16. சார்லிமெயின் மன்னருக்குப் பின்னர் உரோமைப் பேரரசு சின்னஞ்சிறு அரசுகளாகப் பிரிக்கப்பட்டு எத்தகைய ஆட்சி முறை உருவானது? பிரபுத்துவமுறை
17. திருத்தந்தையர் பதவிக்கு கடும் போட்டி ஏற்பட்டதால் கி.பி 867- க்கும் 1048-க்கும் இடையே கொல்லப்பட்ட திருத்தந்தையர்கள் எத்தனை? 9.
18. இடைக்காலத் திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு துணை புரிந்த க்ளூனியன் ஆசிரமம் எப்போது ஆரம்பமானது? கி.பி 910-ல்
19. இடைக்காலத் திருச்சபையின் க்ளூனியன் ஆசிரமம் எங்கே ஆரம்பமானது? பிரான்சு நாட்டில்
20. க்ளூனி துறவற சமூகத்தின் புதுப்பித்தலோடு திருத்தந்தையின் தலைமையில் புதுப்பித்தலை துவங்கியவர் யார்? திருத்தந்தை ஒன்பதாம் சிங்கராயர்
21. இடைக்காலத் திருச்சபைக்கு ஆன்மீகமான விடுதலை வழங்க தங்களையே கையளித்தவர்கள் யாவர்? புனித பிரான்சிஸ் அசிசி, புனித பெர்னர்து, புனித கிளாரா, புனித டொமினிக் மற்றும் குட்மான்
22. இடைக்காலத் திருச்சபையின் புதுப்பித்தலுக்காக திருச்சபையில் ஒழுங்கு நடவடிக்கைள் (Inquisition) நிறுவியவர் யார்? திருத்தந்தை ஒன்பதாம் கிரிகோரியார் (1227-1241)

www.malankaralibrary.com

23. இஸ்லாம் மதம் போர்களின் வழியாக கைப்பற்றிய கிறிஸ்தவ மையங்கள் எவை? பாலஸ்தீனா, சிரியா, எகிப்து, பாரசீகம் போன்ற நாடுகளும் அந்தியோக்கியா, எருசலேம், அலக்சான்ட்ரியா பிதாப்பிதா மையங்களும்
24. பதினொன்றாம் நூற்றாண்டில் இஸ்லாமியர்களின் கையிலிருந்து புனித இடங்களையும் திருக்கல்லறையையும் மீட்க திருத்தந்தையின் ஒப்புதலுடனும் ஆசீருடனும் மேற்கு நாட்டு கிறிஸ்தவர்கள் நடத்திய போராட்டங்களுக்குப் பெயர் என்ன? சிலுவைப் போர்கள்.
25. சிலுவைப் போருக்கு போகலாம் என்று உறுதி மொழி கொண்டு நோன்பு இருந்தவர்கள் எந்த அடையாளமுள்ள ஆடையை அணிந்திருப்பர்? சிலுவை.
26. இரண்டாம் அர்பன் என்னும் திருத்தந்தை சிலுவைப் போர் எனும் கருத்தை எப்போது முன்வைத்தார்? 1095-ல் க்ளெர்மோன் என்ற இடத்து திருச்சங்கத்தில்
27. 1095 முதல் 1272 வரை நடைபெற்ற மொத்த சிலுவைப் போர்கள் எத்தனை? எட்டு
28. எருசலேம், நசரேத்து, பெத்லகேம் போன்ற புனித இடங்களை எப்போது முதல் சுதந்திரமாக சந்திக்க திருப்பயணிகளால் முடிந்தது? 1299 முதல்
29. கிரேக்கத் திருச்சபைக்கும், இலத்தீன் திருச்சபைக்கும் இடையேயான பிளவை வலுவடையச் செய்த சிலுவைப் போர் எது? கான்ஸ்தாந்திநோபுளில் நடைபெற்ற சிலுவைப் போர்கள்
30. திருச்சபையின் சிலுவைப் போர்களை எதன் அடிப்படையில் நியாயப்படுத்த இயலாது? கிறிஸ்தவ ஆன்மீகத்தின்
31. இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்களை முழுமையாக அழித்து விடக்கூடும் என்னும் சிந்தனை இடைக்காலத் திருச்சபையில் எதற்கு காரணமாயின? சிலுவைப் போருக்கு
32. 1309 முதல் 1376 வரை திருத்தந்தையர்களின் வாழிடமான பிரான்சு நாட்டின் பகுதி எது? அவிஞ்ஞோண்
33. இடைக்காலத் திருச்சபையில் இத்தாலியை போர்க்களமாக மாற்றியவர்கள் யாவர்? பேப்பல் கட்சியைச் சார்ந்த குவல்ப் குடும்பத்தாரும், திருத்தந்தைக்கு எதிரான கிபல்னஸ் குடும்பத்தாரும்.
34. உடல்நலக் குறைவால் உரோமை நகருக்குச் செல்ல இயலாமல் 1305-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட அவிஞ்ஞோணில் வாழ்ந்த திருத்தந்தை யார்? திருத்தந்தை ஐந்தாம் கிளமென்ட்
35. அவிஞ்ஞோணில் வாழ்ந்த அவிஞ்ஞோண் ஆயரான திருத்தந்தை யார்? திருத்தந்தை 22-ம் யோவான்.
36. அவிஞ்ஞோணில் திருத்தந்தையர்கள் திருச்சபையை வழிநடத்திய காலம் எப்போது? 1309 முதல் 1376 வரை
37. அவிஞ்ஞோணிலிருந்து வத்திக்கானுக்கு திரும்பி வந்த முதல் திருத்தந்தை யார்? 1377-ல் திருத்தந்தை பதினொன்றாம் கிரிகோரியார்
38. இடைக்காலத் திருச்சபையின் ஆன்மீக பின்னடைவு எதற்கு வழிவகுத்தது? புரொட்டஸ்டன்ட் புரட்சிக்கு
39. "நீங்கள் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப் போல் ஆகுங்கள். கிறிஸ்து உங்களுக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியும் **காணிக்கையுமாகக்** கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள்" (எபேசியர் 5:1-2)

## பாடம் 9

## புரொட்டஸ்டன்ட் புரட்சியும் திரிதெந்து திருச்சங்கமும்

பயிற்சி வினாக்கள்

1. புரொட்டஸ்டன்ட் புரட்சி ஏற்படக் காரணம் யாது?

புரொட்டஸ்டன்ட் புரட்சி ஏற்பட பல காரணங்கள் இருந்தன. இருப்பினும் இடைக்காலத் திருச்சபையின் ஆன்மீக வீழ்ச்சியே இதன் முக்கிய காரணமாகும். இடைக்காலத் திருச்சபையின் இறையியல், திருவழிபாடு மற்றும் திருச்சபையின் தலைமை பற்றிய அறியாமை போன்றவைகளும் இதற்குக் காரணமாயின.

www.malankaralibrary.com

மேலும் சமூகத்தில் வளர்ந்து வந்த தேசீய உணர்வு, ஏகாதிபத்திய ஆட்சி முறை, மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சி இவையனைத்தும் மார்ட்டின் லூதரின் புதுப்பித்தல் சிந்தனைகளுக்கு காரணமாயின. தத்துவ ஞானிகளின் உந்ததுதலின் வழியாக திருச்சபையையும், அருளடையாளங்களையும், அதிகாரத்தையும் பலர் எதிர்த்தனர்.

பழக்க வழக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததனால் திருவழிபாடுகள் வெறும் சடங்குகளாகவும் உயிரோட்டமற்றவையாகவும் மாறின. திருத்தந்தையர்களின் அதிகாரத்தையும் இத்தாலிய ஆதிக்கத்தையும் அவர்கள் எதிர்த்தனர். 1529-ல் ஜெர்மனியில் வைத்து திருச்சபைக்கு எதிராக நடைபெற்ற கண்டனக் கூட்டத்திலிருந்து புரொட்டஸ்டன்ட் என்னும் சொல் உருவானது.

2. குற்றத் தண்டனை நீக்கு சலுகை என்றால் என்ன?

லூதரின் புதுப்பித்தல் ஏற்பட பல காரணங்கள் இருந்தாலும் முக்கிய காரணமாக அமைந்தது, குற்றத் தண்டனைக்கு சலுகையை பற்றிய விவாதமே ஆகும்.

பாவம் செய்த ஒருவர் ஒப்புரவின் வழியாக பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொண்டாலும் பாவத்தின் பலனான தண்டனையிலிருந்து விடுபட வேண்டுமெனில் அவன் தன் வாழ்நாட்களிலோ அல்லது உத்தரிக்கும் இடத்திலோ பரிகாரம் செய்ய வேண்டும். ஒருவன் உண்மையான மனவருந்துதலோடும், மிகுந்த தயாரிப்போடும் திருச்சபை அறிவுறுத்தும் பரிகாரம் செய்வதன் வழியாக தற்காலிக தண்டனையிலிருந்து ஆண்டவர் அவருக்கு விடுதலையளித்தார். ஆண்டவர் அளிக்கின்ற விடுதலையையே குற்றத் தண்டனை நீக்கு சலுகை என்கிறோம். இவ்விடுதலையை அளிக்க திருச்சபைக்கு அதிகாரம் உண்டு. ஒருவர் பரிகாரம் செய்வதன் வழியாக பாவ மன்னிப்பு பெறுகிறார். அதுபோன்று உத்தரிக்கும் இடத்தில் இருக்கும் ஆன்மாக்களுக்காக பரிகாரம் செய்யும் போது அவர்களுக்கும் பாவமன்னிப்புக் கிடைக்கிறது.

உரோமையிலுள்ள புனித பேதுரு பெருங்கோயிலின் (பசிலிக்கா) கட்டுமான பணி விரைவில் முடிய நன்கொடைகள் வழங்குவதன் வழியாக குற்றத் தண்டனை நீக்கு சலுகை கிடைக்கும் என்று 1510-ல் இரண்டாம் ஜீலியஸ் திருத்தந்தையும் 1513-ல் பத்தாம் சிங்கராயர் திருத்தந்தையும் பறைசாற்றினர். இச்செய்தியை ஜெர்மனியிலுள்ள மறைமாவட்டங்களில் அறிவிக்கும் பணியை டொமினிக்கன் துறவிகளிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக குற்றத் தண்டனை நீக்கு சலுகையின் வல்லமை, பலன் போன்றவைகளைப் பற்றி மிகவும் மிகைப்படுத்திக் கூறினர். இதனைக் கேட்ட மார்ட்டின் லூதர் கோபமுற்று அன்றைய ஆயர் ஆல்பர்ட் அவர்களுக்கு 1517-ல் கடிதம் ஒன்றை எழுதினார். குற்றத்தண்டனை நீக்கு சலுகை உத்தரிக்கும் இடம், மனஸ்தாபம், திருத்தந்தையின் வழுவாவரம் ஆகியவை அடங்கிய 95 கொள்கைகளை அவர் தயார் செய்தார். 1517 அக்டோபர் 31-ம் நாள் வூட்டன்பர்க் பேராலயத்தின் வாசலில் இதை ஒட்டி வைத்தார். இத்துடன் மார்ட்டின் லூதர் வெளிப்படையாக எதிர்ப்பை உருவாக்கினார்.

3. திரிதெந்து திருச்சங்கத்தையும் அதன் பயன்களையும் விளக்குக?

திருச்சபையை புதுப்பிப்பதற்கான சிலருடைய முயற்சிகள் புரொட்டஸ்டன்ட் புரட்சிக்கும் திருச்சபையின் பிளவுக்கும் வழிவகுத்தன. புதுப்பித்தல் என்னும் பெயரில் மார்ட்டின் லூதர், எட்டாம் ஹென்றி, கால்வின் போன்றோர் தலைமை வகித்த சமயப் புரட்சி கத்தோலிக்கத் திருச்சபையின் மரபு சார்ந்த நம்பிக்கையையும், அதிகாரத்தையும் எதிர்க்கும் சவாலாக அமைந்தது. இச்சூழ்நிலையில் திருச்சபையின் புதுப்பித்தலுக்காக கத்தோலிக்கத் திருச்சபை ஒன்று கூட்டிய திருச்சங்கமே திரித்தெந்து திருச்சங்கம்.

புதுப்பித்தலின் கருத்துக்களைக் கண்டிக்க ஒரு திருச்சங்கம் கூட்ட வேண்டும் என்று திருத்தந்தை ஏழாம் கிளமெண்ட் தீர்மானித்தார். ஆனால் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையே போர் ஏற்பட்டதால் இது நடக்கவில்லை. ஆனால் பின்னர் வந்த மூன்றாம் பவுல் திருத்தந்தை புதுப்பித்தலை முன் வைத்து தூய்மையிலும் அறிவிலும் முதிர்ந்த கர்தினால்களை சேர்த்து கர்தினால் குழுவை விரிவாக்கம் செய்தார். 1542-ல் இத்தாலியிலுள்ள திரிதெந்து என்னும் இடத்தில் ஒரு திருச்சங்கம் கூட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் விளைவாக 1545 டிசம்பர் 13-ம் நாள் திருச்சங்கம் துவங்கப்பட்டது. போரின் காரணமாக மூன்று பகுதிகளாக நடத்திய திருச்சங்கம் 1563 டிசம்பர் 3-ம் நாள் முடிவுற்றது.

நம்பிக்கை தொடர்பாக புரொட்டஸ்டன்டுகளின் எல்லா சந்தேகங்களும் திருச்சங்கத்தில் விவாதிக்கப்பட்டு, திருச்சபையின் உண்மையான விசுவாசம் பறைசாற்றப்பட்டது.

www.malankaralibrary.com

திருச்சபையின் அதிகாரப் பூர்வமான போதனைகளை உள்ளடக்கிய ஒரு மறைக்கல்வி நூல் (Trent Catechism) வெளியிடுதல், குருத்துவ பயிற்சிக்காக குருமடங்கள், வேளை செப புத்தகங்கள், திருப்பலி தக்ஸா போன்றவை வெளியிடுதல், மறை நூல், திருச்சபைத் தந்தையர்களின் போதனைகள், நன்னெறி நூல் போன்றவற்றை ஆராய்ச்சிகளுக்கும், மேற்படிப்புக்கும் பயன்படுத்துதல் போன்றவை திருச்சங்கத்தின் முக்கியத் தீர்மானங்களாகும். குருக்களின் மணத்துறவு வாழ்விற்கு திருச்சங்கம் அறிவுறுத்தியது.

தொடர்ந்து வந்த திருத்தந்தையர்கள் திருச்சங்கத்தின் தீர்மானங்களை விரைவில் நடைமுறைப்படுத்தினர். குருத்துவப் படிப்பிற்காக கிரிகோரியன் பல்கலைக்கழகமும் பல கல்லூரிகளும் நிறுவப்பட்டன. உரோமையில் திருச்சபையின் ஆட்சிக்காக பேராலயங்கள் நிறுவப்பட்டன. கர்தினால்களின் தகுதியும் எண்ணிக்கையும் வரையறுக்கப்பட்டது. இத்திருச்சங்கத்தில் வைத்து தான் மறைநூலின் புத்தகங்கள் எவை என்று வரையறுக்கப்பட்டது.

திருச்சங்கத்தின் வெற்றி நிலையான பலனை தருவதாக அமைந்தது. நம்பிக்கையையும், நன்னெறிகளையும் குறித்து புரொட்டஸ்டன்ட் புரட்சி ஏற்படுத்திய சந்தேகங்கள் முடிந்த அளவு தீர்த்து வைக்கப்பட்டது. இதன் விளைவாக பொதுநிலையினருக்கு திருச்சபையில் உள்ள கடமைகளும், உரிமைகளும் எடுத்துரைக்கப்பட்டது. அரசர்கள் திருச்சபையின் ஆட்சியில் பங்கு கொள்வதை திருச்சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. திருச்சங்கத்தின் தீர்மானங்கள் படிப்படியாக நடைமுறைக்கு வந்தது.

4. திருச்சபையின் புதுப்பித்தலில் துறவற சமூகங்களின் பங்கு யாது?

16-ம் நூற்றாண்டில் பல துறவற சமூகங்களும் புதுப்பிக்கப்பட்டு காலகட்டத்தின் சவால்களை சந்திக்க தயாரானது. திருச்சபையின் புதுப்பித்தலுக்கு துறவிகளின் பங்கு அளவிட முடியாததாகும். அன்று செயல்பட்டு வந்த பிரான்சிஸ்கன், கர்ம்மலீத்தா, பெனடிக்டைன், சிஸ்டேர்சியன் போன்ற துறவற சமூகங்கள் தியாக உணர்வுடன் திரிதெந்து திருச்சங்கத்தின் புதுப்பித்தலுக்கு துணை புரிந்தன.

புரொட்டஸ்டன்ட் புரட்சிக்கு பின்னர் இக்னேஷியஸ் லயோலாவின் தலைமையில் உருவான துறவற சமூகமே இயேசு சபை. திருச்சபையின் புதுப்பித்தலுக்கு இயேசு சபை இக்காலத்தில் முக்கியப் பங்கு வகித்தது. கல்விக்கும், மறைபரப்புப் பணிக்கும் அவர்கள் முக்கியத்துவம் அளித்தனர். நற்செய்தியின் வழியாகவும், எழுத்தின் வழியாகவும் திருச்சபையின் புதுப்பித்தலுக்காக துணை புரிந்தவரே புனித பிரான்சிஸ் தெ சாலஸ் (1567-1622). ஏழைகளிடையே பணி புரிவதற்காக பல துறவற சமூகங்களை புனித வின்சென்ட் தெ பவுல் நிறுவி அதன் வழியாக பலருக்கும் உதவி செய்து வந்தார்.

5. 16-ாம் நூற்றாண்டின் மறைபரப்புப் பணிகளைக் குறித்த சுருக்கி எழுதுக?

16-ம் நூற்றாண்டில், புதிய உலகம் தேடிச் சென்ற மேற்கு நாட்டினரின் பயணங்கள் புதிய மறைதூது பணிக்கு துணை புரிந்தன. புதிய நாடுகளுக்கு வியாபாரிகளோடு மறைபரப்புப் பணியாளர்களும் பயணம் மேற்கொண்டனர். இதில் போர்த்துக்கீசியர்களும், ஸ்பெயின் நாட்டை சார்ந்தவர்களும் மிக அதிகமாவர். மறைதூது பணியாளர்களின் செயல்களின் வழியாக பல கிழக்கு நாடுகளிலும் கிறிஸ்தவ சமயம் பரவத் தொடங்கியது.

கி.பி. 52-ம் ஆண்டில் புனித தோமையார் இந்தியாவில் நற்செய்தி அறிவித்தாலும் 16-ம் நூற்றாண்டில் நடந்த மறைத்தூது பணியின் விளைவாகவே கிறிஸ்து மதம் இந்தியாவில் வேகமாக செழித்து வளர்ந்து பரவியது.

புனித பிரான்சிஸ் சவேரியார் இந்தியாவைப் போன்று ஜப்பானிலும் கிறிஸ்தவ மதத்தைப் பறைசாற்றினார். அங்கு இயேசு சபை குருக்கள் மறைத்தூது பணிக்கு தலைமை வகித்தனர்.

சீனாவில் 7-ம் நூற்றாண்டிலேயே பாரசீகர்கள் மறைத்தூதுப் பணியாற்றத் தொடங்கினர். 13-ாம் நூற்றாண்டில் பிரான்சிஸ்கன் குருக்களும், 16-ாம் நூற்றாண்டில் இயேசு சபை குருக்களும் மறைபரப்புப் பணியாற்றினாலும் வேத கலாபனையின் காரணமாக சீனாவில் திருச்சபை வளரவில்லை.

16-ாம் நூற்றாண்டிலேயே தாய்லாந்திலும் பிலிப்பைன்சிலும் மறைதூதுப் பணியின் வழியாக திருச்சபை வளர்ந்து வந்தது.

1415-ல் போர்த்துகீசிய மறைதூது பணியாளர்கள் நற்செய்தியுடன் ஆப்பிரிக்காவுக்கு கடந்து சென்றனர். பின்னர் பிரான்சிஸ்கன் துறவறசமூகமும், இயேசு சபையினரும் அங்கு மறைதூது பணியாற்றினர்.

போர்த்துக்கல், ஸ்பெயின், பிரான்சு போன்ற ஐரோப்பிய நாடுகள் 16-ாம் நூற்றாண்டு முதல் அமெரிக்காவின் பல இடங்களில் தங்கள் குடியிருப்புகளை நிறுவியிருந்தனர். அவ்வாறு அமெரிக்காவிலும் வட அமெரிக்காவிலும் நற்செய்தி அறிவிக்கப்பட்டது.

அயர்லாந்திலிருந்து 18-ாம் நூற்றாண்டில் ஆஸ்திரேலியாவுக்கு நாடு கடத்தப்பட்ட கத்தோலிக்கர்களே அவ்விடத்தின் முதல் கிறிஸ்தவர்கள் ஆவர். அவர்களுடன் மூன்று குருக்களும் இருந்தனர். அவர்களின் முயற்சியின் விளைவாக கிறிஸ்தவ மதம் அங்கு வளர்ந்தது.

1828-ம் ஆண்டில் நியூசிலாந்தில் கத்தோலிக்க விசுவாசம் சென்றடைந்தது.

15 மற்றும் 16-ாம் நூற்றாண்டில் திருச்சபை வரலாற்றையே நாம் இங்கு கண்டோம். புரொட்டஸ்டன்ட் புரட்சியாளர்கள் திருச்சபையில் பிளவு ஏற்படுத்தியது வேதனை மிகுந்த ஒன்றாகும். ஆனால் இச்சூழ்நிலை திருச்சபையின் புதுப்பித்தலுக்காக ஆண்டவரால் வழங்கப்பட்டது எனலாம். ஆற்றலோடு முன்னேற கடவுள் திருச்சபையை ஆயத்தம் செய்தார் எனலாம்.

தடைகளின் போது பதறாமல் தூய ஆவியார் திருச்சபையை வழிநடத்தியதையே நாம் இங்கு கண்டோம். 16-ாம் நூற்றாண்டின் மறைத்தூது பணியாளர்கள் உலகெங்கும் சென்று நற்செய்தி பறைசாற்றினர். அதற்காக அவர்கள் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்தனர். அவ்வாறு இயேசுவின் நற்செய்தி பல இடங்களிலும் பரவியது.

இன்னும் இயேசுவை அறியாதவர்களுக்கு இயேசுவின் நற்செய்தியை அறிவிக்க நமக்கு கடமையுண்டு. அதுபோன்று இயேசுவின் நற்செய்தியைப் பெற்றுக் கொண்டவர்கள் உண்மைத் தன்மையுடன் நற்செய்திக்கு சான்று பகர கடமைப்பட்டுள்ளவர்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்வோம்.

குறுவினா விடைகள்

1. திருச்சபையின் இருண்ட காலம் என்று அறியப்படுவது எது? எட்டாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரை
2. ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஆரம்பமான காலம் எது? 14-ம் நூற்றாண்டுக்குப் பின்னர்.
3. புரொட்டஸ்டன்ட் புரட்சி ஏற்பட மிக முக்கிய காரணம் என்ன? இடைக்காலத் திருச்சபையின் ஆன்மீக வீழ்ச்சி
4. புரொட்டஸ்டன்ட் என்னும் சொல் எப்படி உருவானது? 1529-ல் ஜெர்மனியில் ஸ்பையரில் வைத்து திருச்சபைக்கு எதிராக நடைபெற்ற கண்டனக் கூட்டம்
5. மார்ட்டின் லூதர் எங்கே எப்போது பிறந்தார்? ஜெர்மனியின் துருன்ஜியா என்னும் கிராமத்தில் 1483-ல்
6. மார்ட்டின் லூதர் எத்துவற சமூகத்தில் சேர்ந்து 1507-ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்? அகுஸ்தீனார் துவற சமூகத்தில்
7. கடவுளின் இறுதித் தீர்ப்பு பற்றிய மார்ட்டின் லூதரின் சிந்தனைகளுக்கு ஆறுதளித்த இறைவார்த்தை எது? “நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால், வாழ்வு அடைவர்” (உரோமையர் 1:17).
8. திருச்சபையில் 16-ம் நூற்றாண்டு வரைப் புனிதமாகக் கருதப்பட்ட அருளடையாளங்களை எதிர்த்த புரட்சியாளர் யார்? மார்ட்டின் லூதர்
9. லூதரின் புதுப்பித்தல் சிந்தனைகளுக்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது எது? குற்றத் தண்டனைக்கு சலுகையை பற்றிய விவாதம்
10. பாவம் செய்த ஒருவருக்கு உண்மையான மனவருந்துதலோடும், மிகுந்த தயாரிப்போடும் திருச்சபை அறிவுறுத்தும் பரிகாரச் செயலுக்குப் பெயர் என்ன? குற்றத் தண்டனை நீக்கு சலுகை
11. உரோமையின் புனித பேதுரு பெருங்கோயிலின் (பசிலிக்கா) கட்டுமான பணி விரைவில் முடிய குற்றத் தண்டனை நீக்கு சலுகை மூலம் நன்கொடைகள் வழங்க பரிந்துரைத்த திருத்தந்தையர்கள் யாவர்? திருத்தந்தை இரண்டாம் ஜீலியஸ், திருத்தந்தை பத்தாம் சிங்கராயர்
12. மார்ட்டின் லூதரின் திருச்சபைக்கு எதிரான கொள்கைகள் எத்தனை? 95
13. மார்ட்டின் லூதரின் திருச்சபைக்கு எதிரான 95 கொள்கைகளை எங்கே ஒட்டி வைத்து வெளிப்படையாக எதிர்ப்பை உருவாக்கினார்? லூட்டன்பர்க் பேராலயத்தின் வாசலில்

14. மார்ட்டின் லூதரின் 95 கொள்கைகளுக்கும் விளக்கம் அளிக்க கடிதம் அனுப்பிய திருத்தந்தை யார்? திருத்தந்தை பத்தாம் சிங்கராயர்
15. மார்ட்டின் லூதர் திருத்தந்தையின் கடிதத்தை எரித்ததால் எப்போது திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டார்? 1521 ஜனவரி 3-ம் நாள்.
16. மார்ட்டின் லூதர் எப்போது துறவறத்தை விட்டு திருமணம் செய்து கொண்டார்? 1525-ல்
17. மார்ட்டின் லூதரின் இறப்புக்குப்பின் அவரது கொள்கைகளைப் பின்பற்ற வலுவூட்டியவர்கள் யாவர்? பிரபுக்களும் அரசர்களும்
18. பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த திருச்சபை புதுப்பித்தலை உருவாக்கியவர் யார்? ஜான் கால்வின்
19. சுவிட்சர்லாந்தை சார்ந்த திருச்சபை புதுப்பித்தலை உருவாக்கியவர் யார்? சுவிங்கிளி
20. இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றி மன்னன் தனது மனைவி காதரின் உயிருடன் இருந்த போதே யாரை மணந்து கொள்ள விரும்பினார்? ஆனிபோள்
21. இரண்டாவது மனைவியைத் திருமணம் செய்து கொண்ட எட்டாம் ஹென்றி மன்னரை திருச்சபையிலிருந்து விலக்கியதால் 1534 நவம்பர் 3-ாம் நாள் பாராளுமன்றத்தைக் கூட்டி உருவாக்கிய கொள்கை என்ன? ஒரே தலைவர் கொள்கையை
22. இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றி மன்னனின் திருச்சபைக்கு எதிரான கொள்கைகளில் கொல்லப்பட்டவர்கள் யாவர்? ஜோண் பிஷர் என்ற ஆயரும், அரசரின் ஆவணக் காப்பாளராக இருந்த தோமஸ் மூரும்
23. எட்டாம் ஹென்றி மன்னருக்குப் பின்னர் கத்தோலிக்க விசுவாசத்தை ஊக்குவித்த அரசி யார்? அரசி மேரி.
24. இங்கிலாந்து சபை (ஆங்க்ளிக்கன் சபை) தனித் திருச்சபையாக உருவான போது இங்கிலாந்து அரசி யார்? எலிசபெத் அரசி
25. புதுப்பித்தல் சிந்தனைகளுக்கு எதிராக திருச்சபையின் புதுப்பித்தலுக்காக கத்தோலிக்கத் திருச்சபை ஒன்று கூட்டிய திருச்சங்கம் எது? திரித்தெந்து திருச்சங்கம்.
26. புதுப்பித்தலின் கருத்துக்களைக் கண்டிக்க ஒரு திருச்சங்கம் கூட்ட வேண்டும் என்று முதலில் தீர்மானித்த திருத்தந்தை யார்? திருத்தந்தை ஏழாம் கிளமென்ட்
27. திரிதெந்து திருச்சங்கத்தை வழிநடத்திய திருத்தந்தை யார்? திருத்தந்தை மூன்றாம் பவுல்
28. திரிதெந்து திருச்சங்கம் எப்போது துவங்கியது? 1545 டிசம்பர் 13-ம் நாள்
29. திரிதெந்து திருச்சங்கம் எப்போது முடிவுற்றது? 1563 டிசம்பர் 3-ம் நாள்
30. மறைநூலின் புத்தகங்கள் எவை என்று எத்திருச்சங்கத்தில் வைத்து வரையறுக்கப்பட்டது? திரிதெந்து திருச்சங்கத்தில்
31. திரிதெந்து திருச்சங்கத்தின் புதுப்பித்தலுக்கு துணை புரிந்த முக்கிய துறவற சமூகங்கள் எவை? பிரான்சிஸ்கன், கர்ம்மலீத்தா, பெனடிக்டைன், சிஸ்டேர்சியன்
32. புரொட்டஸ்டன்ட் புரட்சிக்கு பின்னர் இக்னேஷியஸ் லயோலாவின் தலைமையில் உருவான துறவற சமூகம் எது? இயேசு சபை.
33. திரிதெந்து திருச்சங்கத்திற்குப் பின்னர் நற்செய்தியின் வழியாகவும், எழுத்தின் வழியாகவும் திருச்சபையின் புதுப்பித்தலுக்காக துணை புரிந்தவர் யார்? புனித பிரான்சிஸ் தெ சாலஸ் (1567-1622).
34. திரிதெந்து திருச்சங்கத்திற்குப் பின்னர் ஏழைகளிடையே பணி புரிவதற்காக பல துறவற சமூகங்களை நிறுவி அதன் வழியாக பிறர் உதவி செய்து வந்தவர் யார்? புனித வின்சென்ட் தெ பவுல்
35. இந்தியாவில் கிறிஸ்து மதம் வேகமாக செழித்து வளர்ந்து பரவியது எப்போது? 16-ம் நூற்றாண்டில்
36. புனித பிரான்சிஸ் சவேரியார் கிறிஸ்தவ மதத்தைப் பறைசாற்றிய நாடுகள் யாவை? இந்தியா, ஜப்பான்
37. சீனாவில் பாரசீகர்கள் மறைத்தூதுப் பணியாற்றத் தொடங்கியது எப்போது? 7-ம் நூற்றாண்டில்

38. தாய்லாந்திலும் பிலிப்பைன்சிலும் மறைதூதுப் பணியின் வழியாக திருச்சபை வளர்ந்து வந்தது எப்போது? 16-ாம் நூற்றாண்டில்
39. ஆப்பிரிக்காவில் மறைப்பணி எப்போது ஆரம்பமானது? 1415-ல்
40. ஐரோப்பிய நாடுகள் எப்போது அமெரிக்காவிலும் வட அமெரிக்காவிலும் நற்செய்தி அறிவித்தன? 16-ாம் நூற்றாண்டு
41. ஆஸ்திரேலியாவின் முதல் கிறிஸ்தவர்கள் எனப்படுபவர்கள் எந்நாட்டிலிருந்து 18-ாம் நூற்றாண்டில் நாடு கடத்தப்பட்டவர்கள்? அயர்லாந்து
42. நியூசிலாந்தில் கத்தோலிக்க விசுவாசம் எப்போது ஆரம்பமானது? 1828-ம் ஆண்டில்
43. “ஆண்டவரே உம் திரு இரத்தத்தால் விலைக்கு வாங்கப்பட்ட உம் **திருச்சபையை** கருணையுடன் நினைவு கூர்ந்தருளும். பகைவர்களின் பிரிவினைகளிலிருந்தும், போராட்டங்களிலிருந்தும் காத்தருள்வீராக. உமது நற்போதனைகளிலும், உம் கட்டளைகளைக் கடைபிடிப்பதிலும், அதை உறுதிப்படுத்துவீராக”.
44. "ஆகையால் உண்மையை இடைக்கச்சையாகக் கட்டிக் கொண்டு நீதியை மார்பு கவசமாக அணிந்து நில்லுங்கள். அமைதியை அருளும் **நற்செய்தியை** அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்” (எபேசியர் 6:14-15),

## பாடம் 10

## இன்றைய உலகில் திருச்சபை

பயிற்சி வினாக்கள்

1. பிரெஞ்சு புரட்சி திருச்சபையில் ஏற்படுத்திய விளைவுகளைக் குறித்து எழுதுக?

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்சில் பொருளாதார நெருக்குடி ஏற்பட்டது. நாட்டின் பொருளாதாரத்தின் ஒரு பகுதி திருச்சபையினுடையதாக இருந்தது. திருச்சபையும் ஆட்சியில் பங்கு கொண்டிருந்தது. இக்காலத்தில் சாதாரண மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண அரசாலும், திருச்சபையாலும் இயலவில்லை. இதனால் மக்கள் அவற்றை எதிர்க்கவும், கோபம் கொள்ளவும் செய்தனர். 1789 மே 5-ம் நாள் 16-ாம் லூயிஸ் மன்னர் ஓர் சட்டசபையைக் கூட்டினார். இதனை சாதாரண மக்களின் பிரதிநிதிகள் புறக்கணித்தனர். பின்னர் இவர்கள் சேர்ந்து பிரான்சு தேசீய சட்ட சபையாக தங்களையே அறிவித்தனர்.

புதிய தேசீய சட்டசபை அதிகாரங்களைக் கையடக்கிக் கொண்டு 1789-ல் நில உரிமையாளர்களுக்கும், குருவானவர்களுக்கும் உள்ள சலுகைகளைப் பறித்துக் கொண்டது. புது அரசு திருச்சபைக்கும் அரசுக்கும் இருந்த உறவை வேறுபடுத்தியது. திருச்சபையின் சொத்துக்கள் அனைத்தும் தேசீய உடமையாக்கப்பட்டது. இதனால் குருக்களின் சலுகைகள் பறிக்கப்பட்டன. அரசு சார்புடைய ஆயர்களும் குருக்களும் நியமிக்கப்பட்டார்கள். திருத்தந்தையுடனான உறவை பிரான்ஸ் முறித்துக் கொண்டது. அவர்கள் ஏராளமான குருக்களை கொல்லவும் நாடு கடத்தவும் செய்தனர்.

16-ாம் லூயிஸ் மன்னர் 1793-ல் கொல்லப்பட்டார். குருக்களை எங்கு வைத்து கண்டாலும் கொலை செய்ய புது ஆட்சியாளர்கள் அனுமதி வழங்கினர். கிறிஸ்தவ ஆராதனைக்குப் பதிலாக புரட்சி அரசின் ஆராதனை முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. சமய வழிபாடுகள் தேவாலயத்தில் நடத்தப்படுவது தடை செய்யப்பட்டது. 1799-ல் நெப்போலியன் பிரான்சின் ஆட்சியை கைப்பற்றியது வரை இவ்வாட்சி முறை நீடித்தது. 1801-ல் நெப்போலியன், 7-ாம் பத்திநாதர் திருத்தந்தையுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் வழியாக கத்தோலிக்க திருச்சபைக்கு பிரான்சில் சுதந்திரம் கிடைத்தது.

2. பொதுவுடைமைக் கொள்கையைப் பற்றிய திருச்சபையின் கருத்து யாது?

19-ம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட தொழிற் புரட்சியைத் தொடர்ந்து தொழிலாளிகள் பல இன்னல்களை அனுபவித்தனர். வேதனைப்படுகின்ற தொழிலாளிகளின் விடுதலைக்காக ஒரு புது சமூக சூழல் தேவை என்பதை உணர்ந்த கார்ல்மார்க்ஸ் மற்றும் பிரடரிக் ஏங்கல்ஸ் என்பவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு புதிய சமூக கொள்கையே பொதுவுடைமைக்கொள்கை. பொதுவுடைமை கொள்கைகளை காரல் மார்க்ஸ் தனது 'கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ'வில் எடுத்துரைத்தார். செல்வமே மனித வரலாற்றை கட்டுப்படுத்துகிறது என்றும் செல்வத்தோடு தொடர்பு கொண்டே மதமும், அறநெறியும் உருவாகின்றன என்றும் காரல் மார்க்ஸ் தெளிவுபடுத்தினார். தொழிலாளி - முதலாளி என்னும் இனவேறுபாடு இல்லாததும் மதம் இல்லாததுமான ஒரு அரசியல் அமைப்பையே

www.malankaralibrary.com

பொதுவுடைமைக் கொள்கை வாக்களிக்கிறது. குறிக்கோளை அடைய எந்த வழியையும் தேர்ந்தெடுக்கலாம் என்று அவர்கள் கற்பித்தனர். அளவுக்கதிகமான உலக சார்பும் தனிநபர் சொத்துரிமை இன்மையும் பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படைத் தத்துவங்களாக அமைந்தன.

கடவுள், மதம், அறநெறி போன்ற உண்மைகளை மறுக்கின்ற பொதுவுடைமைக் கொள்கையின் உலகிய வாதங்களை திருச்சபை ஏற்கவில்லை. எந்த வழியைத் தேர்ந்தெடுத்தாலும் குறிக்கோள் நல்லதாக அமைய வேண்டும் என்ற பொதுவுடைமைக் கொள்கை வாதத்தை திருச்சபை புறக்கணித்து தேர்ந்தெடுக்கும் வழியும் குறிக்கோளும் நல்லதாக அமைய வேண்டும் என்று கற்பித்தது. பொதுவுடைமைவாதிகள் தீவிரமாகக் கொள்கையைத் தேர்ந்தெடுத்ததும், தனிமனித சுதந்திரத்தை தடை செய்ததும், மதத்தை புறக்கணித்ததும் திருச்சபை பொதுவுடைமைக் கொள்கையை எதிர்க்கக் காரணமானது. பொதுவுடைமைக் கொள்கையினால் இத்தாலி, போலந்து, ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளில் திருச்சபைக்கு பேரிழப்பு ஏற்பட்டது.

பொதுவுடைமைக் கொள்கைகள் நாளடைவில் பல இடங்களிலும் வலுவடைந்தது. ஆனால் சோவியத் ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார பின்னடைவு பொதுவுடைமைக் கொள்கைக்கு பேரிழப்பு ஏற்படுத்தியது. எனவே மக்கள் பொதுவுடைமைக் கொள்கையை வெறுத்தனர். மார்க்ஸின் பொதுவுடைமைக் கொள்கை பெரும் தோல்வியை ஏற்படுத்தியது என்று ரஷ்யாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பறைசாற்றின. சீனாவில் இன்றும் பொதுவுடைமைக் கொள்கை நிலை கொள்கின்றது. ஆனால் நவீனப்படுத்தப்பட்டு மென்மையாக்கப்பட்ட பொதுவுடைமைக் கொள்கையே அங்கு நிலை கொள்கின்றது.

பொதுவுடைமையிலுள்ள சில கொள்கைகள் திருச்சபையின் விசுவாசம் மற்றும் அந்நெறி கொள்கைகளுக்கு எதிராக இருந்தாலும் அதிலுள்ள நல்ல கருத்துக்களை திருச்சபைப் புறக்கணிக்கவில்லை. பொதுவுடமைக் கொள்கை கூறுகின்ற சமத்துவம், ஏழைகளின் விடுதலை போன்ற கொள்கைகளை திருச்சபை ஏற்றுக்கொண்டது. ஆனால் பொதுவுடைமைக் கொள்கையின் வழியாக விசுவாசத்திற்கு ஏற்படும் ஆபத்தைக் குறித்து எப்போதும் விழிப்புடையவர்களாக இருக்க வேண்டும் என்று திருச்சபை கற்பித்தது. மனிதனை வெறும் ஒரு உலகப் பொருளாக மட்டும் கருதி எல்லா மனிதப் பிரச்சனைகளுக்கும் காரணம் பொருளாதாரம் மட்டுமே எனக் கருதும் பொதுவுடைமைக் கொள்கையை திருச்சபை புறக்கணித்தது.

3. திருத்தந்தையின் வழுவாவரம் பற்றி விளக்குக?

1869 டிசம்பர் 8-ம் நாள் 9-ம் பத்திநாதர் திருத்தந்தை திருச்சங்கத்தை துவக்கி வைத்தார். 700-க்கு மேற்பட்ட ஆயர்கள் இத்திருச்சங்கத்தில் கலந்து கொண்டனர். கிறிஸ்தவக் கொள்கைகளை தெளிவாக எடுத்துரைக்கவும், தப்பறைகளைக் குறித்து ஆராய்ந்து திருச்சபையின் அதிகார பூர்வமான படிப்பினைகளை பறைசாற்றவும் செய்ததை இதன் வெற்றியாகக் கருதப்படுகிறது. விசுவாசத்தைக் குறித்தும், நன்னெறிகளைக் குறித்தும் கற்பிக்கும் போது தூய ஆவியின் உதவியினால் திருத்தந்தைக்கு தவறு வருவதில்லை என்பது திருச்சபையின் விசுவாசம். இதனை திருத்தந்தையின் ‘வழுவாவரம்' (Infallibility) என்று கூறுகிறோம். இதனை ஒரு விசுவாச உண்மையாக இத்திருச்சங்கம் பறைசாற்றியது.

4. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் சாதனைகளை விவரி?

20-ம் நூற்றாண்டில் திருச்சபையில் ஏற்பட்ட உயிரோட்டமான மறுமலர்ச்சி இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் ஆகும். இத்திருச்சங்கத்தை கூட்ட அழைப்பு விடுத்தவர் திருத்தந்தை 23-ம் யோவான் ஆவார். இவர் இக்கால திருத்தந்தையர்களில் ஒரு தனித்தன்மை வாய்ந்த ஆளுமையைக் கொண்டவர். இவர் திறந்த மனநிலையும், சாதாரண மக்களுடன் அவர்களில் ஒருவராக செயல்படும் மனநிலையும் உடையவர். அவர் திருச்சபைகளின் ஒற்றுமைக்கும், சமூகத்தின் நலனுக்கும் அயராது உழைத்தார். இவருடைய "அன்னையும் ஆசிரியையும்", “பூமியில் சமாதானம்” போன்ற சமூகப் படிப்பினைகள் உலகைக் கவர்ந்தது. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தை கூட்டியதே இவரின் சாதனையாகும்.

திருச்சபை வரலாற்றில் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்துக்கு முன்னர் 20 பொதுச்சங்கங்கள் நடைபெற்றன. அவையனைத்தும் ஏதேனும் ஒரு தப்பறையைக் கண்டிப்பதற்காகவோ, ஒரு விசுவாச உண்மையை அதிகாரப் பூர்வமாக வெளிப்படையாக அறிவிப்பதற்காகவோ கூட்டப்பட்டது. இதிலிருந்து மாறுபட்டதே இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம். 1962 அக்டோபர் 11-ம் நாள் திருச்சங்கத்தை துவக்கி வைத்த திருத்தந்தை 23-ம் யோவான் "திருச்சபையை புதுப்பியுங்கள்” என்று அறைகூவல் விடுத்தார். திருச்சபையின் புதுப்பித்தலும் திருச்சபைகளின் ஒன்றிப்புமே இத்திருச்சங்கத்தின் முக்கிய குறிக்கோளாகும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் உலகம் கண்ட மாற்றத்தின் பின்னணியில்

திருச்சபையை புதுப்பித்து மாற்றியமைப்பதே இப்பொதுச்சங்கத்தின் முக்கிய நோக்கம். இக்கால மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் நற்செய்தியும், திருச்சபைக் கொள்கைகளும் வழங்க வேண்டும் என்பதில் ஆயர்கள் நிலையாயிருந்தனர்.

நான்கு பகுதிகளாக திருச்சங்கம் நடைபெற்றது. இத்திருச்சங்கத்தின் முதல் கூட்டத்திலேயே 2540 ஆயர்கள் கலந்து கொண்டனர். இத்தனை ஆயர்கள் ஒன்றாக வேறு எந்த திருச்சங்கத்திலும் கலந்து கொள்ளவில்லை. மேலும் இத்திருச்சங்கத்தில் இறையியல் வல்லுநர்களும், பொதுநிலையினரும், குருக்களும், கத்தோலிக்கர் அல்லாதவர்களும் கலந்து கொண்டனர். இதில் மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து மேதகு பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையும், சக்கரியாஸ் மார் அத்தனாசியோஸ் ஆண்டகையும் கலந்து கொண்டனர். 1965 ஜன் 3-ாம் நாள் திருத்தந்தை 23-ாம் யோவான் காலமானார். பின்னர் வந்த திருத்தந்தை 6ாம் பவுல் இத்திருச்சங்கத்தை நிறைவடையச் வைத்தார். 1965 டிசம்பர் 8-ம் நாளில் இத்திருச்சங்கம் முடிவுற்றது.

இத்திருச்சங்கம் பதினாறு ஏடுகளை வெளியிட்டது. இதில் நான்கு கோட்பாட்டு விளக்கங்களும், ஒன்பது விதித் தொகுப்புகளும், மூன்று அறிக்கைகளும் அடங்கும். இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் மாபெரும் வெற்றி பெற்றது என்பதில் ஐயமில்லை. திருச்சபையின் வாழ்க்கை முறைகளிலும், சிந்தனை பாணியிலும் புரட்சிகரமான மாற்றங்களை திருச்சங்கம் ஏற்படுத்தியது. இஃது திருச்சபைகள் ஒற்றுமையுடன் செயல்பட வழிவகுத்தது. "தூய்மையான காற்று உட்புக திருச்சபையில் சன்னல்கள் திறந்திட வேண்டும்" என்னும் குறிக்கோளுடன் ஆரம்பமான இத்திருச்சங்கம் இந்த குறிக்கோளை அடைந்தது என்பதுவே இதன் மாபெரும் வெற்றியாகும்.

5. குறிப்பு வரைக:

**திருத்தந்தை ஆறாம் பவுல் (1963-1978)**

23-ாம் யோவான் திருத்தந்தையின் வழிவந்தவராக 6-ாம் பவுல் திருத்தந்தை பொறுப்பேற்றார். 23-ாம் யோவான் திருத்தந்தையின் இறப்புக்குப் பின்னர் இத்திருச்சங்கத்தை பொறுப்புணர்வுடன் தொடர்ந்து செயல்படுத்துவதற்கும், வெற்றியுடன் அதனை முடித்து வைப்பதற்கும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் திருத்தந்தை 6-ாம் பவுல் சிறப்புடன் தலைமை தாங்கினார். இதர சபைகளுடன் உள்ள உறவை வலுப்படுத்துவதற்கு அவரால் முடிந்தது. இந்தியா உட்பட பல நாடுகளுக்கும் சென்று திருச்சபைக்கும் நாடுகளுக்கும் இடையே உள்ள உறவை வலுப்படுத்தினார். 1967-ல் அவர் வெளியிட்ட 'மானிட வளர்ச்சி' (Populorum Progressio) என்னும் சுற்றுமடல் திருச்சபையின் சமூக போதனை முறைகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த மடல்களில் ஒன்றாகும். திருத்தந்தை ஆறாம் பவுலின் வழிவந்தவரான முதலாம் யோவான் பவுல் திருத்தந்தை ஒரு மாதம் மட்டுமே திருச்சபையை வழிநடத்தினார். 1978 ஆகஸ்ட் 26-ல் பொறுப்பேற்ற அவர் செப்டம்பர் 28-ம் நாள் காலம் சென்றார்.

**இரண்டாம் யோவான் பவுல் (1978 - 2005)**

21-ாம் நூற்றாண்டில் திருச்சபையை உறுதியுடன் வழிநடத்திய திறமை வாய்ந்த திருத்தந்தையே இரண்டாம் யோவான் பவுல். முதலாம் யோவான் பவுல் திருத்தந்தையின் வழிவந்தவரை தேர்ந்தெடுப்பதில் கர்தினால்கள் புது வரலாறு படைத்தனர். நூற்றாண்டுகளாக இத்தாலியிலிருந்து திருத்தந்தையர்களைத் தேர்ந்தெடுத்தனர். எனவே அவர்கள் இத்தாலிக்கு வெளியேயிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்தனர். பொதுவுடைமைவாதிகளின் ஆட்சியிலிருந்த போலந்திலுள்ள கிராக்கோவ் ஆயராக செயல்பட்டு வந்த கரோள் வைற்றிலாவை 1978 அக்டோபர் 16- ாம் நாள் 264 - ாம் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் இரண்டாம் யோவான் பவுல் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டார்.

போலந்திலுள்ள ஒரு ஏழை இராணுவ வீரரின் மகனாகப் பிறந்த அவர் இரண்டாம் உலகப் போரின் போது ஜெர்மன் போர்க் கைதிகளின் கூட்டத்தில் தொழிற்கூடத்தில் தொழிலாளியாகவும், கல்வெட்டுபவராகவும் வாழ்ந்தார். பின்னர் அவர் திருச்சபையின் உன்னத பதவிக்கு அழைக்கப்பட்டார். அவர் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டப் பின்னர் நூற்றுக்கணக்கான நாடுகளுக்குச் சென்று மக்களுடன் ஆன்மீக உறவை ஏற்படுத்தினார்.

இவ்வாறு அதிகமான நாடுகளுக்குச் சென்று மக்களை வாழ்த்திய திருத்தந்தையர்கள் வேறு எவரும் இல்லை. மனித இதயங்களை வசீகரிப்பதிலும், அவர்களை விசுவாசத்தில் உறுதிபடுத்துவதிலும் அவருக்கு இணை அவரே. 1986 பிப்ருவரியில் அவர் இந்தியாவுக்கு வந்தார். கேரளாவிலுள்ள கொச்சி, திருச்சூர், கோட்டயம், திருவனந்தபுரம் போன்ற இடங்களையும் தமிழகத்தில் சென்னை சாந்தோம் பேராலயத்தையும் பார்வையிட்டார். நம் திருவனந்தபுரம் மறைமாநிலப் பேராலயத்தையும் பார்வையிட்டார்.

இரண்டாம் யோவான் பவுல் திருத்தந்தை பல சுற்றுமடல்களை எழுதியுள்ளார். மானிட மீட்பர், மானிட உழைப்பு, சமூக அக்கரை போன்றவை அவற்றுள் முதன்மையானவை அகும்.

திருச்சபையின் பொதுச் சட்டங்களைப் புதுப்பித்தவரும், கிழக்குத் சபைகளுக்கான திருச்சபைச் சட்டங்களை வகுத்தவரும் இவரே ஆவார். 1992 அக்டோபர் 11-ம் நாள் வெளியிட்ட "Catechism of the Catholic Church" என்ற மறைக்கல்வி நூல் கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரபூர்வ மடல்களில் முக்கியமான ஒன்றாகும்.

இன்றைய உலகில் மனித வாழ்வின் மாண்பினைப் பற்றிய அவருடைய போதனைகள் உலக மனச்சான்றை உணர்த்தியது. எல்லா எதிர்ப்புகளுக்கிடையேயும் அவர் தவறுகளைச் சுட்டிக் காட்டினார். பொதுவுடைமைக் கொள்கையின் தீய பகுதியை அவர் வலுவுடன் எதிர்த்தார். மனித உரிமைப் பிரச்சனைகளிலும், பிற உலக நாடுகளின் பிரச்சனைகளிலும் அவர் தீவிரமான நிலைப்பாட்டை எடுத்தார். ஈராக் போர் உட்பட்ட பல பிரச்சனைகளிலும் அவர் தன்னுடைய உறுதியான கருத்தினை வெளியிட்டார். 2005 ஏப்ரல் 2-ாம் நாள் இரண்டாம் யோவான் பவுல் திருத்தந்தை இறைபதம் சேர்ந்தார்.

குறு வினா விடைகள்

1. எந்த திருச்சங்கத்திற்குப் பின்னர் திருச்சபையில் ஆன்மீக எழுச்சி உருவானது? திரிதெந்து திருச்சங்கம்
2. தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு மட்டுமே இறையருள் மற்றும், திருத்தந்தையின் அதிகாரம் திருச்சங்கத்தின் கீழ் உள்ளது என்னும் தப்பறை கொள்கையின் பெயர் என்ன? ஜாண்சநிசம் (1585-1638)
3. திருச்சபையின் மீது அரசுக்கு முழு அதிகாரம் உண்டு என்ற உரிமை வாதம் தப்பறை கொள்கையின் பெயர் என்ன? காள்ளிகநிசம் (1638-1715)
4. கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளையும், ஆட்சி முறைகளையும் எதிர்த்து முதலில் நூல்கள் எழுதியவர்கள் யாவர்? பிரான்சை சார்ந்த வோல்ட்டயர் (1694-1778) (1694-1778), றூசோ (1712-1778)
5. பிரான்சில் பொருளாதார நெருக்கடி எப்போது ஏற்பட்டது? 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில்.
6. பிரான்சில் 1789 மே 5-ம் நாள் சாதாரண மக்களின் பிரதிநிதிகள் புறக்கணித்த சட்டசபையைக் கூட்டியவர் யார்? 16-ாம் லூயிஸ் மன்னர்
7. பிரான்சில் 1789-ல் நில உரிமையாளர்களுக்கும், குருவானவர்களுக்கும் உள்ள சலுகைகளைப் பறித்துக் கொண்ட அரசு எது? புதிய தேசீய சட்டசபை
8. பிரான்சில் கத்தோலிக்கத் திருச்சபைக்கு எவ்வாறு சுதந்திரம் கிடைத்தது? 1801-ல் நெப்போலியன், 7-ாம் பத்திநாதர் திருத்தந்தையுடன் செய்து கொண்ட உடன்படிக்கை மூலம்
9. 1870-ல் உரோமை, இத்தாலியுடன் சேர்த்துக்கொண்டவர் யார்? விக்டர் இம்மானுவேல்
10. விக்டர் இம்மானுவேலை எதிர்த்து சுய கைதியாக வத்திக்கானில் வாழ்ந்து வந்தவர் யார்? திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர்.
11. வத்திக்கானை எப்போது தனி நாடாக அறிவித்தனர்? 1929 பிப்ருவரி 11-ாம் நாள்
12. எந்த ஒப்பந்தத்தின் படி வத்திக்கான் தனி நாடாக அறிவிக்கப்பட்டது? இலாத்தரன் ஒப்பந்தம்
13. வத்திக்கான் தனி நாட்டின் பரப்பளவு என்ன? 108 ஏக்கர்
14. பொதுவுடைமைக்கொள்கையை உருவாக்கியவர்கள் யாவர்? கார்ல்மார்க்ஸ் மற்றும் பிரடரிக் ஏங்கல்ஸ்
15. பொதுவுடைமை கொள்கைகளை காரல் மார்க்ஸ் எந்நூலில் எடுத்துரைத்தார்? 'கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ'
16. செல்வத்தோடு தொடர்பு கொண்டதாக காரல் மார்க்ஸ் எவற்றை சுட்டிக் காட்டினார்? மதமும், அறநெறியும்
17. பொதுவுடைமைக் கொள்கை எதனை வாக்களிக்கிறது? தொழிலாளி - முதலாளி என்ற இனவேறுபாடு இல்லாத மற்றும் மதம் இல்லாத அரசியல் அமைப்பு
18. பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படைத் தத்துவங்கள் எவை? அளவுக்கதிகமான உலக சார்பும் தனிநபர் சொத்துரிமை இன்மையும்.

www.malankaralibrary.com

19. திருச்சபை பொதுவுடைமைக் கொள்கையை எதிர்க்கக் காரணங்கள் எவை? பொதுவுடைமைவாதிகள் தீவிரமாகக் கொள்கையைத் தேர்ந்தெடுத்ததும், தனிமனித சுதந்திரத்தை தடை செய்ததும், மதத்தை புறக்கணித்ததும்.
20. பொதுவுடைமைக் கொள்கையினால் எந்நாடுகளில் திருச்சபைக்கு பேரிழப்பு ஏற்பட்டது? இத்தாலி, போலந்து, ரஷ்யா மற்றும் சீனா
21. பொதுவுடைமைக் கொள்கைக்கு பேரிழப்பு ஏற்படுத்தியது என்ன? சோவியத் ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார பின்னடைவு.
22. சீனாவில் இன்றைய பொதுவுடைமைக் கொள்கை எத்தகையது? நவீனப்படுத்தப்பட்டு மென்மையாக்கப்பட்ட பொதுவுடைமைக் கொள்கை
23. ஐரோப்பா அறிவியலில் எப்போது முன்னேற்றமடைந்தது? பதினாறு மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில்
24. பிரபஞ்சத்தின் மையம் பூமி அல்ல என்றும், பூமி சூரியனைச் சுற்றி வலம் வருகின்ற ஒரு கோள் என்றும் பறைசாற்றியவர்கள் யாவர்? கோப்பர்நிக்கஸ் மற்றும் கலிலியோ
25. பூமி நிலையானது என்றும் சூரியன் நகர்கின்றது என்றும் திருவிவிலியத்தில் கூறப்பட்டிருக்கின்ற பகுதி எது? யோசுவா 10:12-13
26. திருவிவிலியத்திலுள்ள படைப்பு பற்றிய செய்திகளுக்கு எதிரான 19-ம் நூற்றாண்டைய சார்லஸ் டார்வினின் கொள்கை எது? பரிணாமக் கொள்கை
27. அறிவியலும், திருவிவிலியமும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல மாறாக ஒன்றுக்கொன்று தொடர்புடையவை சரியா? தவறா? சரி
28. முதலாம் வத்திக்கான் திருச்சங்கம் எப்போது கூட்டப்பட்டது? 1869 டிசம்பர் 8-ம் நாள்
29. முதலாம் வத்திக்கான் திருச்சங்கத்தை துவக்கி வைத்தவர் யார்? திருத்தந்தை 9-ம் பத்திநாதர்
30. முதலாம் வத்திக்கான் திருச்சங்கத்தில் எத்தனை ஆயர்கள் கலந்து கொண்டனர்? 700-க்கு மேற்பட்ட ஆயர்கள்
31. விசுவாசத்தைக் குறித்தும், நன்னெறிகளைக் குறித்தும் கற்பிக்கும் போது தூய ஆவியின் உதவியினால் திருத்தந்தைக்கு தவறு வருவதில்லை என்ற திருச்சபையின் படிப்பினைக்குப் பெயர் என்ன? திருத்தந்தையின் ‘வழுவாவரம்' (Infallibility)
32. 20-ம் நூற்றாண்டில் திருச்சபையில் ஏற்பட்ட உயிரோட்டமான மறுமலர்ச்சி எனப்படுவது எது? இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம்
33. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தை கூட்ட அழைப்பு விடுத்தவர் யார்? திருத்தந்தை 23-ம் யோவான்
34. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் எப்போது துவங்கப்பட்டது? 1962 அக்டோபர் 11-ம் நாள்
35. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தை துவக்கி வைத்த திருத்தந்தை 23-ம் யோவான் விடுத்த அறைகூவல் என்ன? "திருச்சபையை புதுப்பியுங்கள்”.
36. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் முக்கிய குறிக்கோள் எவை? திருச்சபையின் புதுப்பித்தலும் திருச்சபைகளின் ஒன்றிப்பும்
37. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் முக்கிய நோக்கம் என்ன? அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் உலகம் கண்ட மாற்றத்தின் பின்னணியில் திருச்சபையை புதுப்பித்து மாற்றியமைப்பதே
38. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் எத்தனை பகுதிகளாக நடைபெற்றது? நான்கு
39. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் முதல் கூட்டத்தில் எத்தனை ஆயர்கள் கலந்து கொண்டனர்? 2540
40. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தில் மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து கலந்து கொண்ட ஆயர்கள் யாவர்? மேதகு பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையும், சக்கரியாஸ் மார் அத்தனாசியோஸ் ஆண்டகையும்
41. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தை நிறைவு செய்தவர்? திருத்தந்தை 6ாம் பவுல்
42. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் எப்போது முடிவுற்றது? 1965 டிசம்பர் 8-ம் நாளில்
43. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் எத்தனை ஏடுகளை வெளியிட்டது? பதினாறு

44. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் கோட்பாட்டு விளக்கங்கள் எத்தனை? நான்கு
45. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் விதித் தொகுப்புகள் எத்தனை? ஒன்பது
46. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் அறிக்கைகள் எத்தனை? மூன்று
47. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் வெற்றி பெற உதவிய விருதுவாக்கு என்ன? "தூய்மையான காற்று உட்புக திருச்சபையில் சன்னல்கள் திறந்திட வேண்டும்"
48. 23-ாம் யோவான் திருத்தந்தையின் வழிவந்தவர் யார்? 6-ாம் பவுல் திருத்தந்தை
49. திருத்தந்தை ஆறாம் பவுல் 1967-ல் வெளியிட்ட முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுமடல் எது? 'மானிட வளர்ச்சி' (Populorum Progressio)
50. திருத்தந்தை ஆறாம் பவுலின் வழிவந்தவரான முதலாம் யோவான் பவுல் திருத்தந்தை எவ்வளவு காலம் திருச்சபையை வழிநடத்தினார்? ஒரு மாதம்
51. 21-ாம் நூற்றாண்டில் திருச்சபையை உறுதியுடன் வழிநடத்திய திறமை வாய்ந்த திருத்தந்தை யார்? திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் **(1978 - 2005)**.
52. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் பொதுவுடைமைவாதிகளின் பிடியிலிருந்த எந்நாட்டைச் சார்ந்தவர்? போலந்து
53. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் போலந்தின் கிராக்கோவ் ஆயராக செயல்பட்ட போது பெயர் என்ன? ஆயர் கரோள் வைற்றிலா
54. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் எப்போது 264 - ாம் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்? 1978 அக்டோபர் 16- ாம் நாள்
55. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 1986 பிப்ருவரியில் தமிழகத்தில் பார்வையிட்ட இடம் எது? சென்னை சாந்தோம் பேராலயம்.
56. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 1986 பிப்ருவரியில் மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையை பார்வையிட்ட இடம் எது? திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட பேராலயம்
57. இரண்டாம் யோவான் பவுல் திருத்தந்தையின் முதன்மையான சுற்றுமடல்கள் எவை? மானிட மீட்பர், மானிட உழைப்பு, சமூக அக்கரை
58. திருச்சபையின் பொதுச் சட்டங்களைப் புதுப்பித்தவரும், கிழக்குத் சபைகளுக்கான திருச்சபைச் சட்டங்களை வகுத்தவருமான திருத்தந்தை யார்? திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்
59. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 1992 அக்டோபர் 11-ம் நாள் வெளியிட்ட கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரபூர்வ மடல்களில் முக்கியமானது எது? கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி "Catechism of the Catholic Church"
60. மனித உரிமைப் பிரச்சனைகளிலும், ஈராக் போர் உட்பட்ட பிற உலக நாடுகளின் பிரச்சனைகளிலும் அவர் தீவிரமான நிலைப்பாட்டை கொண்டிருந்த திருத்தந்தை யார்? திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்
61. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலுக்குப்பின்னர் திருத்தந்தையானவர் யார்? திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் (Benedict XVI)
62. கத்தோலிக்கத் திருச்சபையின் அர்ஜென்டீனாவைச் சார்ந்த 266 ஆம் திருத்தந்தை யார்? திருத்தந்தை பிரான்சிஸ்
63. "ஆண்டவரே உம் திருச்சபைக்கு அமைதியும் சமாதானமும் அதன் ஆயர்களுக்கு ஆறுதலான முதுமைக் காலமும் அளித்தருளும். திருமறையின் உண்மைகளை சரியாகப் போதிக்கும் **ஆயர்கள்** திருச்சபையில் தோன்றச் செய்தருளும். நாங்கள் உமக்கும் உம் ஒரே மகனுக்கும் தூய ஆவிக்கும் புகழ்ச்சியும் போற்றுதலும் செலுத்துகின்றோம்". (திருப்பலி - தக்ஸா)
64. "நாம் சகோதர அன்பு கொண்டுள்ளதால் **சாவிலிருந்து** வாழ்வுக்கு கடந்து வந்துள்ளோமென அறிந்துள்ளோம். அன்பு கொண்டிராதோர் சாவிலேயே நிலைத்திருக்கின்றனர்" (1 யோவான் 3:14).

## பாடம் 11

## கட்டளைகள்

பயிற்சி வினாக்கள்

1. பத்துக் கட்டளைகள் யாவை?

1. உனக்கு ஆண்டவராகிய நாமே உன் கடவுள்; நமக்கு முன்பாக வேறு தெய்வங்களை நீ கொண்டிராதிருப்பாயாக.

2. உன் ஆண்டவரின் திருப்பெயரை வீணாய் சொல்ல வேண்டாம்.

3. ஓய்வுநாளை பரிசுத்தமாய் கொண்டாட நீ நினைவு கூர்வாயாக.

4. உன் தந்தையையும், தாயையும் மதித்து நடப்பாயாக.

5. கொலை செய்யாதிருப்பாயாக.

6. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.

7. களவு செய்யாதிருப்பாயாக.

8. உன் அயலானுக்கு எதிராய் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

9. பிறர் மனைவியை விரும்பாதிருப்பாயாக.

10. உன் அயலாரின் பொருள் யாதொன்றையும் விரும்பாதிருப்பாயாக.

2. திருச்சபை கட்டளைகள் எத்தனை? அவை யாவை?

1. ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் முழு பங்கேற்புடன் திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் விலக்கப்பட்ட வேலையிலிருந்து ஓய்ந்திருக்கவும் வேண்டும்.

2. வருடத்திற்கு ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளம் பெறுவதும் பாஸ்கா காலத்தில் திருவிருந்தில் பங்கேற்பதும்

3. திருச்சபை குறிப்பிடுகின்ற நாட்களில் உபவாசம் இருப்பதும், விலக்கப்பட்ட உணவுப் பொருட்களை விட்டுவிடுவதும்

4. விலக்கப்பட்ட காலத்தில் திருமணக் கொண்டாட்டங்களை தவிர்ப்பதும் குறைந்த வயதிலும் திருச்சபையால் விலக்கப்பட்ட உறவுமுறையாரோடும் திருமணம் செய்யாதிருப்பதும்

5. தேவாலயத்திற்கும், இறைபணியாளர்களுக்கும் ஞானமேய்ப்பர்கள் வரையறுத்துள்ளவாறு செய்தல்

3. ஞாயிறுநாள் கொண்டாட்டத்தைக் குறித்து திருச்சபை கூறுவது என்ன?

ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் முழு பங்கேற்புடன் திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் விலக்கப்பட்ட வேலையிலிருந்து ஓய்ந்திருக்கவும் வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை ஆண்டவரின் நாளாகும். இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புத் திருநாளின் கொண்டாட்டமே ஞாயிற்றுக்கிழமை. அதனால் ஞாயிற்றுக்கிழமையை மிகவும் புனிதமாகக் கொண்டாட வேண்டும். இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஞாயிறுநாள் கொண்டாட்டத்தைக் குறித்து பின்வருமாறு கூறுகிறது, "கடவுளின் வார்த்தையைக் கேட்டும், நற்கருணை விருந்தில் பங்கு கொண்டும், ஆண்டவர் இயேசுவின் துன்பங்கள், உயிர்த்தெழுதல், மாட்சிமை ஆகியவற்றை நினைவில் கொணர்ந்து 'இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்து நமக்கு புதுப்பிறப்பு அளித்து' "குன்றா நோக்குடன் நாம் வாழ' (1 பேதுரு 1:3) வழி செய்த கடவுளுக்கு நன்றி கூறுவதற்கு இந்நாளில் கிறிஸ்தவ மக்கள் ஒன்று கூட வேண்டும்" (திருவழிபாடு. 106). இந்த ஒன்று கூடலின் மையம் தேவ நற்கருணை ஆகும். தேவ நற்கருணையில் பங்கு பெறுதலின் வழியாக இயேசு கிறிஸ்துவிலேயே ஒவ்வொருவரும் பங்கு கொள்கின்றனர். ஞாயிற்றுக்கிழமையை இறைசெயல்களுக்காக பயன்படுத்துவது கிறிஸ்தவர்களின் கடமையாகும்.

4. வருடத்திற்கு ஒருமுறையாவது பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும் என்பதன் வழியாக திருச்சபை பொருள் கொள்வது என்ன?

வருடத்திற்கு ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளம் பெறுவதும் பாஸ்கா காலத்தில் திருவிருந்தில் பங்கேற்பதும்

ஒருவன் பாவம் செய்வதன் வழியாக இறையருளை இழந்து இறைவனிடமிருந்தும் மனிதரிடமிருந்தும் அகன்று செல்கின்றான். பாவத்திலிருந்து விடுதலை அளித்து இறைவனோடும், மனிதனோடும் சமூகத்தோடும் மனிதனை ஒப்புரவாக்குகின்ற அருள் அடையாளமே ஒப்புரவு (பாவ சங்கீர்த்தனம்). அதனால் பாவசூழ்நிலையில் வாழ்கின்ற

www.malankaralibrary.com

ஒவ்வொரு மனிதரும், பாவசங்கீர்த்தனம் செய்து தேவ நற்கருணையை உட்கொண்டு இறையருளில் வாழ்வதற்கு திருச்சபை கற்பிக்கின்றது. வருடத்திற்கு ஒருமுறையேனும் ஒப்புரவு அருட்சாதனம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதன் பொருள் மக்கள் மனமாற்றமடைய வருடத்திற்கு ஒருமுறையாவது ஒப்புரவு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். எப்போதாவது ஒருவர் கனமான பாவம் செய்தால் உடனேயே பாவசங்கீர்த்தனம் செய்ய அவர் முன்வர வேண்டும். பாவசங்கீர்த்தனம் செய்து கொள்ள குறிப்பிட்ட காலவரையறைசெய்து கொள்ளக் கூடாது. இறையருளில் வளர பாவசங்கீர்த்தனமும், தேவநற்கருணை பெற்றுக் கொள்ளுதலும் நமக்குத் துணைபுரியும். பாவச்சூழ்நிலை இல்லாத ஒருவர் தேவ நற்கருணை பெற்றுக்கொள்வதில் எந்த தடையுமில்லை.

குறு வினா விடைகள்

1. "நீங்கள் என் வார்த்தைக்கு செவி சாய்த்து என் உடன்படிக்கைகளைக் கடைபிடித்தால் அனைத்துலகும் என் உடைமையேயெனினும், நீங்களே எல்லா மக்கள் இனங்களிலும் என் தனிச்சொத்தாவீர்கள்" (விடுதலைப் பயணம் 19:5) யார் யாரிடம் கூறியது? சீனாய் மலையில் ஆண்டவர் மோசேயிடம்
2. சீனாய் மலையில் மோசேயிடம் கடவுள் வழங்கிய இரண்டு உடன்படிக்கைப் பலகைகளில் உள்ளவை என்ன? பத்துக் கட்டளைகள்
3. பத்துக் கட்டளைகளுக்கு மறுபெயரகள் எவை? அறநெறிச் சட்டம், சான்று பலகை, உடன்படிக்கையின் கற்கள், பலகை ஒப்பந்தம், பத்துக் கட்டளைகள், இறைக் கட்டளைகள், இறைவார்த்தைகள்
4. செமித்தீய சிந்தனையில் எந்த எண் முழுமையைக் குறிக்கின்றது? பத்து
5. இன்றைய கத்தோலிக்கத் திருச்சபையில் பயன்படுத்தும் முறையில் பத்துக் கட்டளைகளை முறைப்படுத்தியவர் யார்? புனித அகுஸ்தினார்
6. பத்துக் கட்டளைகளுள் முதல் கட்டளை எது? உனக்கு ஆண்டவராகிய நாமே உன் கடவுள்; நமக்கு முன்பாக வேறு தெய்வங்களை நீ கொண்டிராதிருப்பாயாக.
7. பத்துக் கட்டளைகளுள் இரண்டாம் கட்டளை எது? உன் ஆண்டவரின் திருப்பெயரை வீணாய் சொல்ல வேண்டாம்.
8. பத்துக் கட்டளைகளுள் மூன்றாம் கட்டளை எது? ஓய்வுநாளை பரிசுத்தமாய் கொண்டாட நீ நினைவு கூர்வாயாக.
9. பத்துக் கட்டளைகளுள் நான்காம் கட்டளை எது? உன் தந்தையையும், தாயையும் மதித்து நடப்பாயாக.
10. பத்துக் கட்டளைகளுள் ஐந்தாம் கட்டளை எது? கொலை செய்யாதிருப்பாயாக.
11. பத்துக் கட்டளைகளுள் ஆறாம் கட்டளை எது? விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.
12. பத்துக் கட்டளைகளுள் ஏழாம் கட்டளை எது? களவு செய்யாதிருப்பாயாக.
13. பத்துக் கட்டளைகளுள் எட்டாம் கட்டளை எது? உன் அயலானுக்கு எதிராய் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக.
14. பத்துக் கட்டளைகளுள் ஒன்பதாம் கட்டளை எது? பிறர் மனைவியை விரும்பாதிருப்பாயாக.
15. பத்துக் கட்டளைகளுள் பத்தாம் கட்டளை எது? உன் அயலாரின் பொருள் யாதொன்றையும் விரும்பாதிருப்பாயாக.
16. பத்துக் கட்டளைகளில் கடவுளோடு கொண்டிருக்க வேண்டிய உறவைப் பற்றியவை எவை? முதல் மூன்று கட்டளைகள்
17. பத்துக் கட்டளைகளில் அயலானோடு கொண்டிருக்க வேண்டிய உறவைப் பற்றியவை எவை? கடைசி ஏழு கட்டளைகள்.
18. பத்துக் கட்டளைகளில் நேர்முகமாக உள்ள இரண்டு கட்டளைகள் எவை? மூன்றாம் கட்டளை மற்றும் நான்காம் கட்டளை
19. பத்துக் கட்டளைகளில் எத்தனை மறைமுக பொருளில் கூறப்பட்டுள்ளன? எட்டு கட்டளைகள்.
20. பழைய ஏற்பாட்டுக் கட்டளைகளுக்கு புது வடிவம் கொடுத்தவர் யார்? இயேசு
21. இயேசு பத்துக் கட்டளைகளை எத்தனை கட்டளைகளாக மாற்றியமைக்கிறார்? இரண்டு
22. இயேசு கூறும் இரு கட்டளைகள் எவை? 1. உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து. 2. உன் மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக (மத்தேயு 22:37-39).
23. இயேசுவின் தலைசிறந்த கட்டளை எனப்படுவது எது? உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து.
24. இறைகட்டளைகள் **<u>அன்பில்</u>** வேரூன்றி இருக்கிறது.
25. கட்டளைகள் மனித வாழ்வின் மையமாக எவற்றை தெளிவாக்குகின்றன? இறையன்பும், பிறரன்பும்

www.malankaralibrary.com

26. “ஒருவர் மற்றவரிடம் **அன்பு** செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் **அன்பு** செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் **அன்பு** செலுத்துங்கள்" (யோவான் 13:34)
27. புதிய ஏற்பாடு **அன்பின்** சட்டம் ஆகும்.
28. பழைய ஏற்பாட்டில் சட்டங்கள் யார் வழியாக வழங்கப்பட்டது? மோசே
29. புதிய ஏற்பாட்டில் சட்டங்கள் யார் வழியாக வழங்கப்பட்டது? கிறிஸ்து
30. கட்டளைகளைக் கடைபிடித்து வாழ்வது அன்பின் வாழ்வு என்று கற்பித்தவர் யார்? புனித பவுலடியார்
31. “நீங்கள் யாருக்கும் எதிலும் கடன்படாதீர்கள். ஒருவருக்கொருவர் **அன்பு** செலுத்துவதே நீங்கள் செலுத்த வேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும். பிறரிடத்தில் **அன்பு** கூர்பவர் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவர் ஆவார்.
32. அன்பு அடுத்திருப்பவருக்குத் தீங்கிழைக்காது. ஆகவே **அன்பே** திருச்சட்டத்தின் நிறைவு (உரோமையர் 13:8-10).
33. திருச்சபைக் கட்டளைகள் எத்தனை? ஐந்து
34. திருச்சபைக் கட்டளைகளுள் முதலாவது என்ன? ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் முழு பங்கேற்புடன் திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் விலக்கப்பட்ட வேலையிலிருந்து ஓய்ந்திருக்கவும் வேண்டும்.
35. திருச்சபைக் கட்டளைகளுள் இரண்டாவது என்ன? வருடத்திற்கு ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளம் பெறுவதும் பாஸ்கா காலத்தில் திருவிருந்தில் பங்கேற்பதும்
36. திருச்சபைக் கட்டளைகளுள் மூன்றாவது என்ன? திருச்சபை குறிப்பிடுகின்ற நாட்களில் உபவாசம் இருப்பதும், விலக்கப்பட்ட உணவுப் பொருட்களை விட்டுவிடுவதும்
37. திருச்சபைக் கட்டளைகளுள் நான்காவது என்ன? விலக்கப்பட்ட காலத்தில் திருமணக் கொண்டாட்டங்களை தவிர்ப்பதும் குறைந்த வயதிலும் திருச்சபையால் விலக்கப்பட்ட உறவுமுறையாரோடும் திருமணம் செய்யாதிருப்பதும்
38. திருச்சபைக் கட்டளைகளுள் ஐந்தாவது என்ன? தேவாலயத்திற்கும், இறைபணியாளர்களுக்கும் ஞானமேய்ப்பர்கள் வரையறுத்துள்ளவாறு செய்தல்
39. ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் முழு பங்கேற்புடன் திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் விலக்கப்பட்ட வேலையிலிருந்து ஓய்ந்திருக்கவும் வேண்டும்.
40. ஆண்டவரின் நாள் எனப்படுவது எது? ஞாயிற்றுக்கிழமை.
41. இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புத் திருநாளின் கொண்டாட்டம் எந்நாளில்? ஞாயிற்றுக்கிழமை.
42. ஞாயிற்றுக்கிழமையை மிகவும் புனிதமாகக் கொண்டாட வேண்டும் எனக் கற்பிக்கும் நவீன திருச்சங்கம் எது? இரண்டாம் வத்திக்கான் சங்கம்
43. ஞாயிறுநாள் கொண்டாட்டத்தைக் குறித்து இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கூறுவது என்ன? "கடவுளின் வார்த்தையைக் கேட்டும், நற்கருணை விருந்தில் பங்கு கொண்டும், ஆண்டவர் இயேசுவின் துன்பங்கள், உயிர்த்தெழுதல், மாட்சிமை ஆகியவற்றை நினைவில் கொணர்ந்து 'இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்து நமக்கு புதுப்பிறப்பு அளித்து' “குன்றா நோக்குடன் நாம் வாழ' (1 பேதுரு 1:3) வழி செய்த கடவுளுக்கு நன்றி கூறுவதற்கு இந்நாளில் கிறிஸ்தவ மக்கள் ஒன்று கூட வேண்டும்" (திருவழிபாடு. 106).
44. ஞாயிற்றுக்கிழமை ஒன்று கூடலின் மையம் என்ன? தேவ நற்கருணை
45. பாவத்திலிருந்து விலகி இறைவனோடும், மனிதனோடும் சமூகத்தோடும் மனிதனை ஒப்புரவாக்குகின்ற அருள் அடையாளம் எது? ஒப்புரவு (பாவ சங்கீர்த்தனம்).
46. ஒருவர் எத்தகைய பாவம் செய்தால் உடனேயே பாவசங்கீர்த்தனம் செய்ய அவர் முன்வர வேண்டும்? கனமான பாவம்
47. கிறிஸ்தவ வாழ்விலிருந்து பிரிக்க முடியாத இரண்டு கூறுகள் எவை? நோன்பும், உபவாசமும்
48. எந்த அருளடையாளத்தின் வழியாக ஒரு ஆணும் பெண்ணும் கிறிஸ்துவில் ஒன்றாக மாறுகின்றனர்? திருமணம்
49. கட்டளைகள் கடைபிடித்தல் பற்றிய உயிர்ப்பு மாலை மன்றாட்டு செதறா எது? "ஆண்டவரே நாங்களும் உமது மக்களனைவரும் உமது கட்டளைகளை கடைபிடித்து அவற்றை தியானித்து இரவும் பகலும் உம் கட்டளைகளைக் கடைபிடித்து உம்மில் மகிழவும் செய்தருளும்”.
50. “நீங்கள் என் வார்த்தைக்குச் செவிசாய்த்து என் **உடன்படிக்கையைக்** கடைபிடித்தால் அனைத்துலகும் என் உடைமையேயெனினும், நீங்களே எல்லா மக்களினங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள்" (விடுதலைப் பயணம் 19:5)

**பாடம் 12**

**ஒரே கடவுள்**

பயிற்சி வினாக்கள்

1. முதல் கட்டளையைக் குறித்த மறைநூல் பார்வை என்ன?

பழைய ஏற்பாட்டு இஸ்ரயேல் மக்களின் வரலாற்றிலிருந்தே கட்டளைகள் உருவாயின. விடுதலைப் பயண நூலிலும் (விடுதலைப் பயணம் 20:2-6), இணைச்சட்ட நூலிலும் (இணைச்சட்டம் 5:6-10) முதல் கட்டளை நீண்ட விளக்கத்துடன் கூறப்பட்டுள்ளது. எகிப்திலிருந்து இஸ்ரயேல் மக்களை மீட்ட நிகழ்ச்சியே முதல் கட்டளைக்கு அடிப்படையாக நிலவுகிறது.

முதல் கட்டளையின் வழியாக தம்மை ஒரே கடவுளாக ஏற்றுக்கொண்டு ஆராதனை செய்ய வேண்டும் என்று கடவுள் இஸ்ரயேல் மக்களிடம் கூறியுள்ளார் (இணைச் சட்டம் 6:13-15). ஒரே கடவுள் நம்பிக்கையே முதல் கட்டளையின் உட்பொருள். இஸ்ரயேல் மக்களை ஒன்றிணையச் செய்ததும் இந்த ஒரே கடவுள் கொள்கையாகும். இஸ்ரயேல் மக்கள் எப்போதெல்லாம் பிற தெய்வங்களை வழிபட்டார்களோ அப்பொழுதெல்லாம் அவர்களுக்குள் பிரிவினையும், தோல்வியும் நிகழ்ந்தது.

சீனாய் உடன்படிக்கையின் வழியாக கடவுளாகிய ஆண்டவரை தங்கள் வரலாற்றில் உட்படுகின்ற கடவுளாக இஸ்ரயேல் மக்கள் புரிந்து கொண்டனர். இந்த அனுபவம் அவர்களை யாவே ஒரே கடவுள் என்னும் கொள்கைக்கு வழிநடத்தியது. கடவுளின் அன்பும், இரக்கமும் அவர்களை அக்கொள்கையில் நிலை நிறுத்தியது. பிற தெய்வங்களை வழிபடுவதன் வழியாக உண்மைக் கடவுளுடன் அவர்களுக்கு உள்ள உறவில் விரிசல் ஏற்படும் என்பதை அறிந்து கொண்ட இஸ்ரயேல் மக்கள் சிலை வழிபாட்டிலிருந்தும், பிற ஆராதனைகளிலிருந்தும் பின் மாறினர்.

புதிய ஏற்பாட்டில், பாலை நிலத்தில் இயேசு சோதிக்கப்படும் போது இயேசு சாத்தானிடம் “உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணிவிடை செய்” (மத்தேயு 4:10) என்று கூறினார். இதிலிருந்து படைப்புப் பொருள்களை வணங்கக் கூடாது என்று இயேசு கண்டிப்பாக கூறியதை அறியமுடிகிறது.

2. மூட நம்பிக்கை என்பது யாது?

உண்மை விசுவாசத்திலிருந்து பிரிந்து தவறான கொள்கைகளைக் கடைபிடிப்பதே மூட நம்பிக்கை. உண்மை விசுவாசத்தின் குறைபாடும், ஆழ்ந்த விசுவாசமின்மையுமே ஒருவரை அவநம்பிக்கைக்கு அழைத்துச் செல்கிறது. கடவுளின் நிலையான ஆற்றல் மற்றும் முழு அதிகாரத்தைப் பற்றி மனிதனின் உண்மையான மனநிலையை அவநம்பிக்கைகள் குழப்பமடையச் செய்கின்றன.

எல்லா ஆற்றலும், நன்மையும் கடவுளிடமிருந்தே வருகிறது என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாமல் வரும்போது ஒருவன் மூட நம்பிக்கைவாதியாக மாறுகிறான். மூடநம்பிக்கைகள் மனிதனின் உடல் சார்ந்த வாழ்வுக்கும், மன ஆரோக்கியத்துக்கும் அறநெறிக்கும் எதிரானதாகும். மூட நம்பிக்கைகள் இரண்டு வகைப்படும். அவை வரவிருப்பனவற்றை முன்னறிவித்தலும், மந்திர வித்தைகளுமாகும்.

ஜோதிடம், கைரேகை பார்த்தல், ஜாதகம், நாள், ராகு, சகுணம் போன்றவை வரவிருப்பவற்றை முன்னறிவித்தல் தொடர்பான தீமைகளாகும். இவையனைத்தும் மக்கள் விசுவாசத்திலிருந்து அகன்று செல்ல முக்கிய காரணிகளாகும். இச்செயல்களில் ஈடுபடுபவர்கள் கடவுளின் ஆற்றலில் உள்ள விசுவாசத்தையே புறக்கணிக்கின்றனர்.

சாத்தான் வழிபாடு, தாயத்து கட்டுதல், மந்திரவாதம், தீய சிந்தனை, பில்லிசூனியம் போன்ற தீய சக்திகளை மகிழ்விக்கும் சடங்குகள் மாந்திரிக வித்தைகளில் உட்படும். இவைகளில் ஈடுபடுவது கடவுள் நம்பிக்கைக்கு எதிரான செயல்களாகும்.

விசுவாசத்துக்கு எதிராக இது போன்ற பாவங்கள் இருப்பினும் தங்களுடைய விசுவாசத்தை பாதுகாக்க ஒவ்வொரு விசுவாசியும் கடமைப்பட்டவர்களே ஆவர். கடவுளில் ஆழமான நம்பிக்கை கொள்ளவும், மன்றாட்டுகளில் ஆற்றல் பெறவும் செய்வதன் வழியாக விசுவாசத்துக்கு எதிரான தீமைகளை அழிக்க ஒவ்வொருவராலும் இயலும். தங்கள் விசுவாசத்தை பாதுகாக்கவும், பிறர் அவர்களுடைய விசுவாசத்தை பாதுகாக்க அவர்களுக்கு உதவி புரிவதும் ஒவ்வொருவருடையவும் கடமையாகும்.

3. எதிர்நோக்குக்கு எதிரான பாவங்களை விவரி?

எதிர்நோக்குக்கு எதிரான பாவங்கள் மனிதனை கடவுளிடமிருந்து அகற்றுகிறது. எதிர்நோக்குக்கு எதிரான பாவங்கள் இரண்டு வகைப்படும். அவை ஏமாற்றமும், தவறான எண்ணமுமாகும். கடவுளிலும், கடவுளின் இரக்கத்திலும் விசுவாசமில்லாததும், தனக்கு

www.malankaralibrary.com

கடவுளின் உதவி கிடைக்காது என்பதுமான சிந்தனையே ஏமாற்றம். இதற்கு ஆட்படுகின்ற ஒருவருக்கு ஆன்மீக நன்மைகளில் உள்ள ஈடுபாடு குறையவும், இறைபற்று இழந்து விடவும் செய்கிறது. இறைவனின் கருணை மற்றும் நிலையான மீட்பு ஆகியவற்றை புறக்கணிப்பதனால் இது ஒரு சாவான பாவம் ஆகும்.

கடவுளில் தேவையான அளவு எதிர்நோக்கு இல்லாமல் தன்னால் எல்லாம் முடியும் என்னும் அகந்தையே தவறான எண்ணமாகும். கடவுள் நன்மையின் நிறைவாகையால் நாம் எந்த தீமை செய்தாலும் அவர் மீட்டுக்கொள்வார் என்னும் தவறான கொள்கையும் இதில் அடங்கியிருக்கிறது. கடவுளுடனான உறவை புறக்கணிப்பதனால் இது பாவமாகும்.

4. நமக்கு முன்பாக வேறு தேவர்களை நீ கொண்டிராதிருப்பாயாக என்பதன் வாயிலாக புரிந்து கொள்வது யாது?

கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு தம்மைத் தாமே வெளிப்படுத்தி கற்பிப்பது கடவுளைப் பற்றி வேறு எந்த கற்பனையும் அவர்களுக்கு இருக்கலாகாது என்பதாகும். கடவுளாகிய ஆண்டவரைத் தவிர வேறு எந்த நபரையோ, பொருளையோ, இயற்கையையோ, ஆராதிக்கக் கூடாது என்று ஒன்றாம் கட்டளை கற்பிக்கிறது. அதனால் கடவுளுக்கு உரிய இடத்தை வேறு எந்த பொருளுக்கும் கொடுத்தல் கூடாது.

'நமக்கு முன்பாக வேறு தெய்வங்களை நீ கொண்டிராதிருப்பாயாக' என்ற முதல் கட்டளையின் இரண்டாம் பகுதிக்கு எதிராக உள்ள பாவமே சிலை வழிபாடு. உண்மைக் கடவுளுக்கு கொடுக்க வேண்டிய வழிபாட்டை பிற நபருக்கோ அல்லது படைப்புப் பொருளுக்கோ கொடுக்கும் போது அது சிலை வழிபாடாக மாறுகிறது. சிலை வழிபாடு சாவான பாவமாகும். ஏனெனில் அது கடவுளின் அதிகாரத்தையும் ஒப்பற்ற தன்மையையும் புறக்கணிக்கிறது.

சிலை வழிபாடு பல முறைகளில் காணப்படுகிறது. செல்வம், தனிநபர், அதிகாரம் போன்றவைகளை சிலைகளாக மனதில் எண்ணிக்கொண்டு வழிபடுவது சிலைவழிபாடு ஆகும்.

விளையாட்டு வீரர்கள், சினிமா நடிகர்கள், ஆட்சியாளர்கள், அரசியல் தலைவர்கள் போன்றவர்களுக்கு மனதில் கடவுளுக்கு ஒப்பான இடத்தைக் கொடுப்பதும் இக்கட்டளைக்கு எதிரானதாகும். படைத்தவரின் இடத்தில் படைப்பை வைத்து பார்ப்பது சிலை வழிபாடாகும்.

கடவுளின் சக்தியை சோதிப்பதற்கான முயற்சிகளும், கடவுளை புறக்கணிப்பதும் முதலாம் கட்டளைக்கு எதிரானதாகும். அதுபோன்று தெய்வீக பொருட்கள், திருவழிபாட்டு இடங்கள் இவற்றை புறக்கணிப்பதும் புனிதப் பொருட்களை தன்னலத்துக்காக மட்டும் பயன்படுத்துவதும் சாவான பாவமாகும்.

5. புனிதர்களை வணங்குவது தவறு அல்ல ஏன்?

பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பிறதெய்வங்களின் சிலைகளை உருவாக்குவதும் அதனை வழிபடுவதும் சாதாரணமாக இருந்தது. இச்சூழ்நிலையில் யாவே கடவுளை வழிபடுவதற்காக சிலைகளை உருவாக்குவதன் வழியாக ஒரே கடவுள் கோட்பாடு சிதைவடையும் என்பதனாலேயே சிலைகளை உருவாக்க கூடாது என்றும் அதனை வழிபடக்கூடாது என்றும் கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு கட்டளையிட்டார்.

தொடக்கத்திருச்சபையில் 4-ம் நூற்றாண்டுக்குப் பின் இக்கண்ணோட்டம் மாறுதலடைந்தது. இயேசுவையும், இறையன்னையையும், புனிதர்களையும் நினைவு கூர்ந்து மதிப்பளிப்பதற்காக தொடக்கத் திருச்சபையினர் உருவங்களையும், படங்களையும் பயன்படுத்தத் தொடங்கினர். இதன் வழியாக இயேசுவையும், புனிதர்களையும் மதித்து வாழ கிறிஸ்தவர்களுக்கு முடிந்தது.

ஒன்றாம் கட்டளைக்கு எதிராக அன்று, மாறாக ஒன்றாம் கட்டளையின் உள்பொருளை வெளிப்படுத்துவதற்காகவே ஆகும். இரண்டாம் நிசேயா பொதுச்சங்கம் உருவங்கள் மற்றும் படங்களின் வழியாக இயேசுவையும், புனிதர்களையும் மதிப்பது தவறு இல்லை என்று கற்பித்தது. இதனையே இன்றும் திருச்சபை செயல்படுத்தி வருகிறது.

தந்தை மகன் தூய ஆவியாகிய மூவொரு கடவுளுக்கு மட்டுமே வழிபாடு செலுத்த வேண்டும் என்று முதலாம் கட்டளை கற்பிப்பிக்கிறது. ஆனால் இறையன்னை மற்றும் புனிதர்களுடனான வணக்கத்தை திருச்சபை ஊக்குவிக்கின்றது. ஏனெனில் புனிதர்களுடனான வணக்கம் இறை வழிபாட்டுக்கு எதிரானது அல்ல. அது மீட்பின் மறைபொருள் மற்றும் இறை அனுபவத்துக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. புனிதர்களுக்கு விசுவாசிகள் வணக்கம் மட்டுமே செலுத்துகின்றனர். இது வழிபாடு அல்ல.

www.malankaralibrary.com

## குறுவினா விடைகள்

1. "உனக்கு ஆண்டவராகிய நாமே உன் **கடவுள்**: நமக்கு முன்பாக வேறு தெய்வங்களை நீ கொண்டிராதிருப்பாயாக"
2. முதல் கட்டளை ஆரம்பமாகின்ற கடவுளின் அருளுரை என்ன? "நான் உன் கடவுளாகிய ஆண்டவர். அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர்" (விடுதலைப் பயணம் 20:2)
3. கட்டளைகள் உருவான அடிப்படை என்ன? பழைய ஏற்பாட்டு இஸ்ரயேல் மக்களின் வரலாற்றிலிருந்தே
4. பத்துக் கட்டளைகளுள் முதல் கட்டளை நீண்ட விளக்கத்துடன் கூறப்பட்டுள்ளது எங்கே? விடுதலைப் பயண நூலிலும் (விடுதலைப் பயணம் 20:2-6), இணைச்சட்ட நூலிலும் (இணைச்சட்டம் 5:6-10).
5. பத்துக் கட்டளைகளுள் முதல் கட்டளைக்கு அடிப்படையான நிகழ்வு என்ன? எகிப்திலிருந்து இஸ்ரயேல் மக்களை மீட்ட நிகழ்ச்சி
6. பத்துக் கட்டளைகளுள் முதல் கட்டளையின் உட்பொருள் என்ன? தந்தை மகன் தூய ஆவியாகிய ஒரே கடவுள் நம்பிக்கை
7. "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணிவிடை செய்" (மத்தேயு 4:10) யார் யாரிடம் கூறியது? இயேசு சாத்தானிடம்
8. கட்டளைகளின் வெளிப்படையான பொருள் என்ன? இறையியல் புண்ணியங்களான விசுவாசம், அன்பு, எதிர்நோக்கு போன்றவைகளின் அடிப்படையில் படைப்பாளரும், பரிபாலிக்கின்றவருமான கடவுளை மக்கள் ஆராதிக்க வேண்டும்.
9. முதல் கட்டளையின் வழியாக ஆண்டவர் நம்முடன் கேட்டுக்கொள்வது என்ன? ஒரே கடவுளில் உள்ள உறுதியான நம்பிக்கை, அவரது பாதுகாப்பிலுள்ள எதிர்நோக்கு, அவருடனான ஆழமான அன்பு ஆகிய மூன்றையும்
10. முதல் கட்டளையின் முதல் பகுதி எதைக்காட்டுகிறது? ஒரே கடவுள் நம்பிக்கை
11. முதல் கட்டளையின் இரண்டாம் பகுதி எதைக்காட்டுகிறது? சிலை வழிபாட்டை எதிர்க்கிறது.
12. கடவுளின் வெளிப்பாட்டுக்கு மனிதன் அளிக்கும் பதில் மொழி என்பது என்ன? விசுவாசம்.
13. நம்பிக்கை என்பதன் பொருள் என்ன? நாம் விசுவாசிப்பதற்காக திருச்சபை அளித்திருப்பதும், மறைநூலில் வெளிப்படுத்தியிருக்கின்றதுமான உண்மைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்
14. கடவுளில் உள்ள நம்பிக்கைக்கு எதிரான பாவங்கள் எவை? நம்பிக்கையின்மையும் மூடநம்பிக்கையும்
15. நம்பிக்கையின்மை என்றால் என்ன? நம்பிக்கை கொள்ள வேண்டிய செயல்களில் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதும் அரைகுறையாக விசுவசிப்பதும் நம்பிக்கையின்மை
16. நம்பிக்கையின்மையின் வகைகள் எவை? மதத்தியாகம், தப்பறை, நாத்திகக் கொள்கை.
17. மதத்தியாகம் என்றால் என்ன? ஒரு விசுவாசி உண்மை விசுவாசத்தை முழுமையாக புறக்கணிக்கும் நிலை
18. திருமுழுக்கின் வழியாக திருச்சபையின் உறுப்பினரான ஒருவர் விசுவாசத்தைப் புறக்கணிப்பதன் வழியாக எவ்வாறு மாறுகிறார்? நம்பிக்கையின்மைவாதியாக
19. தப்பறை என்றால் என்ன? மறைநூல் மற்றும் திருச்சபையின் வெளிப்படுத்தப்பட்ட மீட்பின் மறைபொருளில் ஒன்றோ அல்லது அதற்கு மேலாகவோ உள்ள பகுதிகளை எதிர்ப்பது
20. தப்பறை சாவான பாவமாகும் என்பதற்கு எடுத்துக்காட்டு என்ன? தூய ஆவியின் கடவுள் தன்மையை புறக்கணிப்பது.
21. நாத்திகக் கொள்கை என்றால் என்ன? கடவுள் இல்லை என்பதும், கடவுளின் இருத்தல் தன்மையை புறக்கணிப்பதும்
22. மூட நம்பிக்கை என்றால் என்ன? உண்மை விசுவாசத்திலிருந்து பிரிந்து தவறான கொள்கைகளைக் கடைபிடிப்பது

www.malankaralibrary.com

23. மூடநம்பிக்கைகளின் இரு வகைகள் எவை? வரவிருப்பவற்றை முன்னறிவித்தலும், மந்திர வித்தைகளும்
24. வரவிருப்பவற்றை முன்னறிவித்தல் தொடர்பான செயல்கள் எவை? ஜோதிடம், கைரேகை பார்த்தல், ஜாதகம், நாள், ராகு, சகுணம்
25. மந்திர வித்தைகள் எவை? சாத்தான் வழிபாடு, தாயத்து கட்டுதல், மந்திரவாதம், தீய சிந்தனை, பில்லிசூனியம்
26. இஸ்ரயேல் மக்களின் எதிர்நோக்கின் அடிப்படை எது? சீனாய் உடன்படிக்கை
27. இறைமக்களாக வாழவும், நிலைவாழ்வு பெறவும் இறைமக்களுக்கு ஆற்றல் அளிக்கும் இறையியல் புண்ணியம் எது? எதிர்நோக்கு.
28. எதிர்நோக்கின் மறுபெயர் என்ன? சரணம்
29. எதிர்நோக்கின் பலன்கள் எவை? சகிப்புத்தன்மை, திறந்தமனம், செயல்திறன்
30. எதிர்நோக்குக்கு எதிரான பாவங்கள் எவை? ஏமாற்றமும், தவறான எண்ணமும்.
31. இறைவனோடு ஏமாற்றம் என்றால் என்ன? கடவுளிலும், கடவுளின் இரக்கத்திலும் விசுவாசமில்லாததும், தனக்கு கடவுளின் உதவி கிடைக்காது என்பதுமான சிந்தனையே
32. இறைவனோடு ஏமாற்றம் என்பது சாவான பாவம் ஏன்? இறைவனின் கருணை மற்றும் நிலையான மீட்பு ஆகியவற்றை புறக்கணிப்பதனால்
33. இறைவனோடு கொள்ளும் தவறான எண்ணம் என்றால் என்ன? கடவுளில் தேவையான அளவு எதிர்நோக்கு இல்லாமல் தன்னால் எல்லாம் முடியும் என்னும் அகந்தையே.
34. இறைபுண்ணியங்களில் தலையானது எது? அன்பு
35. இறைகட்டளைகளின் சுருக்கமான அன்பின் இரண்டு பக்கங்களாக இயேசு சுட்டிக் காட்டுபவை என்ன? இறையன்பும், பிறரன்பும்
36. “உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் **அன்பு** செலுத்து. இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை. உன்மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" (மத்தேயு 22:37-39).
37. அன்புக்கு எதிரான பாவங்கள் எவை? வெறுப்பு, பகை, இடறல், ஈடுபாடில்லாமை
38. ஒருவருடைய செயல் வழியாக மற்றொருவரில் பாவச் சூழ்நிலையை ஏற்படுத்துவது என்றால் என்ன? இடறல்
39. பிறரில் பாவ சூழ்நிலையை ஏற்படுத்துபவர்களைப் பற்றி இயேசு கூறுவது என்ன? "கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது” (மத்தேயு 18:6).
40. கடவுளோடு ஒத்துழைக்க ஒருவர் காட்டும் விருப்பமின்மைக்கு பெயர் என்ன? ஈடுபாடின்மை
41. உத்தமமான அறவாழ்வுக்கு ஆற்றல் அளிக்கும் இறைபுண்ணியங்கள் எவை விசுவாசம், அன்பு, எதிர்நோக்கு
42. உருவங்கள் மற்றும் படங்கள் வழியாக இயேசுவையும், புனிதர்களையும் மதிப்பது தவறு இல்லை என்று கற்பித்த பொதுச்சங்கம் எது? இரண்டாம் நிசேயா பொதுச்சங்கம்
43. 'நமக்கு முன்பாக வேறு தெய்வங்களை நீ கொண்டிராதிருப்பாயாக' என்ற முதல் கட்டளையின் இரண்டாம் பகுதிக்கு எதிராக உள்ள பாவம் எது? சிலை வழிபாடு.
44. சிலை வழிபாடு என்றால் என்ன? உண்மைக் கடவுளுக்கு கொடுக்க வேண்டிய வழிபாட்டை பிற நபருக்கோ அல்லது படைப்புப் பொருளுக்கோ வழங்குதல்
45. சிலை வழிபாட்டுக்கு இணையான மற்று முறைகள் எவை? செல்வம், தனிநபர்கள், அதிகாரம் போன்றவைகளை சிலைகளாக மனதில் எண்ணி வழிபடுதல்
46. படைத்தவரின் இடத்தில் படைப்பை வைத்து பார்ப்பது என்ன? சிலை வழிபாடு
47. கடவுள் ஒருவரே என்றும் கடவுளில் மூன்று நபர்கள் உண்டு என்றும் பாசுரமாலை வெள்ளி மாலை மன்றாட்டில் பாடுவது என்ன? "தந்-தை - மை-ந்தன் தூயாவிக்கும் புகழ் போற்றுதல்கள் ஆராதனையும் ஆகுகவே ஆட்கள் எண்-ணில் மூன்றொன்றாய் முப்பெயராலே இலங்கும் மெய்பரனே போற்றி”

www.malankaralibrary.com

48. “உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் **<u>ஒருவருக்கே</u>** பணி செய்வாயாக என்று மறைநூலில் எழுதியுள்ளது" லூக்கா 4:8).

**பாடம் 13**

**ஆண்டவரின் திருப்பெயர் மாட்சிமைக்குரியது**

**குறு வினா விடைகள்**

1. இறைகட்டளைகளில் இரண்டாவது கட்டளை எது? “ஆண்டவருடைய திருப்பெயரை வீணாக பயன்படுத்தாதே”
2. பழைய ஏற்பாட்டு மக்கள் இரண்டாம் கட்டளையின் வழியாக புரிந்து கொள்பவை என்ன? கடவுளின் திருப்பெயரை எந்த வகையிலும் மாசு படுத்தக் கூடாது, அவரது திருப்பெயரில் பொய் ஆணையிடக்கூடாது
3. இயேசு கிறிஸ்து பொய் ஆணையிடுதல் கூடாது என்றும் கடவுளின் திருப்பெயரை வீணாக பயன்படுத்துதல் கூடாது என்றும் எப்போது கற்பித்தார்? மலைப்பொழிவு
4. கடவுளின் **<u>திருப்பெயர்</u>** கடவுளை முழுமையாக வெளிப்படுத்துகிறது.
5. ஆண்டவரின் திருப்பெயரை அறிதல் என்பதன் பொருள் என்ன? ஆண்டவரை அறிதலும், ஆண்டவரின் பெயரைச் சொல்லி அழைத்து சரணடைதலும்
6. ஆண்டவரின் திருப்பெயர் **<u>இயேசுவின்</u>** வழியாகவே முழுமையாக வெளிப்பட்டது.
7. "தந்தையே உமது பெயர் **<u>தூயதெனப்</u>** போற்றப்பெறுக" (லூக்கா 11:2).
8. தொடக்கத் திருச்சபையில் இயேசுவின் பெயரால் திருத்தூதர்கள் குணப்படுத்தியச் சொல் எது? "நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்” (திருத்தூதர் பணிகள் 3:6)
9. “நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ் மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்த பெயரும் கொடுக்கப்படவில்லை” (திருத்தூதர் பணிகள் 4:12) என்றவர் யார்? திருத்தூதர் பேதுரு
10. . "கடவுள் அவரை (இயேசு) மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். என்றவர் யார்? திருத்தூதர் பவுல்
11. ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக 'இயேசு கிறிஸ்து ஆண்டவர்' என எல்லா நாவுமே அறிக்கையிடும் (பிலிப்பியர் 2:9-11) என்றவர் யார்? திருத்தூதர் பவுல்
12. இரண்டோ மூன்றோ பேர் என் பெயரால் எங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்' என்றவர் யார்? இயேசு கிறிஸ்து
13. ஆண்டவரின் திருப்பெயரைப் போற்றுதலின் வழியாக நாம் **<u>ஆண்டவரையேப்</u>** போற்றுகின்றோம்.
14. ஆண்டவரைப் போற்றுவதற்கான திருப்பாடலாசிரியரின் அழைப்பு என்ன? “ஆண்டவரின் ஊழியர்களே அவரைப் புகழுங்கள், அவரது பெயரைப் போற்றுங்கள். ஆண்டவரது பெயர் வாழ்த்துப் பெறுவதாக. இப்பொழுதும் எப்பொழுதும் வாழ்த்துப் பெறுவதாக. கீழ்த்திசை முதல் மேற்றிசைவரை ஆண்டவரது பெயர் போற்றப்படுவதாக” (திருப்பாடல்கள் 113:1-3).
15. ஆண்டவரின் திருப்பெயரை போற்றவும், புகழவும், மகிமைப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்ற கருவிகள் எவை? நோன்பு, உறுதிமொழி, இறையாசீர், அலகையைப் புறக்கணித்தல், கிறிஸ்தவ பெயர்களை பயன்படுத்துதல்
16. பொருத்தனைகள் என்றால் என்ன? கடவுளுடன் நேராக செய்வதும் அவர் நேராக ஏற்றுக்கொள்வதுமான வாக்குத்தத்தம்
17. பொருத்தனைகளை மீறுதல் எந்த கட்டளைக்கு எதிரான பாவமாகும்? இரண்டாம்
18. ஆண்டவரின் திருப்பெயரால் செய்யப்படுகின்ற உறுதிமொழியின் வழியாக நாம் யாரை மாட்சிமைப்படுத்துகின்றோம்? ஆண்டவரை
19. ஆண்டவரின் பெயரால் ஒருவரை ஆசீர்வதிக்கும் போது உணர்வது என்ன? ஆண்டவரின் பிரசன்னம்
20. மனித இனத்துக்கு எதிராக தீமை புரியும் சக்தி எது? அலகை.

www.malankaralibrary.com

21. திருச்சபையில் அலகையைப் புறக்கணிப்பதற்கான அதிகாரம் கொண்டவர்கள் யாவர்? குருக்கள்
22. திருமுழுக்கின் வழியாக பெற்றுக்கொண்ட கிறிஸ்தவப் பெயர்கள் நிலைபெறச் செய்வது எந்த கட்டளைக்கு நாம் செலுத்தும் ஆதரவாகும்? இரண்டாம் கட்டளைக்கு
23. பிறரைக் குறித்து பொய் பேசுவதும், தவறானவற்றைப் பறைசாற்றுவதும், தீய வார்த்தைகளைக் கூறி பிறரை அழைப்பதும் எந்த கட்டளைக்கு எதிரானது? இரண்டாம் கட்டளை
24. கடவுளைப் பழித்துரைப்பது என்பவை எவை? கடவுளைப் புறக்கணித்தல், நிந்தனை செய்தல், சாபமிடுதல், வெறுத்தல், கடவுளுக்கு எதிராகவும், கடவுளின் செயல்களுக்கு எதிராகவும், விவேகமற்ற முறையில் பேசுவதும், கடவுளின் பராமரிப்பை விமர்சிப்பதும், கடவுள் நீதியற்றவரும் இரக்கமற்றவரும் என்று ஆட்சேபனை செய்தலும்
25. கடவுளைப் பழித்துரைத்தலின் இரு வகைகள் எவை? (அ) வெளிப்படையாக, (ஆ) மறைமுகமாக
26. வெளிப்படையாகக் கடவுளை பழித்துரைத்தல் என்றால் என்ன? கடவுளை நிந்தனை செய்து புறக்கணித்தலே
27. மறைமுகமாகக் கடவுளை பழித்துரைத்தல் என்றால் என்ன? கடவுளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நபர்களையோ, இடங்களையோ, பொருள்களையோ அவமதிப்பதும், தீய வார்த்தைகளால் பேசுவதும்
28. பொய்யாணை இடுவது பாவமாவது ஏன்? தவறான ஒரு வாக்குறுதி ஆண்டவரை பொய்மைக்கு சான்று பகர்பவராக மாற்றுகிறது.
29. "ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்; அவர் **பெயரை** வாழ்த்துங்கள்" (திருப்பாடல்கள் 96:2),
30. "நல்ல **ஆயன்** நானே. நல்ல **ஆயன்** தன் ஆடுகளுக்காக தம் உயிரைக் கொடுப்பார்" (யோவா 10:11).

## பாடம் 14

## ஞாயிறு நாள் கொண்டாட்டம்

### பயிற்சி வினாக்கள்

1. ஓய்வு நாள் கொண்டாட்டத்தைக் குறித்து பழைய ஏற்பாடு கற்பித்தது என்ன?

சாபத்து என்னும் வார்த்தைக்கு 'வேலையிலிருந்து ஓய்வெடுத்தல், ஒத்தி வைத்தல்' போன்ற பொருள்கள் உள்ளன. எல்லா வேலைகளையும் விட்டு விட்டு இறை வழிபாட்டிற்காக மாற்றி வைக்கப்பட்டிருக்கின்ற நாளே இந்த ஓய்வுநாள்.

ஓய்வு நாள் கொண்டாட்டத்தைக் குறித்து ஆண்டவர் இவ்வாறு கற்பித்தார். "ஓய்வு நாளைத் தூயதாகக் கடைபிடிப்பதில் கருத்தாயிரு. ஆறு நாள்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலைகளையும் செய்வாய். ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள். எனவே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்" (விடுதலைப் பயணம் 20:8-10). ஓய்வு நாளை தொடங்கி வைத்தவர் யாவே கடவுள் ஆவார்.

இஸ்ரயேல் மக்களைப் பொறுத்தமட்டில் ஓய்வு நாள், படைப்பு மற்றும் விடுதலைப் பயண நிகழ்வுகளின் நினைவு கூர்தல் ஆகும். உலகப் படைப்பும், விடுதலைப் பயண நிகழ்வும் மனித வரலாற்றில் ஆண்டவர் ஈடுபடுவதைக் காட்டுகிறது. "ஆண்டவர் ஆறு நாள்களில் விண்ணுலகையும், மண்ணுலகையும், கடலையும், அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறு ஆண்டவர் ஓய்வு நாளுக்கு ஆசி வழங்கி அதனைப் புனிதப்படுத்தினார்" (விடுதலைப் பயணம் 20:11). ஏழாம் நாள் ஓய்வெடுக்க ஆண்டவரின் முன்மாதிரியே ஓய்வுநாள் கடைப்பிடித்தலுக்கு அடிப்படை ஆகும்.

எல்லா வகையான வேலைகளிலிருந்தும் அகன்று நிற்க வேண்டும் என்னும் மதம் சார்ந்த பொருளிலேயே பழைய ஏற்பாடு ஓய்வு நாளை கண்டிருந்தது. ஆண்டவரின் தூய நாளான ஓய்வு நாளில் வேலை செய்பவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் (விடுதலைப் பயணம் 31:15) என்று பழைய ஏற்பாடு கற்பிக்கிறது. ஓய்வு நாள் மகிழ்ச்சியினுடையவும், ஓய்வினுடையவும், வழிபாட்டினுடையவும் நாளாகும். ஓய்வு நாள் கொண்டாட்டம் இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதியாகக் காணப்பட்டது.

ஆண்டவர் மனிதனோடு ஏற்படுத்திய உடன்படிக்கையைக் குறித்து இறைமக்களுக்கு நினைவூட்டுகின்ற நாளே ஓய்வு நாள். ஓய்வு நாள் கொண்டாட்டத்தின் வழியாக கடவுள் அவர்களின் ஆண்டவர் என்றும் தாங்கள் அவரின் பிள்ளைகள் என்றும் இஸ்ரயேல் மக்கள் அறிக்கையிட்டனர். கடவுள் இஸ்ரயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் நினைவு கூர்தலின் அடையாளமே ஓய்வு நாள்.

யூதர்களின் முதன்மையான ஆராதனையும் கொண்டாட்டமும் ஓய்வு நாள் ஆகும். யூத மக்களின் மதம் சார்ந்த வாழ்விலும், சமூக வாழ்விலும் ஓய்வு நாள் கொண்டாட்டம் மிக இன்றியமையாததாகக் காணப்பட்டது. ஓய்வு நாளில் தேவாலயங்களில் பலி அர்ப்பிக்கவும், தொழுகைக் கூடங்களில் மறைநூல் வாசிக்கவும், செபிக்கவும் செய்திருந்தனர்.

நாளடைவில் ஓய்வு நாளில் எந்த வேலையும் செய்ய முடியாத அளவிற்கு யூத மறைவல்லுநர்கள் மாற்றியமைத்தனர். புதிய ஏற்பாட்டில் ஓய்வு நாளைக் குறித்த செய்திகளனைத்தும் இயேசுவோடு தொடர்பு கொண்டிருந்தது.

2. ஓய்வு நாளைக் குறித்த இயேசுவின் மனநிலையை விளக்குக?

ஓய்வு நாள் கொண்டாட்டத்தின் கடுமையும் அதற்கு இயேசு அளிக்கும் மனித நேயமிக்க அர்த்தமும் ஓய்வு நாளைப் பற்றி நற்செய்தியில் விவாதிக்கப்படுகின்றன. “ஓய்வு நாளில் நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா? எது முறை” (மாற்கு 3:4) என்று கேட்டுக்கொண்டு இயேசு ஓர் ஓய்வுநாளில் கைசூம்பியவரைக் குணப்படுத்தினார்.

இவ்வாறு ஓய்வுநாளில் நன்மை செய்ய வேண்டும் என்று இயேசு கற்பித்தார். மேலும் “ஓய்வு நாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது. மனிதர் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஆதலால் ஓய்வு நாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே” (மாற்கு 2:27-28) என்று அருளிச்செய்து ஓய்வு நாளைக் குறித்த தமது மன நிலையை இயேசு வெளிப்படுத்தினார். மனித நேயத்தை மாற்றி வைக்க மறந்த ஓய்வு நாள் கொண்டாட்டத்தை இயேசு வன்மையாகக் கண்டித்தார். ஆனால் இயேசு ஒரு போதும் ஓய்வு நாளைப் புறக்கணிக்கவில்லை. அதனை கடைபிடிக்கவே செய்தார்.

தமது பகிரங்க வாழ்வின் போது இயேசு ஓய்வு நாளைக் கடைபிடித்ததாக மறைநூல் சான்று பகர்கின்றது. ஓய்வுநாளை இறைவழிபாட்டிற்கு மிகவும் உகந்த நாளாக இயேசு கருதினார். இயேசு எல்லா நாட்களிலும் தொழுகைக் கூடங்களுக்குச் சென்று இறைவார்த்தையைப் போதித்து வந்தார். இயேசுவின் போதனைகளையும், செயல்களையும் வைத்துப் பார்க்கும் போது நன்மை புரிவதற்கு மிகவும் உகந்த நாள் ஓய்வு நாள் ஆகும்.

ஓய்வு நாளில் நோயாளிகளுக்கு நலமளித்ததன் வழியாக ஓய்வு நாள் மீட்பின் அடையாளம் என்னும் உண்மையை இயேசு வெளிப்படுத்தினார். மனித நன்மைகளுக்கு எதிரான செயல்கள் ஓய்வு நாளில் செய்யக் கூடாது என்றும் மனித நன்மையைக் குறிக்கோளாக வைத்துச் செயல்படும் போது தான் ஓய்வு நாள் இன்னும் பொருள் மிகுந்ததாக மாறுகிறது என்றும் இயேசு கற்பித்தார்.

3. தொடக்கத் திருச்சபையின் ஞாயிறு நாள் கொண்டாட்டத்தைக் குறித்து விளக்குக!

முதல் கிறிஸ்தவர்களும் யூதர்களைப் போன்று ஓய்வு நாளைக் கடைபிடித்து வந்தனர். ஓய்வு நாளைப் போன்று கிறிஸ்துவின் உயிர்ப்பு நாளான ஞாயிறு நாளை கொண்டாடும் முறை கிறிஸ்தவர்களிடையே வளர்ந்து வந்தது. நாளடைவில் ஓய்வு நாள் கொண்டாட்டம் இல்லாமல் போனது. மாறாக ஓய்வுக்கும், வழிபாட்டிற்குமாக ஞாயிறு நாளை அவர்கள் பயன்படுத்தத் தொடங்கினர். ஓய்வு நாளின் நிறைவாகவும், கிறிஸ்தவ மயமாக்கப்பட்ட ஓய்வு நாளாகவும் ஞாயிற்றுக்கிழமை சிறப்பிக்கப்படுகிறது.

கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில் ஞாயிறு நாள் எல்லா நாட்களை விடவும், திருநாட்களை விடவும் தலைசிறந்த நாளாகக் கருதப்படுகிறது. ஞாயிறு நாள் கொண்டாட்டம் என்பது ஓய்வு நாளின் மற்றொரு வடிவம் அல்ல முற்றிலும் மாறுபட்ட ஒரு தினமாகும். இந்த வேறுபாட்டிற்கு உறைவிடம் கிறிஸ்துவின் உயிர்ப்பு நாளாகும்.

கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததனால் இந்நாள் ஆண்டவரின் நாள் என்று அனைவராலும் அழைக்கப்படுகிறது. மீட்பு நிகழ்ச்சிகளின் மிக முக்கியத்துவம் வாய்ந்த இயேசுவின் உயிர்ப்பின் நினைவு கூர்தல் என்னும் வகையில் ஞாயிறு நாள் கிறிஸ்தவ வாழ்க்கையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த நாளாக கொண்டாடப்படுகிறது.

ஆண்டவரின் நாளை ஒரு கொண்டாட்டமாகவே தொடக்கத் திருச்சபையினர் கருதினர். அவர்கள் ஞாயிறு நாளை ஆண்டவரின் உயிர்ப்பின் நினைவு கூர்தலாகவும், இரண்டாம் வருகையின் முன்சுவையாகவும் கொண்டாடினர். ஆண்டவரின் நாளில் தொடக்கத் திருச்சபையினர் ஒன்றுகூடி ஆராதனைகளில் பங்கு கொண்டனர்.

ஆண்டவரின் நாளில் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தி வந்த திருச்சடங்கு முறை ஓய்வு நாளில் தொழுகைக் கூடங்களில் பயன்படுத்தி வந்த திருச்சடங்கு முறையை ஒத்திருந்தது. "அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்" (திருத்தூதா பணிகள் 2:42).

முதல் நூற்றாண்டுகளில் ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாக அனுமதிக்கப்படவில்லை. நாளடைவில் கிறிஸ்தவ மதம் உரோமைப் பேரரசின் அதிகாரப்பூர்வமான மதமாக மாற்றப்பட்டவுடன் ஞாயிறு நாள் பொது ஓய்வு நாளாக அனுமதிக்கப்பட்டது.

4. ஞாயிறு நாள் கொண்டாட்டத்தைக் குறித்த திருச்சபையின் பார்வை என்ன?

ஞாயிற்றுக்கிழமையில் திருப்பலி செலுத்துவதற்காக திருச்சபை சமூகம் கூடி வருகிறது. அத்தோடு திருச்சபையாம் உடலை செழுமைப்படுத்துகிறது. திருமுழுக்கின் வழியாக திருச்சபையின் உறுப்பினரான விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுவதற்காகவும் கொண்டாடுவதற்காகவும் வைக்கப்பட்ட தினமே ஞாயிற்றுக்கிழமை. ஞாயிறு நாளை நாட்களில் சிறந்த நாளாக திருச்சபை சிறப்பிக்கின்றது.

திருச்சபைக் கட்டளைகளில் முதல் கட்டளை ஞாயிறு நாள் கொண்டாட்டத்தைப் பற்றியதாகும். இக்கட்டளையின் படி ஞாயிற்றுக்கிழமையில் திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காக திருச்சபை சமூகம் தேவாலயங்களில் ஒன்று கூட வேண்டும். தக்க காரணமின்றி திருப்பலியில் பங்கு கொள்ளாமல் இருப்பது திருச்சபைக் கட்டளைக்கு எதிரான செயலாகும்.

திருச்சபைச் சட்டங்களும், இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் 'திருவழிபாடு என்னும் ஏடும் ஞாயிறு நாள் கொண்டாட்டத்தைக் குறித்து கற்பிக்கின்றன. ஆண்டவரின் நாளாகிய ஞாயிறு நாள் தொடக்கத்திலிருந்தே வந்துள்ள பெருநாள். இந்நாளே திருவழிபாட்டு ஆண்டு முழுவதன் அடிப்படையாகவும் மையக் கருவாகவும் துலங்குகின்றது (காண்க திருவழிபாடு 106).

மேலும் பங்கு மக்கள் அனைவரும் ஒரே சமூகம் என்னும் உணர்வோடு ஞாயிறு நாள் திருப்பலியில் பங்கு கொள்ள வேண்டும் என்றும் திருச்சங்கம் கற்பிக்கின்றது. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 1998 மே 1-ம் நாள் வெளியிட்ட 'ஆண்டவரின் நாள்' என்னும் சுற்றுமடல் ஞாயிறு நாள் கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது.

கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையான உயிர்ப்பு நாளின் நினைவு கூர்தலான ஞாயிறு நாள் வாரந்தோறும் நடைபெறும் உயிர்ப்பு தினமாகும். கிறிஸ்துவின் உயிர்ப்பின் நிகழ்ச்சிகளை தியானிக்கவும், அதில் பங்கு கொள்ளவும் ஒவ்வொரு ஞாயிறும் விசுவாசிகளுக்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

ஞாயிறு நாளை தொடக்கத் திருச்சபையினர் மிகுந்த பக்திப் பற்றுதலுடன் கடைபிடித்து வந்தனர். ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் திருச்சபை மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்குகொள்ள வேண்டும் என்று திருச்சபை கண்டிப்புடன் கூறுகிறது. ஒரு கட்டளையைக் கடைபிடிப்பது என்று மட்டுமல்லாது கிறிஸ்தவ வாழ்வின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக ஞாயிறு நாள் கொண்டாட்டத்தை கடைபிடிக்க வேண்டும் என்று திருச்சபை கற்பிக்கின்றது. ஆண்டவராகிய கடவுள் ஆறு நாளில் உலகைப் படைத்துவிட்டு ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். அதனால் ஞாயிறு நாளை ஓய்வு நாளாக திருச்சபை கருதுகிறது.

5. கிறிஸ்தவ வாழ்வில் ஞாயிறு நாள் கொண்டாட்டத்தின் முக்கியத்துவம் என்ன?

ஞாயிறு நாள் திருப்பலியில் பங்கு கொள்வதை தடை செய்வதோ, அந்த நாளில் தூய்மையை இழப்பதோ ஆன எந்த செயல்களிலும் ஈடுபடக்கூடாது. இறைவழிபாட்டை தடை செய்வதும், ஆன்மீக வாழ்விற்கு தடை நிற்கின்றதுமான எல்லா செயல்களிலிருந்தும் அகன்று நிற்க விசுவாசிகள் கடமைப்பட்டுள்ளனர்.

ஞாயிறு நாள் கொண்டாட்டம் மிகவும் தூய்மையானதாக இருக்க வேண்டும். ஞாயிறு நாள் கொண்டாட்டத்தின் முழுமை என்பது திருப்பலியில் முழுமனதுடன் பங்கு கொள்வதில் அடங்கியிருக்கிறது. ஆயத்தத்துடன் திருப்பலியில் பங்குகொண்டு தேவ நற்கருணை உட்கொள்ளும் போது இந்நாள் மிகுந்த பொருள் நிறைந்ததாகக் காணப்படுகிறது. இது மட்டுமன்று பக்த இயக்கங்களிலும் விசுவாசிகள் கலந்து கொள்ள வேண்டும்.

ஞாயிறு நாள் கொண்டாட்டத்துக்கு எதிரான எல்லா செயல்களும் படைப்பாளரான கடவுளுக்கு எதிரானவை ஆகும். ஆண்டவருக்கு தகுந்த முறையில் ஆராதனை செலுத்துவதன் வழியாக அவரை நமது வாழ்வின் மீட்பரும் நாதருமாக ஏற்றுக்கொள்கின்றோம். நமக்காக அனைத்தையும் படைத்து பரிபாலித்து வரும் கடவுளுக்குரிய நேரத்தை கண்டடைய இயலவில்லையெனில் அது நாம் அவருக்குச் செலுத்தும் நன்றி அற்ற செயல் ஆகும். முழு

www.malankaralibrary.com

அறிவோடு ஞாயிறு நாள் கொண்டாட்டத்தில் பங்கு கொள்ளாமல் இருப்பது சாவான பாவமாகும்.

ஞாயிறு ஆராதனையில் விசுவாசத்துடன் பங்கு கொள்பவரின் பலி அர்ப்பணம் தேவாலயத்தில் முடிவடைவதில்லை. அது அவர்களின் வாழ்க்கையில் தொடர்கிறது. அன்பினுடையவும், இரக்கத்தினுடையவும் செயல்களைச் செய்ய விசுவாசிகள் ஞாயிறு நாளை மாற்றிவைக்க வேண்டும்.

ஞாயிறு நாளில் துன்பப்படுகிறவர்களையும், நோயுற்றவர்களையும் சந்திக்கவும், வேதனைப்படுபவர்களுக்கும், மனத்தாங்கல் உள்ளவர்களுக்கும் ஆறுதல் பகிர்ந்தளிக்கவும் நாம் முன்வர வேண்டும். இந்நாளில் செய்யப்படும் எல்லா செயல்களும் அன்பை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும். கடவுளையும் சகோதரர்களையும் ஒன்றுபோல் அன்பு செய்ய ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் முன்வர வேண்டும். ஆண்டவரின் உயிர்ப்பு மீட்புக்கு வித்திட்டதால் ஞாயிறு நாளை முழுவதுமாக இறை செயல்களுக்காக மட்டும் பயன்படுத்த வேண்டும்.

**குறுவினா விடைகள்**

1. பத்துக்கட்டளைகளுள் மூன்றாம் கட்டளை எது? “ஓய்வு நாளை பரிசுத்தமாய் கொண்டாட நீ நினைவு கூர்வாயாக”
2. படைப்பாளரும், மீட்பருமான ஆண்டவரை வழிபடவும், அவருக்கு பணிவிடை புரியவும் இஸ்ரயேல் மக்களால் மாற்றி வைக்கப்பட்ட நாள் எது? ஓய்வு நாள் (சாபத்து).
3. வாரத்தின் எந்த நாளை இறைவழிபாட்டிற்கும் ஓய்வுக்குமாக யூதர்கள் மாற்றி வைத்தனர்? ஏழாம்
4. புதிய ஏற்பாட்டு காலத்தில் ஓய்வு நாளிற்குப் பதிலாக எந்நாளில் இறைவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் ஆரம்பமானது? ஞாயிறு நாள்
5. ஆண்டவரின் உயிர்ப்பின் நினைவு கூர்தலான எந்நாளை தொடக்கத் திருச்சபை புனிதமாகக் கொண்டாடத் தொடங்கியது? ஞாயிறு
6. ஞாயிறு நாள் கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தை எந்நெந்த கட்டளைகள் எடுத்துரைக்கின்றன? பத்து கட்டளைகளில் மூன்றாவது கட்டளையும், திருச்சபைக் கட்டளைகளில் முதல் கட்டளையும்
7. சாபத்து என்னும் வார்த்தைக்கு பொருள் என்ன? 'வேலையிலிருந்து ஓய்வெடுத்தல், ஒத்தி வைத்தல்'
8. எல்லா வேலைகளையும் விட்டு விட்டு இறைவழிபாட்டிற்காக மாற்றி வைக்கப்பட்டிருக்கும் நாள் எது? ஓய்வுநாள்.
9. “ஓய்வு நாளைத் தூயதாகக் கடைபிடிப்பதில் கருத்தாயிரு. ஆறு நாள்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலைகளையும் செய்வாய். ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள். எனவே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்” விவிலிய அடிப்படை எது? விடுதலைப் பயணம் 20:8-10
10. ஓய்வு நாளை தொடங்கி வைத்தவர் யார்? யாவே கடவுள்
11. இஸ்ரயேல் மக்களைப் பொறுத்தமட்டில் படைப்பு மற்றும் விடுதலைப் பயண நிகழ்வுகளின் நினைவு கூர்தல் எந்நாளில் ஆகும்? ஓய்வு நாள்
12. “ஆண்டவர் ஆறு நாள்களில் விண்ணுலகையும், மண்ணுலகையும், கடலையும், அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறு ஆண்டவர் ஓய்வு நாளுக்கு ஆசி வழங்கி அதனைப் புனிதப்படுத்தினார்” விவிலியப்பகுதி எது? விடுதலைப் பயணம் 20:11
13. ஓய்வுநாள் கடைப்பிடித்தலுக்கு அடிப்படை என்ன? ஏழாம் நாள் ஓய்வெடுத்த ஆண்டவரின் முன்மாதிரி
14. ஆண்டவரின் தூய நாளான ஓய்வு நாளில் வேலை செய்பவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்ற பழைய ஏற்பாடு பகுதி எது? விடுதலைப் பயணம் 31:15
15. மகிழ்ச்சி ஓய்வு மற்றும் வழிபாட்டின் நாள் எனப்படுவது எது? ஓய்வு நாள்.
16. ஆண்டவர் மனிதனோடு ஏற்படுத்திய உடன்படிக்கையைக் குறித்து இறைமக்களுக்கு நினைவூட்டுகின்ற நாள் எது? ஓய்வு நாள்.

www.malankaralibrary.com

17. கடவுள் இஸ்ரயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் நினைவு கூர்தலின் அடையாளமான நாள் எது? ஓய்வு நாள்.
18. யூதர்களின் முதன்மையான ஆராதனையும் கொண்டாட்டமும் எந்நாளில் ஆகும்? ஓய்வு நாள்
19. இயேசு ஓய்வுநாளில் கைசூம்பியவரைக் குணப்படுத்தியவாறு கூறியது என்ன? “ஓய்வு நாளில் நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா? எது முறை” (மாற்கு 3:4)
20. இயேசு ஓய்வு நாள் மனிதருக்காக உருவாக்கப்பட்டது என்ற இறைவார்த்தைப் பகுதி என்ன? “ஓய்வு நாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது. மனிதர் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஆதலால் ஓய்வு நாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே” (மாற்கு 2:27-28)
21. இயேசுவின் போதனைகள் மற்றும் செயல்களில் நன்மை புரிவதற்கு மிகவும் உகந்த நாளாகக் கூறியது எது? ஓய்வு நாள்
22. ஓய்வு நாளில் நோயாளிகளுக்கு நலமளித்ததன் வழியாக எந்நாளை மீட்பின் அடையாளமாக இயேசு வெளிப்படுத்தினார்? ஓய்வு நாள்
23. யூதர்களைப் போன்று முதல் கிறிஸ்தவர்கள் எந்நாளை ஓய்வு நாளாக சிறப்பித்தனர்? ஞாயிற்றுக்கிழமை
24. கிறிஸ்தவர்களின் தலைசிறந்த நாளாகக் கருதப்படுவது எது? ஞாயிறு நாள்
25. கிறிஸ்தவர்களின் ஞாயிறு நாள் கொண்டாட்டத்திற்கு உறைவிடம் என்பது எது? கிறிஸ்துவின் உயிர்ப்பு நாள்
26. கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததனால் ஞாயிறு நாள் எவ்வாறு அழைக்கப்படுகிறது? ஆண்டவரின் நாள்
27. தொடக்கத் திருச்சபையினர் ஞாயிறு நாளை எப்பொருளில் கொண்டாடினர்? ஆண்டவரின் உயிர்ப்பின் நினைவுகூர்தலாகவும், இரண்டாம் வருகையின் முன்சுவையாகவும்.
28. "அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், **இறைவேண்டலிலும்** உறுதியாய் நிலைத்திருந்தார்கள்" (திருத்தூதா பணிகள் 2:42).
29. கிறிஸ்தவ மதம் உரோமைப் பேரரசின் அதிகாரப்பூர்வமான மதமாக மாற்றப்பட்டவுடன் எந்நாள் பொது ஓய்வுநாளாக அனுமதிக்கப்பட்டது? ஞாயிறு நாள்
30. திருமுழுக்கின் வழியாக திருச்சபையின் உறுப்பினரான விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுவதற்காகவும் கொண்டாடுவதற்காகவும் வைக்கப்பட்ட தினம் எது? ஞாயிற்றுக்கிழமை.
31. திருச்சபைக் கட்டளைகளில் முதல் கட்டளை எதனைப் பற்றியது? ஞாயிறு நாள் கொண்டாட்டம்
32. திருவழிபாட்டு ஆண்டு முழுவதன் அடிப்படையாகவும் மையக்கருவாகவும் உள்ள நாள் எது? ஞாயிறு நாள்
33. ஞாயிறு நாள் கொண்டாட்டம் பற்றிய திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலின் சுற்றுமடலின் பெயர் என்ன? 'ஆண்டவரின் நாள்'
34. ஞாயிறு நாள் கொண்டாட்டத்தின் முழுமை என்பது என்ன? திருப்பலியில் முழுமனதுடன் பங்கு கொள்வது
35. ஆண்டவரின் உயிர்ப்பு **மீட்புக்கு** வித்திட்டதால் ஞாயிறு நாளை முழுவதுமாக இறை செயல்களுக்காக மட்டும் பயன்படுத்த வேண்டும்.
36. “ஆண்டவரின் பெயருக்குரிய மாட்சியை அவருக்குச் சாற்றுங்கள். உணவுப் படையல் ஏந்தி அவர் தம் கோவில் **முற்றங்களுக்குள்** செல்லுங்கள். தூய கோலத்துடன் ஆண்டவரை வழிபடுங்கள், உலகெங்கும் வாழ்வோரே. அவர் திருமுன் நடுங்குங்கள்" (திருப்பாடல்கள் 96:8-9).

பாடம் 15

## உண்மையான கிறிஸ்தவக் குடும்பம்

பயிற்சி வினாக்கள்

www.malankaralibrary.com

1. குடும்ப வாழ்வின் முன்மாதிரி தூய திரித்துவம் - எவ்வாறு?

குடும்பத்தில் கடவுளின் பிரதிநிதிகளே பெற்றோர். அவர்கள் வழியாக குடும்பத்தை கடவுளே பாதுகாத்து வழிநடத்துகிறார். இறை அதிகாரத்தில் பெற்றோர்களும் பங்கு கொள்கின்றனர். பிள்ளைகளுக்கு பிறப்பை அளிப்பதன் வழியாக பெற்றோர்கள் கடவுளின் படைப்பு செயலில் பங்கு கொள்கின்றனர். குடும்பத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் சம உரிமை உண்டு. தூய திரித்துவத்தில் தந்தையும், மகனும், தூய ஆவியும் ஒன்றுபட்டிருக்கின்றனர். அது போன்று குடும்ப வாழ்வில் கணவனும், மனைவியும், பிள்ளைகளும் அன்புறவில் ஒன்றிணைந்து வாழ வேண்டும். மூவொரு இறைவனில் காணப்படும் உறவு குடும்ப வாழ்வுக்கு முன்மாதிரியாகும்.

2. 'தாய் தந்தையரை மதிக்க வேண்டும்' என்பதன் வழியாக பொருள் கொள்வது என்ன!

தாய் தந்தையரை மதிக்க வேண்டும் என்னும் இயற்கையான கடமையை நான்காம் கட்டளையின் வழியாக மதம் சார்ந்த கொள்கையாக ஆண்டவர் உயர்த்தியிருக்கின்றார். சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் பெற்றோர்களுடனான அன்பும், மதிப்பும் நிறைந்திருக்க வேண்டும். பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் என்பது கடவுளுடனும், கடவுளால் உருவாக்கப்பட்ட கட்டளைகளின் கீழ்ப்படிதலுடனும் தொடர்புடையதாகும். இயற்கையாகவே பிள்ளைகள் பெற்றோர்களை மதிக்க கடமைப்பட்டுள்ளனர். பிள்ளைகளுக்கு பிறப்பை அளித்து அவர்களைப் பேணி வளர்ப்பதும் அவர்களுக்குத் தேவையானவற்றை அளிப்பதும் பெற்றோர்களின் கடமையாகும்.

ஒரு குழந்தைக்கு பிறப்பை அளிப்பதன் வழியாக பெற்றோர்கள் கடவுளின் படைப்புச் செயலில் பங்கு கொள்கின்றனர். அவர்கள் கடவுளுக்காகச் செயல்படுகின்றனர். கடவுளின் மாட்சியை பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களில் காண்கின்றனர். ஒவ்வொரு குழந்தைகளின் உள்ளத்திலும் கடவுளுக்குரிய இடத்தில் பெற்றோர்களே இருக்கின்றனர். பிள்ளைகளின் உள்ளங்களில் கடவுளைப் பற்றிய எண்ணங்களை ஊட்ட வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும். பெற்றோர்களை மதிக்க வேண்டியதன் தேவையைக் குறித்து சீராக் பின்வருமாறு கூறுகிறார். “உன் தந்தையை உன் முழு உள்ளத்துடன் மதித்து நட. உன் தாயின் பேறுகாலத் துன்பத்தை மறவாதே. அவர்கள் உன்னைப் பெற்றெடுத்தார்கள். அதற்கு ஈடாக உன்னால் எதையும் செய்ய முடியாது என்பதை நினைவில் இருத்து” (சீராக் 7:27-28).

கல்வி, வாழ்க்கைப் பயிற்சி, விசுவாசப் பயிற்சி போன்றவற்றில் பிள்ளைகள் முழுமையாக பெற்றோர்களுக்குக் கீழ்படிய வேண்டும். தங்கள் நன்மைக்காக பெற்றோர்கள் வழங்கும் அறிவுரைகளை பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவை மட்டுமன்று பெற்றோர்களுக்காக செபித்தல், அவர்களுடன் அன்புடன் பழகுதல், அவர்களுக்குத் தேவையான பணிவிடைகள் செய்தல், வயது முதிர்ந்த காலங்களில் அவர்களுக்கு உதவி செய்தல் போன்றவையும் பிள்ளைகளின் கடமையாகும். "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரைச் சார்ந்தவர்களுக்கு இதுவே தகும்” (கொலோசையர் 3:20) என்னும் பவுலடியாரின் வார்த்தைகள் எப்போதும் நமது காதுகளில் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

3. நான்காம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் யாவை?

பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாமை, அவர்களின் மனதைப் புண்படுத்துதல், அவர்களை எதிர்த்தல், கடமைகளை நிறைவேற்றாமல் அவர்களின் எதிர்பார்ப்புக்கேற்ப வளராமல் தன் விருப்பம் போல் வளர்வது அவர்கள் சேமித்து வைத்திருக்கும் செல்வத்தை மட்டும் முன் கண்டு அவர்களை அன்பு செய்வது, வயது முதிர்ந்த காலத்தில் அவர்களுக்குத் தேவையான அன்பையும், உதவிகளையும் செய்யாமல் இருப்பது, அவர்களை வீட்டிலிருந்து வெளியேற்றுதல், தேவையான மருத்துவம் செய்யாமலிருத்தல், குருக்களையும், துறவிகளையும், பெரியோர்களையும், அதிகாரிகளையும் மதிக்காமல் அவர்களை இழிவு படுத்துதல் போன்றவை நான்காம் கட்டளைக்கு எதிரான பாவங்களாகும்.

அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு அதிகாரிகளை மதிக்க அழைப்பு விடுக்கும் இக்கட்டளை சமூகத்தின் நிலைபாட்டிற்கும் வளர்ச்சிக்காக நிலை கொள்கின்றது. குடும்பத்தினுடையவும், திருச்சபையினுடையவும், சமூகத்தினுடையவும் நலனையே இக்கட்டளை எதிர்பார்க்கிறது. தாய் தந்தையரை மதிக்க வேண்டும் என்பதன் வழியாக குடும்பத்திலுள்ள பெரியோர்களையும், சமூகத்திலும், திருச்சபையிலும் மதிப்பளிக்க வேண்டியவர்களையும் மதித்து வாழ வேண்டும் என்றும் இக்கட்டளை கற்பிக்கின்றது.

குறு வினா விடைகள்

1. பெற்றோரை மதிக்க அறிவுறுத்தும் கட்டளை எது? “உன் தந்தையையும் தாயையும் மதித்து நடப்பாயாக"

2. பத்து கட்டளைகளுள் நான்காம் கட்டளையின் விவிலியப் பகுதி எது? விடுதலைப் பயணம் 20:12; இணைச்சட்டம் 5:16
3. வாக்குறுதியுடன் அளிக்கப்பட்ட முதல் கட்டளையே “உன் தந்தையையும் தாயையும் மதித்து நடப்பாயாக" எனக் கற்பித்தவர் யார்? புனித பவுல்
4. "கடவுள், உன் தந்தையையும், தாயையும் மதித்து நட என்றும், தந்தையையோ, தாயையோ **சபிப்போர்** கொல்லப்பட வேண்டும் என்றும் உரைக்கிறார்” (மத்தேயு 15:4).
5. பழைய ஏற்பாட்டில் பத்து கட்டளைகளுள் நான்காம் கட்டளையை மீறுபவர்களுக்குத் தண்டனை? கொல்லப்பட்டார்கள்
6. பெற்றோருக்கு பணிந்து வாழ்வது நிலைவாழ்வை அடையும் வழி என்று கூறியுள்ளவர் யார்? இயேசு கிறிஸ்து
7. பத்து கட்டளைகளுள் நான்காம் கட்டளையின் முக்கிய குறிக்கோள் என்ன? குடும்ப வாழ்வின் நன்மை
8. முதல் திருமண உறவை ஆசீர்வதித்து மணமகளையும் மணமகனையும் ஒன்று சேர்த்து குடும்ப வாழ்வுக்கு அடித்தளமிட்டவர் யார்? கடவுள்
9. ஒரு குடும்பத்தில் கடவுளின் பிரதிநிதிகள் என்பவர்கள் யாவர்? பெற்றோர்.
10. குடும்ப வாழ்வுக்கு முன்மாதிரி எணப்படுவது எது? மூவொரு இறைவனில் காணப்படும் உறவு
11. கிறிஸ்தவ குடும்பம் **திருச்சபையின்** மறுவுருவம் ஆகும்.
12. குடும்பத்தை 'இல்லத்திருச்சபை என்று அழைத்த திருச்சங்கம் எது? இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம்
13. எல்லா வகையான அறநெறி மதிப்பீடுகளுக்கும், சமூக நன்மைகளுக்கும் ஆரம்பமாகவும் அடிப்படையாகவும் அமைவது எது? குடும்பம்.
14. அறநெறி மதிப்பீடுகளைக் குறித்தும், கடவுளைக் குறித்தும் முதலில் எங்கிருந்து கற்கிறோம்? குடும்பத்திலிருந்து
15. குடும்பத்தின் அன்புறவுக்கு அடிப்படையாக அமைவது எது? கணவன் மனைவியின் அன்புறவு
16. மணமகனான கிறிஸ்துவும் மணமகளான திருச்சபையும் ஒன்றிணைத்திருப்பது போல கணவன் மனைவி அன்புறவில் நிலைத்திருப்பது எது? குடும்பம்
17. பெற்றோர்களின் கடமை என்பது என்ன? பிள்ளைகளுக்கு பிறப்பை அளித்து அவர்களைப் பேணி வளர்ப்பதும் அவர்களுக்குத் தேவையானவற்றை அளிப்பதும்
18. “உன் தந்தையை உன் முழு உள்ளத்துடன் மதித்து நட. உன் தாயின் பேறுகாலத் துன்பத்தை மறவாதே. அவர்கள் உன்னைப் **பெற்றெடுத்தார்கள்**. அதற்கு ஈடாக உன்னால் எதையும் செய்ய முடியாது என்பதை நினைவில் இருத்து” (சீராக் 7:27-28).
19. பிள்ளைகளின் பெற்றோர்களுக்கான கடமைகள் எவை? பெற்றோர்களுக்காக செபித்தல், அவர்களுடன் அன்புடன் பழகுதல், அவர்களுக்குத் தேவையான பணிவிடைகள் செய்தல், வயது முதிர்ந்த காலங்களில் அவர்களுக்கு உதவி செய்தல்
20. "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். **ஆண்டவரைச்** சார்ந்தவர்களுக்கு இதுவே தகும்” (கொலோசையர் 3:20)
21. பிள்ளைகளுக்கு முதலில் விசுவாசம் பறைசாற்ற வேண்டியவர்களும், கற்பிக்க வேண்டியவர்களும் யாவர்? பெற்றோர்கள்
22. பிள்ளைகளைப் பேணி வளர்ப்பதில் சம உரிமை கொண்டோர் யாவர்? தாய், தந்தை
23. பத்து கட்டளைகளுள் நான்காம் கட்டளை பெற்றோர்களைப் போன்றே வேறு யாரை மதிக்க வேண்டும் என அறிவுறுத்துகிறது? ஆன்மீக பாதுகாவலரான ஆன்மீகத் தந்தையர்கள், குருக்களையும், துறவியரையும், அதிகாரிகளையும்
24. நாட்டின் ஒரு குடிமகனின் கடமைகள் எவை? சட்டங்களைக் கடைபிடித்தல், வரி கொடுத்தல், தேர்தலில் வாக்களித்தல்
25. நான்காம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் எவை? பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாமை, அவர்களின் மனதைப் புண்படுத்துதல், அவர்களை எதிர்த்தல், கடமைகளை

www.malankaralibrary.com

நிறைவேற்றாமல் அவர்களின் எதிர்பார்ப்புக்கேற்ப வளராமல் தன் விருப்பம் போல் வளர்வது அவர்கள் சேமித்து வைத்திருக்கும் செல்வத்தை மட்டும் முன் கண்டு அவர்களை அன்பு செய்வது, வயது முதிர்ந்த காலத்தில் அவர்களுக்குத் தேவையான அன்பையும், உதவிகளையும் செய்யாமல் இருப்பது, அவர்களை வீட்டிலிருந்து வெளியேற்றுதல், தேவையான மருத்துவம் செய்யாமலிருத்தல், குருக்களையும், துறவிகளையும், பெரியோர்களையும், அதிகாரிகளையும் மதிக்காமல் அவர்களை இழிவுபடுத்துதல்

26. பெற்றோர்களையும், பெரியோர்களையும், ஆசீர்வதிக்க வேண்டுமென்று மாலை மன்றாட்டின் போது நாம் மன்றாடுவது என்ன? “எங்கள் பெற்றோர், உடன்பிறப்புக்கள், உற்றார் உறவினர்கள், ஆசிரியர்கள், அன்பர்கள், எங்களுக்கு உதவியவர்கள் ஆகிய அனைவரையும் ஆசீர்வதியும். இந்நாட்டையும் எல்லா மக்களையும் ஆசீர்வதியும்”.

## பாடம் 16

## உயிர் ஆண்டவரின் கொடை

பயிற்சி வினாக்கள்

1. 'கொலை செய்யாதிருப்பாயாக' என்னும் கட்டளைக்கு இயேசு அளித்த புது விளக்கம் என்ன?

சீனாய் மலையில் வைத்தே இஸ்ரயேல் மக்கள் கட்டளைகளைப் பெற்றுக் கொண்டார்கள் எனினும் படைப்பின் தொடக்கத்திலேயே "கொலை செய்யாதிருப்பாயாக” என்னும் கட்டளை இருந்ததாகக் காணமுடிகிறது. உயிரை மனிதன் மாய்த்த போதெல்லாம் ஆண்டவர் அதனைக் கண்டித்தார். தனது உருவிலும், சாயலிலும் படைக்கப்பட்ட மனித உயிரின் மேல் யாருக்கும் உரிமை இல்லை என்பதை “கொலை செய்யாதிருப்பாயாக” என்னும் கட்டளை வழியாக ஆண்டவர் திட்டவட்டமாக அறிவிக்கின்றார் (தொடக்க நூல் 9:5-6). ஐந்தாம் கட்டளையின் வழியாக மனித உயிர் மதிக்கப்பட வேண்டும் என்று ஆண்டவர் பொருள்கொள்கிறார் (விடுதலைப் பயணம் 20:14; இணைச்சட்டம் 5:17). மனிதனை கொலை செய்பவர்களை அதே முறையில் தண்டிக்க வேண்டும் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது.

புதிய ஏற்பாட்டை பார்க்கும் போது அன்பின் அடிப்படையிலேயே எல்லா கட்டளைகளையும் இயேசு கற்பித்தார். சகோதரர்களோடு எந்த வெறுப்பும் கொள்ளலாகாது என்றும் இயேசு கற்பித்தார். சகோதரனோடு அன்போடு பழக வேண்டும் என்று அவர் கற்பிக்கவும், வாழ்ந்து காட்டவும் செய்தார். மனிதன் எப்போதும் ஒப்புரவு நிலையில் இருக்க வேண்டும். சகோதரனை முட்டாளே என்று அழைப்பவன் தீர்ப்புக்கு உள்ளாவான் என்னும் இயேசுவின் போதனை வழியாக மனிதனை இயேசு எந்த அளவு மதிக்கிறார் என்பது தெளிவாகிறது. மனித உயிர் எல்லா நிலையிலும் மதிக்கப்பட வேண்டும். பகைவர்களை அன்பு செய்ய வேண்டும் என்றும், அவர்களுக்காக செபிக்க வேண்டும் என்றும் இயேசு கற்பித்தார். அவ்வாறே வாழ்ந்தும் காட்டினார். கொலை செய்யாதிருப்பாயாக என்னும் கட்டளைக்கு ஒரு புதிய அர்த்தத்தை இயேசு கற்பித்தார்.

2. மனித உயிரின் மாண்பினைக் குறித்து விளக்குக?

மனிதனைப் படைப்பதற்கு முன் ஆண்டவர் இவ்வாறு கூறினார். “மானிடரை நம் உருவிலும் சாயலிலும் உண்டாக்குவோம்" (தொடக்க நூல் 1:26). அவ்வாறு கடவுள் மனிதனை படைக்கவும் செய்தார். கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டதே மனிதனின் மாண்பு. வாழ்வின் உறைவிடம் கடவுள். உயிரை அளிக்கவும் எடுக்கவும் கடவுளுக்கு மட்டுமே உரிமை உண்டு. உயிரின் மேலுள்ள முழு அதிகாரமும் ஆண்டவருக்கே உரியது.

கடவுளான மெசியா இவ்வுலகில் வந்த போது மனிதரான நமது உருவையும், சாயலையும் பெற்றுக் கொண்டு மனித மாண்பை உயர்த்தினார். அவ்வாறாக மனிதன் பிற படைப்புகள் அனைத்தையும் விட அதிகமாக ஒளிர்கின்றான். படைப்பின் சிகரமான மனிதன் கடவுளின் மீட்புத் திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றான்.

3. உயிரைப் பாதுகாக்க நாம் கவனிக்க வேண்டியவை என்ன?

மனிதனின் உயிரும், அவன் எந்த நிலையில் இருக்கிறானோ அந்த நிலையும் கடவுளுக்கே உரியதாகும். அதனால் மனிதன் உயிரின் உரிமையாளர் அன்று மாறாக அதன் வழிநடத்துனரே (காரியதரிசியே) ஆவார். இந்த உயிர் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஐந்தாம் கட்டளை கற்பிக்கின்றது. உயிரை மதித்துப் பாதுகாப்பதன் வழியாக ஒவ்வொரு மனிதரும் தனது அடிப்படையான கடமையை நிறைவேற்றவும் உரிமையைப் பாதுகாக்கவும் செய்கின்றனர். உயிரின் காரியதரிசிகளான மனிதர்கள் தங்கள் உயிரை பாதுகாப்பது மட்டுமன்று ஒவ்வொரு மனித உயிரையும் மதிக்கவும், அன்பு செய்யவும் வேண்டும்.

www.malankaralibrary.com

உயிர் பாதுகாக்கப்படவும், மதிக்கப்படவும் வேண்டுமெனில் அதற்கேற்ற சூழ்நிலை அமைய வேண்டும். மனித சமுதாயம் வாழ்வதற்காக சமாதானமான சுற்றுச்சூழலை உருவாக்க ஒவ்வொரு மனிதரும் கடமைப்பட்டுள்ளான். ஒருவருக்கொருவர் அன்பிலும், ஒற்றுமையிலும் வாழ ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். சமூகங்களிடையேயும், மதங்களிடையேயும், நாடுகளுக்கிடையேயும் சமாதானம் நிலவ வேண்டும். அவ்வாறெனில் மட்டுமே மனித உயிர் பாதுகாக்கப்படும்.

உயிரின் மாண்பினைக் குறைக்கின்றதான எந்த செயலும் ஒருவரிடமிருந்து வெளிப்படலாகாது. மனித உயிர் பாதுகாக்கப்பட அந்த உயிரின் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும். நம்மைச் சுற்றியுள்ள இயற்கை அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டியது நமது கடமையாகும். இயற்கையிலுள்ள உயிரினங்கள் சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை எனில் அது உயிருக்கே ஆபத்தாக மாறும். மனித உயிர் சரியான முறையில் வளர்ச்சியடையவும் பாதுகாக்கப்படவும் வேண்டுமெனில் இயற்கையிலுள்ள பிற உயிர்கள் முதலில் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால் இயற்கையை அன்பு செய்யவும், பாதுகாக்கவும் மனிதன் கடமைப்பட்டுள்ளான். இயற்கை பாதுகாக்கப்படுதல் இறைகட்டளையைக் கடைபிடித்தல் ஆகும்.

ஆரோக்கியத்தைப் பாதுகாத்தால் மட்டுமே உயிரைப் பாதுகாக்க மனிதனால் முடியும். அதனால் ஆரோக்கியத்தைப் பேணுவது மனிதனின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும். உயிர்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுக்கவும் உயிரின் மேன்மையை பாதுகாக்கவும் உடல் ஆரோக்கியம் இன்றியமையாதது. ஆரோக்கியம் சரியான முறையில் பாதுகாக்கப்படுவது உயிரைப் பாதுகாப்பது போன்றதாகும். உடலினுடையவும், உள்ளத்தினுடையவும், ஆன்மாவினுடையவும் ஆரோக்கியம் பாதுகாப்பதன் வழியாக ஒரு மனிதனின் உயிர் உகந்த முறையில் பாதுகாக்கப்படுகிறது.

உயிரின் பாதுகாவலர் என்னும் முறையில் தங்கள் உயிரை மட்டுமன்று பிறருடைய உயிரையும் பாதுகாக்க ஒவ்வொருவரும் கடமைப்பட்டுள்ளனர். இதற்கு காயீனுடையவும், ஆபேலினுடையவும் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டாகும். நம்மைச் சுற்றி வாழ்பவர்களும் கடவுளின் மக்களென்றும் அவர்களும் நம்மைப் போன்று கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டவர்கள் என்றும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் அனைவரும் நமது சகோதரர்களாவர். நமது உயிர் பாதுகாக்கப்படுவது போன்று அவர்களின் உயிரும் பாதுகாக்கப்பட வேண்டும். அனைவருக்கும் வாழ்வதற்கான உரிமை உண்டு என்பதை இக்கட்டளை எடுத்துரைக்கிறது.

4. கருக்கலைப்பு ஒரு தீமையாகும். ஏன்?

தாயின் கருப்பையில் ஒரு குழந்தை உருவானது முதல் ஒரு புது உயிர் ஆரம்பமாகின்றது. அந்த உயிரை ஏதேனும் வழிகளில் முழு அறிவோடு கொலை செய்வதே கருக்கலைப்பு ஆகும். ஆண்டவரின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்ட ஒரு தனி மனிதரே கருவிலிருக்கும் அக்குழந்தை. உயிருக்கு எதிரான வன்முறையில் மிகவும் கொடூரமானதும் மனிதத் தன்மையற்றதுமான செயலே கருக்கலைப்பு. கருக்கலைப்பில் மிகக் கொடூரமான செயல் எதுவெனில், தன்னுயிருக்காகப் போராடும் வல்லமையற்ற மனித உயிரைக் கொலை செய்தல் என்பதாகும். கருக்கலைப்பின் வழியாக ஆன்மாவும், உடலும் உள்ள ஒருவரே கொலை செய்யப்படுகின்றார். கருவில் இருக்கும் குழந்தைக்கு இருத்தல் நிலை (existence) இருக்கின்ற காரணத்தினால் அதற்கு வாழ்வதற்கான எல்லா உரிமையும் உண்டு. “கருவானதிலிருந்து உயிரை மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். கருச்சிதைவு மற்றும் குழந்தைக் கொலை ஆகியவை கொடிய குற்றங்களாகும்” (இன்றைய உலகில் திருச்சபை எண் 51) என்று இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கற்பிக்கிறது.

5. போதைப் பொருள்களின் பயன்பாடு எவ்வாறு பாவமாக மாறுகிறது?

இன்றைய சமூகத்தில் வளர்ந்து வரும் தீமைகளுள் போதைப் பொருள்களின் பயன்பாடும் ஒன்றாகும். சரியான முறையில் பாதுகாக்கப்பட வேண்டிய உயிரை அழிக்கின்றதான ஒன்றே போதைப்பொருள். இன்றைய உலகில் போதைப் பொருள்களை பயன்படுத்துவதை கலாச்சாரமாக இளைஞர்கள் காண்கின்றனர். போதைப் பொருட்கள் உடல், உள்ளம் மற்றும் ஆன்மாவைப் பாதிக்கின்றன. மது, புகையிலை, மயக்கு மருந்து, பான்பராக் போன்றவை சாதாரணமாக பயன்படுத்தப்படும் போதைப் பொருட்களாகும். இவற்றை பயன்படுத்துவதன் வழியாக பல உடல் உறுப்புகளும் செயல்த்திறனை இழக்கின்றன. இதன்வழியாக சரியாக சிந்திக்கவும், அறிவுடன் செயல்படவும் முடியாமல் போகின்றது. போதைப் பொருட்களை பயன்படுத்துவதும் ஒரு வகையான தற்கொலை ஆகும். ஏனெனில் இது மனிதனின் ஆயுட்காலத்தைக் குறைக்கிறது. போதைப் பொருள்களின் பயன்பாடு படிப்படியாக பெரிய தீமைகளுக்கு மனிதனை வழிநடத்திச் செல்கின்றது.

ஒரு மனிதனின் உடல் உறுப்புக்களை முறித்து மாற்றுதல் ஒருவனை அடித்துத் துன்புறுத்துதல் போன்றவை உயிருக்கு எதிரான தீமைகளாகும். உயிரை மதிக்க வேண்டிய மனிதனே அதனை இழிவுபடுத்துவது வாழ்வின் ஊற்றான இறைவனை இழிவுப்படுத்துவது போன்றதாகும்.

**குறுவினா விடைகள்**

1. உயிரின் மேன்மையைக் காட்டும் கட்டளை எது? “கொலை செய்யாதிருப்பாயாக”
2. தனது உருவிலும், சாயலிலும் படைக்கப்பட்ட மனித உயிரின் மேல் யாருக்கும் உரிமை இல்லை என்பதை எந்த கட்டளை வழியாக ஆண்டவர் திட்டவட்டமாக அறிவிக்கின்றார்? “கொலை செய்யாதிருப்பாயாக”
3. மனிதனை கொலை செய்பவர்களை அதே முறையில் தண்டிக்க வேண்டும் என்ற விவிலியப் பகுதி எது? பழைய ஏற்பாடு
4. கொலை செய்யாதிருப்பாயாக என்னும் கட்டளைக்கு புதிய அர்த்தத்தை கற்பித்தவர் யார்? இயேசு
5. “மானிடரை நம் உருவிலும் சாயலிலும் உண்டாக்குவோம்" (தொடக்க நூல் 1:26).
6. வாழ்வின் உறைவிடம் யார்? கடவுள்.
7. உயிரை அளிக்கவும் எடுக்கவும் முழு அதிகாரம் கொண்டவர் யார்? கடவுள்
8. கடவுளின் மீட்புத் திட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பவன் யார்? படைப்பின் சிகரமான மனிதன்
9. உயிரின் உரிமையாளர் யார்? கடவுள்
10. உயிரின் வழிநடத்துனர் (காரியதரிசி) யார்? மனிதன்
11. உயிர் பாதுகாக்கப்படவும், மதிக்கப்படவும் வேண்டிய சூழல்கள் எவை? ஒருவருக்கொருவர் அன்பிலும், ஒற்றுமையிலும் வாழவும், சமூகங்கள் மதங்கள் மற்றும் நாடுகளுக்குள் சமாதானம்
12. இயற்கையை அன்பு செய்யவும், பாதுகாக்கவும் கடமைப்பட்டவன் யார்? மனிதன்
13. இயற்கை பாதுகாத்தல் எக்கட்டளைகளை கடைபிடித்தலுக்கு சமம்? இறைகட்டளை
14. உயிருக்கு எதிரான தீமைகள் எவை? கொலை செய்தல், கருக்கலைப்பு, கருணைக் கொலை, தற்கொலை, போதைப் பொருள்களின் பயன்பாடு
15. கருக்கலைப்பு என்றால் என்ன? தாயின் கருப்பையில் ஒரு குழந்தை உருவான புது உயிர் கொல்லப்படல்
16. மனித உயிர் எப்போது ஆரம்பமாகின்றது? கருத்தரித்தல் முதல்
17. உயிருக்கு எதிரான வன்முறையில் மிகவும் கொடூரமானதும் மனிதத் தன்மையற்றதுமான செயல் என்பது எது? கருக்கலைப்பு.
18. கருவான குழந்தைக்கு வாழ உரிமை உண்டு என்பதன் காரணம் என்ன? குழந்தையின் இருத்தல் நிலை (existence)
19. “கருவானதிலிருந்து உயிரை மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். கருச்சிதைவு மற்றும் குழந்தைக் கொலை ஆகியவை கொடிய குற்றங்களாகும்” (இன்றைய உலகில் திருச்சபை எண் 51) என்று கற்பித் திருச்சங்கம் எது? இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம்
20. கருணைக் கொலை என்றால் என்ன? நோயால் வேதனைப்படுபவர், வயது முதிர்ந்தவர், உடல் ஊனமுற்றவர் போன்றவர்களின் வேதனையைப் போக்குவதற்காகவும், வசதியின்மையைப் போக்குவதற்காகவும் அவர்களின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ கொலை செய்கின்ற செயல்
21. கருணைக்கொலைக்கு துணைநிற்கும் செயல்கள் எவை? மருந்துகளை நிறுத்தி வைத்தல்
22. தற்கொலை என்றால் என்ன? ஆண்டவர் கொடையாக அளித்த வாழ்வை முழு அறிவுடன் தானாகவே அழித்துக் கொள்வது
23. உயிரின் மேல் ஆண்டவருக்குள்ள அதிகாரத்தை மறுத்து ஒருவர் தானாகவே தன் உயிரை மாய்த்துக் கொள்வதன் பெயர் என்ன? தற்கொலை
24. வாழ்வைக் குறித்தோ உயிரின் மாண்பைக் குறித்தோ தேவையான அறிவின்றி ஒருவர் தன் உயிரை மாய்த்துக் கொள்ளலுக்குப் பெயர் என்ன? தற்கொலை
25. தற்கொலைக்கு காரணமாவது என்ன? விகார உணர்வுகள்
26. விகார உணர்வினால் சிந்திக்கும் ஆற்றலை இழக்கும் மனிதன் பொறுப்புக்களிலிருந்து தப்பிக்க தேர்ந்தெடுக்கும் வழி எது? தற்கொலை.
27. உடல், உள்ளம் மற்றும் ஆன்மாவைப் பாதிக்கின்ற போதைப் பொருட்கள் யாவை? மது, புகையிலை, மயக்கு மருந்து, பான்பராக்
28. "தம் சகோதரரை முட்டாளே' என்பவர் தலைமைச் சங்கத்துக்கு ஆளாவார்” (மத்தேயு 5:22) என்றவர் யார்? இயேசு
29. இறைவனின் இறுதித் தீர்ப்பைக் குறித்து கவலைப்படாதோர் பற்றிய பாசுர மாலையின் பாடல் எது? நம்மைப் போன்றது நம்காலம் சீமான் பேராசைக் கொள்கின்றான் வறியோர்

புறளி பேசுகிறான் மாசுண மனைய மானிடனும் தன்னயலானை விழுங்குகிறான் கொன்-
றிடுகின்றா னையையோ காண்கிலனே அவனும் கடவுள் வழங்கும் தீர்ப்புதனை

30. "பிறப்பிலிருந்து நான் உம்மைச் சார்ந்துள்ளேன். தாய் வயிற்றிலிருந்து நீர் என்னைப் **<u>பிரித்தெடுத்தீர்</u>**, உம்மையே நான் எப்போதும் புகழ்ந்து போற்றுவேன்" (திருப்பாடல்கள் 71:6).

பாடம் 17

உண்மையின் சாட்சிகளாவோம்

பயிற்சி வினாக்கள்

1. உண்மையின் பொருட்டு நமது கடமை என்ன?

இயல்பாகவே மனிதனுக்கு உண்மையின் மீது ஒரு விருப்பம் உண்டு. உண்மையை ஏற்றுக்கொள்ளவும், உண்மைக்கு சான்று பகரவும் மனிதன் கடமைப்பட்டுள்ளான். ஏனெனில் கடவுளே உண்மையின் உறைவிடம். இறைவன் உண்மையானதால் இறைமக்கள் ஒவ்வொருவரும் உண்மையில் வாழ அழைக்கப்பட்டவர்களே ஆவர். இறைமகனான இயேசு கிறிஸ்து உண்மைக்கு சான்று பகர்வதற்காகவே இவ்வுலகிற்கு வந்தார் (யோவான் 18:37). உண்மையை பேசவும், சிந்திக்கவும் நடைமுறைப்படுத்தவும் செய்வதன் வழியாக நாம் கடவுளின் சாட்சிகளாக மாறுகிறோம். கிறிஸ்துவின் உடலான திருச்சபையின் அனைத்து உறுப்பினர்களும் வாழ்வில் உண்மையைக் கடைபிடிக்க வேண்டும். திருச்சபையின் உறுப்பினரான ஒவ்வொருவரும் கிறிஸ்துவில் பங்கு கொள்கின்றனர். அவருடைய வாழ்வே உண்மையாக அமைந்தது. அதனால் திருச்சபை உறுப்பினர்கள் அனைவரும் உண்மையுள்ளவர்களாக வாழ கடமைப்பட்டுள்ளனர்.

சமூக வாழ்வு உண்மையில் வேரூன்றி அன்பிலும், நம்பிக்கையிலும் கட்டியெழுப்பப்படுகிறது. தனிமனிதன் என்னும் நிலையில் ஒவ்வொருவரும் உண்மையை வெளிப்படுத்தவும், உண்மையுள்ளவர்களாக வாழவும் உண்மையை ஏற்றுக் கொள்ளவும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

2. எட்டாம் கட்டளைக்கு எதிரான பாவங்களை விளக்குக?

**பொய் கூறுதல்**

ஒரு செயல் உண்மையென அறிந்தாலும் அதனைத் தவறாக பிறருக்கு அறிவிப்பது பொய்யாகும். இது உண்மைக்கு எதிரான பேச்சாகவோ, செயலாகவோ அமையலாம். இவ்வாறு சொல்வதன் வழியாக உண்மையை அறிவதற்கான ஒருவரின் உரிமை மறுக்கப்படுகிறது. பொய் சொல்பவர் கடவுளை ஏளனப்படுத்தி உடன் வாழ்வோரை வஞ்சிக்கின்றார். கடவுளை கொடையாக அளித்த பேசாற்றலை தவறாக பயன்படுத்துதலே பொய் கூறுதல் ஆகும். பொய் சாட்சி, பொய் ஆணை, மிகைப்படுத்திக் கூறுதல், தற்பெருமை, அவதூறு கூறல் போன்றவை பொய்யின் பல வடிவங்களாகும். நகைச்சுவை நோக்கத்தோடு ஒருவர் பொய் சொன்னால் அதன் தீவிரம் குறைந்திருந்தாலும் திட்டமிட்டு பிறரை வஞ்சிப்பதற்காக கூறும் போது அதில் தீமை உள்ளது.

**இரகசியங்களை வெளிப்படுத்துதல்**

வெளிப்படுத்தலாகாத இரகசிய காரியங்களை வெளிப்படுத்துவது கனமான பாவமாகும். பிறருக்கு இழப்பும் வேதனையும் அவமானவும் ஏற்படுத்துகின்றதான எந்த இரகசியங்களையும் வெளிப்படுத்துதல் கூடாது. பிறரின் தனிப்பட்ட காரியங்களில் அவர்களின் அனுமதியின்றி கடந்து செல்லுதல் சட்டத்திற்கு முரணானது. வெளிப்படுத்துவதில்லை என்று வாக்குறுதி அளித்து பெற்றுக்கொண்ட இரகசியங்களை வெளிப்படுத்துதல் வாக்கு மாறவுது ஆகும். வழக்கறிஞர்களும், மருத்துவர்களும் அவர்களது பணியுடன் தொடர்புடைய சில இரகசியங்களை வெளிப்படுத்தக் கூடாது. மிகுந்த உறுதிப்பாட்டுடன் பாதுகாக்கப்பட வேண்டிய இரகசியமே பாவசங்கீர்த்தன இரகசியம். பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தப்பட்ட காரியங்கள் முற்றிலும் இரகசியம். பாவ சங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தப்பட்ட காரியங்கள் முற்றிலும் இரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டும். எந்த சூழலிலும் இக்கடமையை கடைபிடிக்காமலிருந்தால் அது சாவான பாவமாகும். இரகசியங்களை வெளிப்படுத்துவதன் வழியாக மனிதன் உண்மைத்தனத்தை இழந்து விடுகின்றான்.

**அநியாய தீர்ப்பு**

www.malankaralibrary.com

தெளிவான அடித்தளமின்றி பிறரில் தீமை உண்டு என்று எண்ணி அவர்களுக்கு தீர்ப்பு அளிப்பது பாவமாகும். இதன் வழியாக குற்றமற்ற ஒருவர் மாண்புடன் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்படுகிறது.

**வஞ்சப்புகழ்ச்சி**

பிறரின் அன்பைப் பெறுவதற்காக உண்மைத்தனமின்றி ஒருவரைப் புகழ்தல் வஞ்சப்புகழ்ச்சி ஆகும். தன்னலத்துக்காக மனதில் இருப்பவற்றைமறைத்து இவ்வாறாகப் புகழ்த்திக் கூறுதல் பாவமாகும். தற்பெருமை

தனது வாழ்வைப் பற்றிய உண்மைகளை மறைத்து வைத்து தன்னைப் பற்றி ஆணவத்துடன் எண்ணுவதும் வெளிப்படுத்துவதும் எட்டாம் கட்டளைக்கு எதிரான பாவமாகும். இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு இருப்பதை விட அதிகமாக இருப்பதாக காட்டிக் கொள்கின்றனர். இவர் சமூகத்தை ஏமாற்றவும் தங்களை வஞ்சிக்கவும் செய்கின்றனர்.

**அவதூறு கூறுதல்**

செய்யாத குற்றத்தை ஒருவரின் மேல் சுமத்துவது அவதூறு கூறுவது ஆகும். அவ்வாறாக ஒருவரைப் பற்றி இகழ்ந்து கூறுவதும் அவரது நற்பெயரைக் கெடுப்பதும் எட்டாம் கட்டளைக்கு எதிரான செயல் ஆகும்.

**தேர்வுக்கு பார்த்து எழுதுதல்**

உண்மையான முறையில் தேர்வு எழுதி வெற்றி பெறுவதற்கு பதிலாக அறநெறி தவறிய முறையில் வெற்றி பெறுவது சரியான செயல் அன்று, தேர்வில் பார்த்து எழுதுவதும், தேர்வுடன் தொடர்புடைய முறைகேடுகளும் உண்மைக்கு எதிரான செயல்களாகும். இது படிப்பதற்காக இறைவன் தந்திருக்கும் திறனை தவறாகப் பயன்படுத்துதல் ஆகும்.

குறு வினா விடைகள்

1. தன்னுடைய நிலத்தை விற்ற தொகையில் ஒரு பகுதியை தமக்கென்று வைத்துக் கொண்டு மறுபகுதியை திருத்தூதர்களிடம் ஒப்படைத்த குடும்பத்தினர் யாவர்? அனனியா சப்பிரா
2. “நீ மனிதரிடமல்ல, கடவுளிடமல்லவா பொய் சொன்னாய்” யார் யாரிடம் கூறியது? திருத்தூதர் பேதுரு அனனியாவிடம்
3. அனனியாவுடன் இணைந்து பொய் கூறிய அவரது மனைவி யார்? சப்பிரா
4. பாபிலோன் அடிமைத்தனத்தின் போது யாருக்கு எதிராக பொய் சாட்சி கூறிய முதியவர்கள் கொல்லப்பட்டார்கள்? யோவாக்கிம் மனைவியான சூசன்னாவுக்கு
5. 'நானே உண்மை' என்று புதிய ஏற்பாட்டில் தம்மை வெளிப்படுத்தியவர் யார்? இயேசு
6. “பொய்யை விலக்கி ஒருவரோடு ஒருவர் **உண்மை** பேசுங்கள்” (எபேசியர் 4:25).
7. “எல்லா வகையான தீமையையும் **வஞ்சத்தையும்** வெளிவேடம், பொறாமை, அவதூறு ஆகிய யாவற்றையும் அகற்றுங்கள்” (1 பேதுரு 2:1)
8. உண்மையின் உறைவிடம் யார் கடவுள்
9. இறைவன் உண்மையானதால் அவ்வாறே உண்மையில் வாழ அழைக்கப்பட்டவர்கள் யாவர்? இறைமக்கள்
10. சமூக வாழ்வு எவ்வாறு கட்டியெழுப்பப்படுகிறது? உண்மையில் வேரூன்றி அன்பிலும், நம்பிக்கையிலும்
11. உண்மையை வாழ்வாக்க வேண்டும் என்பதன் பொருள் என்ன? சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் வாழ்வு உண்மையுள்ளதாக அமைய வேண்டும்
12. உயிரைக் கொடுத்து உண்மைக்கு சாட்சியானவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறார்? இரத்தசாட்சி
13. எட்டாம் கட்டளை தவிர்க்க கூறும் தீமைகள் எவை? பொய் கூறுதல், இரகசியங்களை வெளிப்படுத்துதல், அநியாய தீர்ப்பு, வஞ்சப்புகழ்ச்சி, தற்பெருமை, அவதூறு கூறுதல், தேர்வுக்கு பார்த்து எழுதுதல்
14. ஒரு செயல் உண்மையென அறிந்தாலும் அதனைத் தவறாக பிறருக்கு அறிவிப்பது என்ன? பொய்
15. எதன் வழியாக உண்மையை அறிவதற்கான ஒருவரின் உரிமை மறுக்கப்படுகிறது? பொய்

16. கடவுளை கொடையாக அளித்த பேச்சாற்றலை தவறாக பயன்படுத்துதலுக்குப் பெயர் என்ன? பொய் கூறுதல்
17. பொய்யின் பல வடிவங்கள் எவை? பொய் சாட்சி, பொய் ஆணை, மிகைப்படுத்திக் கூறுதல், தற்பெருமை, அவதூறு கூறல்
18. பணியுடன் தொடர்புடைய சில இரகசியங்களை வெளிப்படுத்த வேண்டியவர்கள் யாவர்? வழக்கறிஞர்களும், மருத்துவர்களும்
19. மிகுந்த உறுதிப்பாட்டுடன் பாதுகாக்கப்பட வேண்டிய மறையுண்மை இரகசியம் எது? பாவசங்கீர்த்தன இரகசியம்.
20. பிறரின் அன்பைப் பெறுவதற்காக உண்மைத்தனமின்றி ஒருவரைப் புகழ்தலுக்குப் பெயர் என்ன? வஞ்சப்புகழ்ச்சி
21. தன்னலத்துக்காக மனதில் இருப்பவற்றை மறைத்து இவ்வாறாகப் புகழ்த்திக் கூறுதல் பாவமாகும்? தற்பெருமை
22. உண்மைகளை மறைத்து வைத்து தன்னைப் பற்றி ஆணவத்துடன் எண்ணுவதும் வெளிப்படுத்துவதும் என்ன? தற்பெருமை
23. காந்தியடிகளின் சுயசரிதையின் பெயர் என்ன? 'சத்திய சோதனை'
24. 'சத்திய மேவ ஜயதே' என்பதன் பொருள் என்ன? வாய்மையே வெல்லும்
25. “பொய்யுரைக்கும் நாவை ஆண்டவர் அருவருக்கின்றார்; **உண்மையாய்** நடக்கின்றவர்களை அவர் அரவணைக்கிறார்” (நீதிமொழிகள் 12:22).

பாடம் 18

## இல்லற அன்பும் நம்பிக்கையும்

1. திருமணம் இறைத்திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று கூறுவது ஏன்?

படைப்பின் இறுதியில் கடவுள் மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்து அவர்களை பின்வருமாறு ஆசீர்வதித்தார். “பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்” (தொடக்க நூல் 1:28). அவ்வாறு படைப்பின் வழியாக குடும்ப வாழ்வு ஆரம்பமானது. கடவுள் மனிதரை ஆணும் பெண்ணுமாக படைத்தார். அவர்களை ஒருவருக்கொருவர் நிறைவு செய்பவராக படைத்தார்.

அதனால் தான் பெண்ணைக் கண்டதும் ஆதாம் பின்வருமாறு கூறினார். “இதோ! இவளே என் எலும்பின் எலும்பும், சதையின் சதையும் ஆனவள்; ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால் இவள் பெண் என்று அழைக்கப்படுவாள் (தொடக்க நூல் 2:23). கணவன் மனைவி உறவைக் குறித்து தொடக்க நூல் பின்வருமாறு கூறுகிறது. “கணவன் தன் தாய் தந்தையை விட்டு தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாயிருப்பர்” (தொடக்க நூல் 2:24)

கடவுளே குடும்பத்தை அமைத்தார். அவர் ஆதாமையும், ஏவாளையும் படைத்து அவர்களுக்கு மக்கட்பேற்றையும் அளித்து அவர்களை ஆசீர்வதித்தார். குடும்ப வாழ்வின் வழியாக கணவன் மனைவியரிடையே ஈர்ப்பும் அன்பும் தோன்றுவது ஆண்டவர் அளித்த பாலுணர்வு என்னும் அருள் கொடையின் வாயிலாகவே ஆகும்.

குடும்ப வாழ்வைக் குறித்தும், பாலுணர்வைக் குறித்தும் உள்ள பழைய ஏற்பாட்டுக் கண்ணோட்டத்தின் தொடர்ச்சியையும் நிறைவையும் புதிய ஏற்பாட்டில் காணமுடிகிறது. குடும்ப வாழ்வை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு மாட்சிமைப்படுத்துகிறார் என்பதன் அடையாளமாகவே இறைமகனான இயேசு மெசியா ஒரு குடும்பச் சூழலில் மனிதனாகப் பிறந்தார்.

அவர் குடும்பச் சூழலை ஏற்றுக்கொண்டு பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து வந்தார் (லூக்கா 2:51). கானாவூர் திருமண வீட்டிலேயே இயேசு தனது முதல் அற்புதத்தைச் செய்தார். குடும்ப வாழ்வை ஏற்றுக்கொண்டதன் அடையாளமாகவே திருமண வாழ்வைக் குறித்தும் அதன் முறிவுபடாத் தன்மையைக் குறித்தும் இயேசு போதித்து வந்தார்.

ஆண்டவர் மனிதனிடம் முதன் முதலாகக் கூறியது பலுகிப் பெருகி இப்பூமியை நிரப்புங்கள் என்பதாகும். அதற்காகவே அவர் மனிதரை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார், ஒருவரையொருவர் அன்பு செய்யவும் அவ்வன்பின் நிறைவில் இனப்பெருக்கம் செய்வதற்குமாகவே கடவுள் திருமணத்தையும், குடும்பத்தையும் நிறுவினார். அதனால் கடவுளின் மீட்புத் திட்டத்தில் திருமண வாழ்வு முக்கிய பங்கு வகிக்கிறது.

2. மறைநூலின் அடிப்படையில் கணவன் மனைவி உறவு எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது?

பழைய ஏற்பாட்டில் கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையே உள்ள உறவு திருமண உறவோடு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது. கடவுளுக்கு இஸ்ரயேல் மக்களுடன் உள்ள அன்பு கணவனுக்கு மனைவியுடன் உள்ள அன்பைப் போன்றது ஆகும். திருமண உறவையும், குடும்ப வாழ்வையும் பழைய ஏற்பாட்டு மக்கள் தூய்மையாகக் கருதினர். பழைய ஏற்பாட்டு நூல்களில் குடும்ப வாழ்விலுள்ள நம் இஸ்ரயேல் மக்களின் சிலை வழிபாட்டுடன் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் கணவன் மனைவி உறவு கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உறவோடு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது. புனித பவுலடியார் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் கணவன் மனைவி உறவை இவ்வாறு ஒப்புமைப்படுத்துகிறார். திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்' ஆகும். மேலும் கிறிஸ்து இவ்வுடலின் தலையாய் இருப்பது போன்று கணவன் மனைவியின் தலையாய் இருக்கிறார்' என்று புனித பவுலடியார் கூறுகிறார்.

கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்து அவளுக்காக தன் உயிரைக் கொடுத்தது போன்று கணவர்களும் தங்கள் மனைவியரை அன்பு செய்ய வேண்டும். அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்காக வாழ வேண்டும். கணவர்கள் தங்கள் உடலை அன்பு செய்வது போன்று மனைவியரை அன்பு செய்ய வேண்டும். மனைவியரை அன்பு செய்பவர் தங்களையே அன்பு செய்கின்றனர் என்று புனித பவுலடியார் கற்பிக்கின்றார்.

திருச்சபை கிறிஸ்துவுக்கு பணிந்திருப்பது போன்று மனைவியர் அனைத்திலும் கணவருக்குப் பணிந்திருக்கவும் அவர்களை அன்பு செய்யவும் வேண்டும். திருமணம் என்னும் அருளடையாளத்தின் வழியாக கணவனும் மனைவியும் கிறிஸ்துவில் ஒன்றிணைகின்றனர். அதனால் அவர்கள் ஒரே உடலாக மாறுகின்றனர்.

கணவன் மனைவி உறவு ஆழமேறியதாக இருக்க வேண்டும் என்று புனித பவுலடியார் கூறுகிறார் (எபேசியர் 5:22-33). மனைவி கணவருக்கு பணிந்திருக்க வேண்டும் என்று கூறுவது பெண்களை தாழ்த்திக் கூறுவதன்று, மாறாக ஒரே உடலான கணவனும் மனைவியும் ஒரே மனத்துடன் வாழ வேண்டும் என்ற கருத்தையே வலியுறுத்துகிறது.

கணவன் மனைவி உறவு ஒருவருக்கொருவர் பணிவு, அன்பு, ஒத்துழைப்பு, இவற்றை வெளிப்படுத்தும் நிலையாகும். உடல், ஆன்ம, உள்ளங்கள் ஒன்றிணைவதற்கான அழைத்தலே குடும்பவாழ்விற்கான அழைத்தல். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் குடும்ப வாழ்வை நடத்த வேண்டும்.

3. திருமணம் ஓர் அருளடையாளம் எவ்வாறு?

படைப்பின் வேளையில் ஆதாம் தனிமையாக இருப்பது நல்லதன்று என்று கண்ட கடவுள் அவனுக்கு வாழ்க்கைத் துணையாக ஏவாளைப் படைத்தார். அவ்வாறு முதல் திருமணம் நடைபெற்றது. ஆணும் பெண்ணும் ஒன்றிணைக்கப்பட்டனர். பழைய ஏற்பாட்டிலுள்ள குடும்ப வாழ்வு புதிய ஏற்பாட்டிலும் தொடர்ந்தது. கிறிஸ்து தனது பகிரங்க வாழ்வின் போது திருமணத்தை ஒரு அருளடையாளமாக உயர்த்தினார்.

கணவன் மனைவியரும், அவரின் அன்புறவில் பிறக்கின்ற பிள்ளைகளும் திருமணம் என்னும் அருளடையாளத்தின் வழியாக புனிதப்படுத்தப்படுகின்றனர். அருளடையாளங்கள் சுறியானியில் கூதாசா என்று அழைக்கப்படுகிறது. கூதாசா (அருளடையாளம்) என்னும் வார்த்தையின் பொருளே ‘புனிதப்படுத்துதல்' என்பதாகும். திருமணத்தின் வழியாக கணவனும் மனைவியும் கிறிஸ்துவிலும் அவருடைய மறையுடலான திருச்சபையிலும் ஒன்றிணைகின்றனர்.

கணவன் மனைவியரின் ஒப்புதலுடன் ஆரம்பிக்கின்றதான திருமணம் என்னும் அருளடையாளம் அவர்களின் வாழ்வின் இறுதி வரை நிலைத்திருக்க வேண்டிய ஒன்றாகும். திருமணம் என்னும் அருளடையாளத்தில் மணமகனையும் மணமகளையும் ஒன்றிணைப்பவர் கிறிஸ்துவே ஆவார். கிறிஸ்துவிலேயே அவர்கள் தங்கள் வாழ்வை ஆரம்பிக்கின்றனர். அதனால் திருமணத்தின் வழியாக கிடைக்கின்றதான இறையருளை பாதுகாக்க வேண்டியது மணமக்களின் கடமையாகும்.

4, திருமணத்தின் முறிவுபடாத் தன்மையின் அடிப்படை என்ன?

சமூகத்தின் அடிப்படையான குடும்பத்தின் தொடக்கம் திருமணம் என்னும் அருளடையாளமாகும். ஒருவருக்கொருவர் அன்பினால் உந்தப்பட்டு ஆணும் பெண்ணும் திருமண வாழ்வுக்குள் கடந்து வருகின்றனர். திருமணம் என்னும் அருளடையாளத்தின் வழியாக மணமக்களின் சுதந்திரமான ஒப்புதலுக்கு ஆண்டவர் அங்கீகாரம் அளிக்கின்றார். கிறிஸ்துவில்

www.malankaralibrary.com

ஆரம்பமான திருமணத்தை எக்காரணத்தாலும் வேறுபடுத்துதல் கூடாது. திருமண உறவு நிலையானது ஆகும்.

திருமணத்தின் முறிவுபடாத் தன்மையைக் குறித்து இயேசு பின்வருமாறு கூறுகிறார். "…. இனி அவர்கள் இருவர் அல்ல, ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்" (மத்தேயு 19:6). புனித பவுலடியாரும் திருமணத்தின் முறிவுபடாத் தன்மையைக் குறித்து கற்பிக்கின்றார். "மனைவி கணவரிடமிருந்து பிரிந்து வாழக் கூடாது……. கணவரும் மனைவியை விலக்கி விடக்கூடாது" (1 கொரிந்தியர் 7:10-11).

ஆண்டவரில் ஒன்றிணைந்த கணவனும் மனைவியும் தங்கள் உறவை வேறுபடுத்தலாகாது என்பதை திருச்சபையும் எடுத்துரைக்கிறது. கணவன் மனைவியர் 'ஆண்டவரில் ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதே முறிவுபடாத் தன்மையின் அடிப்படை ஆகும்.

5. பாலுணர்வும் தூய்மையும் எவ்வாறு தொடர்பு கொண்டிருக்கின்றன?

ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் அன்பு செய்யவும் அவ்வன்பின் நிறைவில் ஓர் உயிரை அளிக்கவும் ஆண்டவர் அளித்திருக்கின்றதான திறனையே பாலுணர்வு என்கிறோம். இறைவனின் கொடையான பாலுணர்வை சரியான முறையில் பயன்படுத்துதலே ஒவ்வொருவரையும் தூய்மையான குடும்ப வாழ்வுக்கு வழிநடத்துகிறது.

மறைநூலில் பாலுணர்வு மிகவும் புனிதமாகக் கருதப்படுகிறது. திருமணத்திற்கு வெளியே உள்ள உறவை மறைநூல் தடைசெய்கிறது. திருமணத்திலும் திருமண வாழ்விலும் மட்டுமே பாலுணர்வுக்கு அர்த்தம் கிடைக்கிறது.

பாலியல் செயல்பாடுகளை அதன் உண்மையான குறிக்கோளுக்கு வழிநடத்துகின்றதான புண்ணியமே தூய்மை. திருமணம் மற்றும் குடும்ப வாழ்விற்கு வெளியே நடக்கும் பாலுணர்வு இன்பங்கள் தூய்மை என்னும் புண்ணியத்துக்கு எதிரானதாகும். இல்லற அன்பு முழுமையடைய வேண்டுமெனில் கணவன் மனைவியர் தூய்மை என்னும் புண்ணியத்தை பாதுகாக்க வேண்டும்.

இல்லற வாழ்வின் மேன்மையை அறிந்து அதனை பக்குவமாக நிறைவேற்றுவதை தூய்மை எனலாம். அவற்றுள் உள்ளத் தூய்மையே மிக முக்கியமானதாகும். உள்ளத் தூய்மை நாம் தீமை செய்வதைத் தடை செய்கிறது. மனப்பாங்கிலும், செயல்களாலும் தூய்மையைப் பாதுகாக்கின்ற கணவன் மனைவியரின் இல்லற வாழ்வு புனிதம் நிறைந்ததாக இருக்கும்.

6. குடும்ப வாழ்வின் அடிப்படைக் கூறுகள் எவை?

கணவனையும், மனைவியையும் ஒன்றிணைக்கின்ற சக்தி கிறிஸ்துவின் அன்பாகும். திருமணத்தில் ஒன்றிணைந்த கணவனும் மனைவியும் வாழ்வின் இறுதி வரை நம்பிக்கையுடையவர்களாக வாழ வேண்டும். குடும்ப வாழ்வு வெற்றி நிறைந்ததாக திகழ்வதற்கு தேவையான அடிப்படை பண்பு நலனே மெய்பற்று. ஆன்ம, உடல், உள்ளம் இவற்றில் ஒன்றித்திருந்தால் மட்டுமே மெய்பற்று என்னும் பண்பை பாதுகாக்க முடியும்.

ஒருவருக்கொருவர் உள்ள அர்ப்பணித்தல் இந்த நம்பிக்கையை வளரச் செய்யும். குடும்ப வாழ்வில் கணவர் மனைவியர் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளவும், மன்னிக்கவும் தயாராக வேண்டும். ஆறாம் கட்டளையையும் ஒன்பதாம் கட்டளையையும் கடைபிடிக்கும் போது குடும்ப வாழ்வில் நம்பிக்கையைப் பாதுகாக்க முடியும்.

குடும்ப வாழ்வில் அன்பு முழுமையானதும், நிபந்தனையற்றதுமாய் இருக்க வேண்டும். உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஒருவரையொருவர் அன்பு செய்கின்ற கணவன் மனைவியர் தங்களுடையதையெல்லாம் பகிர்ந்து வாழ முன் வர வேண்டும். இல்லற வாழ்வின் நிறைவிலிருந்து புது உயிருக்கு பிறப்பளிக்க வேண்டும். குடும்ப வாழ்வின் முக்கிய குறிக்கோள்களுள் ஒன்றாக மக்கட்பேற்றை திருச்சபை காண்கின்றது.

இல்லற அன்பும் நம்பிக்கையும் குடும்ப வாழ்வின் அடிப்படை கூறுகளாகும். குடும்ப வாழ்வில் நம்பிக்கையும், அன்பும் ஒன்றோடொன்று நிறைவு செய்யும் நிலையில் உள்ளன. கணவன் மனைவியரை வாழ்வின் இறுதிவரை ஒன்றிணைக்கின்றவையே இக்கூறுகள்.

குறு வினா விடைகள்

1. குடும்பத்தை நிலை நாட்டவும், வளர்ச்சியடையவும் துணைபுரிகின்ற இரண்டு கட்டளைகள் எவை? 'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக' 'பிறர் மனைவியை விரும்பாதிருப்பாயாக'
2. பாலுணர்வு என்னும் கொடையுடன் தொடர்புடைய இரண்டு கட்டளைகள் எவை? 'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக' 'பிறர் மனைவியை விரும்பாதிருப்பாயாக'

www.malankaralibrary.com

3. குடும்ப வாழ்வில் கணவன் மனைவியர் எத்தகைய அன்பையும், நம்பகத் தன்மையையும் கொண்டிருக்க வேண்டும் என்னும் கட்டளைகள் எவை? 'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக' 'பிறர் மனைவியை விரும்பாதிருப்பாயாக'
4. “இதோ! இவளே என் எலும்பின் எலும்பும், சதையின் சதையும் ஆனவள்; ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால் இவள் பெண் என்று அழைக்கப்படுவாள் (தொடக்க நூல் 2:23). யார் கூறியது? ஆதாம்
5. “கணவன் தன் தாய் தந்தையை விட்டு தன் மனைவியுடன் **ஒன்றித்திருப்பான்**. இருவரும் ஒரே உடலாயிருப்பர்” (தொடக்க நூல் 2:24)
6. பழைய ஏற்பாட்டில் திருமண உறவு எவ்வாறு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது? கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையே உள்ள உறவு
7. புதிய ஏற்பாட்டில் திருமண உறவு எவ்வாறு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது? கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உறவு
8. திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்' ஆகும். மேலும் கிறிஸ்து இவ்வுடலின் தலையாய் இருப்பது போன்று கணவன் மனைவியின் தலையாய் இருக்கிறார்' என்றவர் யார்? புனித பவுல்
9. கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்து அவளுக்காக தன் உயிரைக் கொடுத்தது போன்று கணவர்களும் யாரை அன்பு செய்ய வேண்டும்? தங்கள் மனைவியரை
10. கணவர்கள் தங்கள் உடலை அன்பு செய்வது போன்று யாரை அன்பு செய்ய வேண்டும்? மனைவியரை
11. திருச்சபை கிறிஸ்துவுக்கு பணிந்திருப்பது போன்று மனைவியர் யாருக்கு பணிந்திருக்கவும் அவர்களை அன்பு செய்யவும் வேண்டும்? கணவருக்கு
12. திருமணம் என்னும் அருளடையாளத்தின் வழியாக கணவனும் மனைவியும் யாரால் ஒன்றிணைகின்றனர்? கிறிஸ்துவில்
13. முதல் திருமணம் எது? ஆதாம் ஏவாள் திருமணம்
14. அருளடையாளங்கள் சுறியானியில் எவ்வாறு அழைக்கப்படுகிறது? கூதாசா
15. கூதாசா (அருளடையாளம்) என்னும் வார்த்தையின் பொருள் என்ன? ‘புனிதப்படுத்துதல்'
16. திருமணம் என்னும் அருளடையாளத்தில் மணமகனையும் மணமகளையும் ஒன்றிணைப்பவர் யார்? கிறிஸ்து
17. திருமணத்தின் வழியாக கிடைக்கின்றதான இறையருளை பாதுகாக்க வேண்டியது யாருடைய கடமையாகும்? மணமக்களின்
18. திருமணம் என்னும் அருளடையாளத்தின் வழியாக மணமக்களின் சுதந்திரமான ஒப்புதலுக்கு அங்கீகாரம் அளிப்பவர் யார்? ஆண்டவர்
19. திருமணத்தின் முறிவுபடாத் தன்மையைக் குறித்து இயேசு கூறியது என்ன? ".... இனி அவர்கள் இருவர் அல்ல, ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்” (மத்தேயு 19:6).
20. புனித பவுலடியாரும் திருமணத்தின் முறிவுபடாத் தன்மையைக் குறித்து கற்பிப்பது என்ன? “மனைவி கணவரிடமிருந்து பிரிந்து வாழக் கூடாது....... கணவரும் மனைவியை விலக்கி விடக்கூடாது” (1 கொரிந்தியர் 7:10-11).
21. திருமண வாழ்வின் முறிவுபடாத் தன்மையின் அடிப்படை என்பது என்ன? 'ஆண்டவரில் ஒன்றிணைந்து வாழவேண்டும்
22. கணவனையும், மனைவியையும் ஒன்றிணைக்கின்ற சக்தி எது? கிறிஸ்துவின் அன்பு
23. குடும்ப வாழ்வு வெற்றி நிறைந்ததாக திகழ்வதற்கு தேவையான அடிப்படை பண்பு நலன் எது? மெய்பற்று.
24. மெய்பற்று என்னும் பண்பை எவ்வாறு பாதுகாக்க முடியும்? ஆன்ம, உடல், உள்ளம் இவற்றில் ஒன்றித்திருந்து
25. ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் அன்பு செய்யவும் அவ்வன்பின் நிறைவில் ஓர் உயிரை அளிக்கவும் ஆண்டவர் அளித்த திறனுக்குப் பெயர் என்ன? பாலுணர்வு

26. பாலியல் செயல்பாடுகளை அதன் உண்மையான குறிக்கோளுக்கு வழிநடத்துகின்றதான புண்ணியம் எது? தூய்மை.
27. இல்லற அன்பு முழுமையடைய வேண்டுமெனில் கணவன் மனைவியர் எந்த புண்ணியத்தை பாதுகாக்க வேண்டும்? தூய்மை
28. ஒரு நபரின் விருப்பமின்றி அந்நபரோடு பாலியல் உறவு கொள்வதன் பெயர் என்ன? பாலியல் பலாத்காரம்
29. முறைப்படியான குடும்ப வாழ்வு வாழ்பவர்களை ஒன்றிணைத்திருப்பவர் யார்? கடவுள்
30. பாலியல் அறநெறிக்கும், குடும்ப மெய்பற்றுக்கும் எதிராக உள்ள எல்லா தீமைகளையும் விட்டுவிட வேண்டும் என்று அறிவுறுத்தும் கட்டளைகள் எவை? 'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக' 'பிறர் மனைவியை விரும்பாதிருப்பாயாக'
31. திருமணத்திருச்சடங்கின் இறுதியில் திருமண உறவு பற்றிய அறிவுரை என்ன? "நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் மனைவியருடன் கொண்டுள்ள உறவு எத்தகையது என எண்ணிப் பாருங்கள். மனைவி தன் உற்றார் உறவினரை விட்டு தன் கணவனிடம் சேர்ந்திருக்கிறாள். அதனால் அவன் அவளை மகிழ்வித்து அவளுடன் இரக்கம் காட்ட வேண்டும். அவன் உடையின்றி இருந்தாலும் அவளை உடுத்த வேண்டும். தன் உயிரைப் போல அவளைக் கவனிக்க வேண்டும். அவன் பசியுற்றிருப்பினும் அவளை ஊட்ட வேண்டும். அவன் தாகமாக இருப்பினும் அவளைக் குடிப்பிக்க வேண்டும். அவளும் அவனைத் தகுந்த முறையில் உபசரிக்க வேண்டும். அனைத்திலும் அவனுடன் இதயப்பூர்வமாகவும் அன்புடனும் அவள் பழக வேண்டும்".
32. "என் உடமையை எல்லாம் நான் வாரிவழங்கினாலும் என் **உடலையே** சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தாலும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை" (1கொரிந்தியர் 13:3).

## பாடம் 19

## செல்வம் பற்றிய கிறிஸ்தவ மனப்பாங்கு

பயிற்சி வினாக்கள்

1. நீதி, செல்வத்தின் சரியான பயன்படுத்துதலுடன் தொடர்பு கொண்டிருக்கிறது எவ்வாறு விளக்குக?

'களவு செய்யாதிருப்பாயாக', 'உன் அயலானின் பொருள் யாதொன்றையும் விரும்பாதிருப்பாயாக' என்னும் கட்டளைகள் ஒவ்வொருவருடையவும் உரிமைகளை ஏற்றுக்கொள்ளத் தூண்டுகிறது. செல்வங்களை சரியான முறையில் பயன்படுத்துதல், செல்வங்களைப் பற்றிய நல்ல மனநிலை போன்றவை நீதி நிலை நாட்டப்படுகின்ற ஒரு சமூகத்தில் மட்டுமே நடைபெறும்.

களவு, பேராசை போன்ற தீமைகளின் வழியாக ஒருவர் மற்றவருடைய செல்வங்களைக் கைவசப்படுத்த முயலும் போது அச்சமூகத்தில் அநீதி நடமாடுகிறது. அவ்வாறாக செல்வம் தவறான வழியில் பயன்படுத்தப்படுகிறது. உரிமைப்படாத ஒன்றை யாராவது உரிமையாக்க முயன்றால் நீதி மறுக்கப்படுகிறது. நீதி செல்வங்களின் சரியான பயன்பாட்டுடன் தொடர்புடையதாகும்.

நீதி என்பது கடவுளுக்கும், அயலானுக்கும் கொடுக்க வேண்டியதைக் கொடுப்பதற்கான ஒருவரின் உறுதியான தீர்மானமும் செயல்பாடும் ஆகும். பிறருக்கு வழங்க வேண்டியதை வழங்கவும் அவருக்கு உரிமைப்பட்டதை கொடுப்பதற்குரிய மன சம்மதமும் நீதியின் நடைமுறை எனலாம்.

சட்டத்தின் அடிப்படையிலான நீதியை விடவும் அன்பின் அடிப்படையிலான நீதிக்கே புதிய ஏற்பாடு முக்கியத்துவம் அளிக்கிறது. அன்பின் அடிப்படையிலான நீதியைக் குறித்து இயேசு கிறிஸ்து பின்வருமாறு அருளினார்.

"நான் பசியாய் இருந்தேன். நீங்கள் உணவு கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன். என் தாகத்தைத் தணித்தீர்கள். அன்னியனாக இருந்தேன். என்னை ஏற்றுக்கொண்டீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன். நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள். நோயுற்றிருந்தேன். என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். சிறையில் இருந்தேன். என்னைத் தேடி வந்தீர்கள்" (மத்தேயு 25:35-36).

இவ்வாறாக நம்மைச் சுற்றி வாழ்பவர்களின் உரிமைகளையும், தேவைகளையும் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து கற்பித்தார். இத்தகைய இரக்கச் செயல்கள் செல்வம் சார்ந்த தன்னலத்தைக் குறையச் செய்கிறது.

பிறருடைய சொத்துக்களை தீய வழியில் வசப்படுத்துவது நீதிக்கு எதிரான செயலாகும். சமூகம், அரசியல் போன்ற எத்துறையில் அநீதி நிகழ்ந்தாலும் அதற்கு எதிராகக் குரல் கொடுக்க கிறிஸ்தவர்கள் முன்வர வேண்டும். செல்வத்தையும், நீதியையும் குறித்த புனித யோவானின் போதனைகள் மிகுந்த பொருள் ததும்பியவை ஆகும்.

"உலகச் செல்வத்தைப் பெற்றிருப்போர் தம் சகோதரர் சகோதரிகள் தேவையில் உழல்வதைக் கண்டும் பரிவு காட்டவில்லையென்றால் அவர்களிடம் கடவுளின் அன்பு எப்படி நிலைத்திருக்கும்? பிள்ளைகளே, நாம் சொல்லிலும், பேச்சிலும் அல்ல. செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்" (1 யோவான் 3:17-18).

2. ஏழைகளின் பக்கம் சார்தல் என்னும் கிறிஸ்தவ கடமையை திருச்சபை எவ்வாறு செயல்படுத்துகின்றது?

பிறரின் பொருள்களை தீய வழியில் கைவசப்படுத்துதல் கூடாது என்று மட்டுமன்று வேதனைப்படுபவர்களுக்கும், துன்பப்படுபவர்களுக்கும் ஆறுதலளித்து அவர்களுக்கு துணை புரிதல் வேண்டும் என்றும் இக்கட்டளைகள் கற்பிக்கின்றன. ஒரு சமூகத்தில் ஒரு சிலர் ஒன்றும் இல்லாமல் இருப்பதும், சிலர் அனைத்தும் உடையவர்களாக இருப்பதும் இக்கட்டளைக்கு எதிரானது ஆகும். உள்ளவர்கள் இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ வேண்டும் என்று இக்கட்டளை கற்பிக்கிறது. இவ்வாறு ஏழைகளுக்கு முன்னுரிமை அளிக்க கிறிஸ்தவர்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

திருச்சபை எப்போதும் ஏழைகளின் பக்கம் சேர்ந்து நிற்கிறது. திருச்சபையின் போதனைகளும், செயல்பாடுகளும் இதனை அடிப்படையாகக் கொண்டே நடைபெறுகிறது. "பட்டினியால் இவ்வுலகில் பல மக்கள் அவதிப்படுகின்றனர்.... தனிமனிதரும் ஆட்சியாளரும் தத்தம் சக்திக்கேற்ப தமது நலன்களை பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய உதவியானது குறிப்பாக தனி மனிதரும் நாடுகளும் தமக்குத் தேவையானவற்றை தாமாகவே அடையும் பொருட்டும் முன்னேற்றம் காணும் பொருட்டும் அளிக்கப்பட வேண்டும்" (இன்றைய உலகில் திருச்சபை எண் 69).

ஏழைகளுக்காகவும் அவர்களின் உரிமைக்காகவும் திருச்சபை எல்லாக் காலங்களிலும் நிலை கொள்ளவும், குரல் கொடுக்கவும் செய்கின்றது. அது போன்று ஏழாம் கட்டளைக்கும், பத்தாம் கட்டளைக்கும் எதிரான எல்லா செயல்களையும் திருச்சபை எதிர்க்கிறது.

3. பேராசை என்பதின் பொருள் என்ன?

ஒருவர் தன்னை மட்டும் சார்ந்து பொருள் சேர்த்தலும், தேவைக்கு அதிகமாக செல்வம் ஈட்டுதலும், பிறரைப் பற்றிய கவலையின்றி தன்னலத்துக்காக மட்டும் செல்வம் ஈட்டுதலும் பேராசை ஆகும். நன்மையை மட்டும் குறிக்கோளாக வைத்து செல்வத்தை பயன்படுத்த வேண்டும்.

தன்னலத்துக்காக மட்டும் பொருள் ஈட்டுதல் பிறருடைய உரிமையை மறுத்தல் ஆகும். பேராசைக்கு அடிமைப்பட்டவர்கள் செல்வத்தை கடவுளாக எண்ணி வழிபடுகின்றனர். இவர்கள் செல்வம் ஈட்டுவதற்காக எச்செயலையும் செய்யத் தயங்கமாட்டார்கள். எவ்வித அறநெறி மதிப்பீடுமின்றி செல்வம் ஈட்டுதல் பாவமாகும்.

4. தீய வழியில் கையடக்கியதை திரும்பக் கொடுக்கும் போது மட்டுமே செய்த தவறுக்கு விடுதலை கிடைக்கும் தெளிவுபடுத்துக?

தீய வழியில் பிறரை வஞ்சிக்கவோ, களவு செய்யவோ செய்திருந்தால் அதற்கு ஈடு செய்வதன் வழியாக மட்டுமே அத்தீமையிலிருந்து விடுபட முடியும். இதனைச் செய்து முடிக்க ஒவ்வொருவருக்கும் கடமை உண்டு. சமூக நீதிக்கேற்ப நஷ்ட பரிகாரம் செய்ய வேண்டும். இயேசுவோடு உறவு கொண்டிருக்க வேண்டுமெனில் இதனைக் கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டும்.

சக்கேயு இயேசுவைக் கண்டவுடன் பின்வருமாறு கூறினார். "ஆண்டவரே, என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" (லூக்கா 19:8). இந்த மனநிலையை நமது வாழ்வில் நாமும் கொண்டிருக்க வேண்டும்.

களவு செய்யாதிருப்பாயாக, உன் அயலானின் பொருள் யாதொன்றையும் விரும்பாதிருப்பாயாக என்னும் கட்டளைகளை கடைபிடிப்பதன் வழியாக மட்டுமே நல்ல ஒரு சமூகச் சூழ்நிலை உருவாக்க முடியும். தனிச் சொத்துரிமை என்று கூறும் போது ஏழைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று அர்த்தமாகிறது.

எவருடையாவது உடமைகளை தீய வழிகளில் கவர்ந்திருந்தால் அவற்றிற்கு ஈடு செய்ய வேண்டும் என்று இக்கட்டளை அறிவுறுத்துகிறது. இக்கட்டளைகளைக் கடைபிடிப்பதன் வழியாக தன்னுடைய நலனுக்காக சேமித்து வைத்த செல்வத்தை பிறருடைய தேவைக்காக பகிர்ந்தளிக்க ஒரு நல்ல சமுதாயம் உருவாக்க முயல்வோம்.

**குறுவினா விடைகள்**

1. சொத்துக்களை நியாயமாக சொந்தமாக்குவதைப் பற்றிய கட்டளைகள் எவை? "களவு செய்யாதிருப்பாயாக", "உன் அயலாரின் பொருள் யாதொன்றையும் விரும்பாதிருப்பாயாக"
2. பழைய ஏற்பாட்டில் எப்போது முதல் தனிச்சொத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது? அரசர் ஆட்சி முதல்
3. இறைவனாகிய ஆண்டவர் மனிதனைப் படைத்து பூமியின் மேலும், அதிலுள்ள அனைத்துப் படைப்புகளின் மேலும் யாருக்கு அதிகாரம் அளித்தார்? மனிதனுக்கு
4. மனிதனுக்கு தனிச்சொத்து தேவைப்படுவது ஏன்? மனிதனுக்கு வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், கடமைகளை நிறைவேற்றவும்
5. ஒருவருக்கு உரிமையான தனிச்சொத்தை பாதுகாப்பதாக உருவான கட்டளை எது? "களவு செய்யாதிருப்பாயாக"
6. ஒவ்வொருவருடையவும் உரிமைகளை ஏற்றுக்கொள்ளத் தூண்டுகின்ற கட்டளைகள் எவை? 'களவு செய்யாதிருப்பாயாக', 'உன் அயலானின் பொருள் யாதொன்றையும் விரும்பாதிருப்பாயாக'
7. நீதியின் நடைமுறை என்றால் என்ன? பிறருக்கு வழங்க வேண்டியதை வழங்கவும் அவருக்கு உரிமைப்பட்டதை கொடுப்பதற்குரிய மன சம்மதமும்
8. சட்டத்தின் அடிப்படையிலான நீதியை விடவும் அன்பின் அடிப்படையிலான நீதிக்கே முக்கியத்துவம் வழங்குவது எது? புதிய ஏற்பாடு
9. அன்பின் அடிப்படையிலான நீதியைக் குறித்து இயேசு கிறிஸ்து கூறியது என்ன? "நான் பசியாய் இருந்தேன். நீங்கள் உணவு கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன். என் தாகத்தைத் தணித்தீர்கள். அன்னியனாக இருந்தேன். என்னை ஏற்றுக்கொண்டீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன். நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள். நோயுற்றிருந்தேன். என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். சிறையில் இருந்தேன். என்னைத் தேடி வந்தீர்கள்" (மத்தேயு 25:35-36).
10. நீதிக்கு எதிரான செயல் என்பது எது? பிறருடைய சொத்துக்களை தீய வழியில் வசப்படுத்துவது
11. "உலகச் செல்வத்தைப் பெற்றிருப்போர் தம் சகோதரர் சகோதரிகள் தேவையில் உழல்வதைக் கண்டும் பரிவு காட்டவில்லையென்றால் அவர்களிடம் கடவுளின் **அன்பு** எப்படி நிலைத்திருக்கும்? பிள்ளைகளே, நாம் சொல்லிலும், பேச்சிலும் அல்ல. செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்" (1 யோவான் 3:17-18).
12. திருச்சபை எப்போதும் ஏழைகளின் பக்கம் சேர்ந்து நிற்கிறது என்பது பற்றிய வத்திக்கான் திருச்சங்க படிப்பினை எது? "பட்டினியால் இவ்வுலகில் பல மக்கள் அவதிப்படுகின்றனர்.... தனிமனிதரும் ஆட்சியாளரும் தத்தம் சக்திக்கேற்ப தமது நலன்களை பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய உதவியானது குறிப்பாக தனி மனிதரும் நாடுகளும் தமக்குத் தேவையானவற்றை தாமாகவே அடையும் பொருட்டும் முன்னேற்றம் காணும் பொருட்டும் அளிக்கப்பட வேண்டும்" (இன்றைய உலகில் திருச்சபை எண் 69).
13. ஏழாம், பத்தாம் கட்டளைக்கும் எதிரான தீமைகள் எவை? பேராசை, பொறாமை, களவு
14. தீய வழியில் பிறரை வஞ்சிக்கவோ, களவு செய்யவோ செய்திருந்தால் அத்தீமையிலிருந்து விடுபட செய்ய வேண்டியது என்ன? நஷ்ட ஈடு
15. "ஆண்டவரே, என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" யார் யாரிடம் கூறியது? ? சக்கேயு இயேசுவிடம்

16. ஆன்மீக இழப்புக்கும், இறப்புக்கும் காரணமாக அமைவது பொருளாசையே என்ற மாலை மன்றாட்டுப் பாடல் என்ன? “கொல்லும் விடமாம் பொன்வெள்ளி தனமும் தேடாய் மகனே நீ தேடுக நலம் தரு மறிவுரைகள்ஆண்டவர் உன்னை நேசிக்க!

17. “எல்லாவகை பேராசைக்கும் இடங்கொடாதவாறு **<u>எச்சரிக்கையாயிருங்கள்</u>**. மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்து விடாது" (லூக்கா 12:15).

## பாடம் 20

## மனச்சான்று

பயிற்சி வினாக்கள்

1. மனச்சான்று என்பதன் வழியாக பொருள் கொள்வது யாது?

'கோண்ஷியன்சியா' என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து 'காண்சியன்ஸ்' என்னும் ஆங்கில வார்த்தை உருவானது. இந்நேரத்தில் செய்யப் போகின்ற செயல்பாடுகளைக் குறித்த இறுதித் தீர்ப்பே 'காண்சியன்ஸ்' என்று வார்த்தையின் பொருள்.

பல்வேறு காலங்களில் மனச்சான்றை புரிந்துக் கொள்ள பலர் முயன்றனர். நன்மையைக் குறித்த அறிவும், அதனோடு தொடர்புடைய உள்ளுணர்வுமே மனச்சான்று என்று பலர் எண்ணுகின்றனர். அதுபோன்று நன்மை தீமைகளை ஆராய்ந்துணர நம்மைத் தூண்டும் ஆன்மாவின் குரலாகவும், அறநெறி கொள்களைகளை சுட்டிக்காட்டும் ஒன்றாகவும் சிலர் மனச்சான்றைக் கருதுகின்றனர்.

சுருங்கக் கூறின் நன்மையையும் தீமையையும் பகுத்தறியவும், ஒரு செயலின் அநநெறியை உணர்ந்து நன்மையைச் செயல்படுத்தவும் கடவுள் மனிதனில் எழுதி வைத்திருக்கும் இறைவனின் குரல் அல்லது உள்ளார்ந்த தூண்டுதலே மனச்சான்று.

ஒரு செயலைக் குறித்து நீதிபூர்வமான தீர்மானம் எடுக்க வேண்டி வரும்போது அவனது மனச்சான்று அவனுக்குத் துணைபுரிகிறது. அன்பு செய்யவும், நன்மை செய்யவும், தீமையை விட்டுவிடவும் மனச்சான்று அவனைத் தூண்டுகிறது. அறம் சார்ந்த ஒரு செயலின் பொறுப்பை முழுவதுமாக ஏற்றெடுக்க ஒருவருக்கு மனஉறதி அளிப்பது மனச்சான்று ஆகும்.

ஒவ்வொரு மனிதரிலும் நன்மை செய்ய வேண்டும், தீமையை விட்டு விட வேண்டும் என்னும் உள்ளுணர்வு அவன் பிறக்கும் போதே அவனிடம் காணப்படுகிறது. நன்மை செய்யும் போது ஏற்படும் மகிழ்ச்சியும், தீமை செய்யும் போது ஏற்படும் குற்ற உணர்வும் எல்லா மனிதருக்கும் பொதுவானதாகும். இவ்வாறு மனச்சான்று ஒவ்வொரு வாழ்க்கைச் சூழலிலும் நன்மை செய்ய நம்மைத் தூண்டுகிறது.

2. மறைநூலில் மனச்சான்று எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் மனச்சான்று என்னும் வார்த்தை சாலமோனின் ஞானம் என்னும் நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (சாலமோனின் ஞானம் 17:11). யூதர்கள் மனச்சான்றை இதயம் என்னும் வார்த்தை வாயிலாக புரிந்துக் கொண்டனர். பழைய ஏற்பாட்டில் மனச்சான்றை குறித்து பல இடங்களில் காணப்படுகிறது. ஆதி பெற்றோர்கள் பாவம் செய்த போது அவர்கள் மனம் அவர்களை குற்றப்படுத்தியதாக நாம் காண முடிகிறது (தொடக்க நூல் 3) மனச்சான்றின் அளவுகோலாக பழைய ஏற்பாடு பத்துக் கட்டளைகளை அளித்திருக்கிறது.

மனச்சான்றை குறிக்கும் எந்த வார்த்தையும் நற்செய்தியில் காணப்படவில்லை. ஆனால் நற்செய்தியின் அறிவுரைகளெல்லாம் மனச்சான்றிற்கு ஏற்ப வாழ நம்மை அழைக்கிறது.

புனித பவுலடியாரின் திருமுகங்களில் மனச்சான்றைக் குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உண்மையான மனச்சான்றை உருவாக்குவதே கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை என்று அவர் கற்பிக்கிறார்.

நற்செய்திகளில் காணும் மனச்சான்றை பவுலடியார் தனது வாழ்க்கைச் சூழல்களில் காண்கிறார். “கிறிஸ்துவைச் சார்ந்த நான் சொல்வது உண்மை, பொய்யல்ல. தூய ஆவியால் தூண்டப்படும் என் மனச்சான்றே நான் சொல்வதற்குச் சாட்சி. உள்ளத்தில் எனக்குப் பெருந்துயரமும் இடைவிடாத வேதனையும் உண்டு” (உரோமையர் 9:1-2).

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகின்ற பாவத்தைப் பற்றிய கண்ணோட்டங்களின் பின்னணியில் ஒருவன் தன் செயல்களைப் பற்றி மதிப்பீடு செய்வதை புனித பவுலடிகளார் மனச்சான்றாக காண்கிறார். தம்மை ஒப்படைத்த வேலையை சரியாகவும்

மனச்சான்றிற்கேற்பவும் செய்ததில் பவுல் அடிகளார் பெருமை கொள்கின்றார் (2 கொரிந்தியர் 1:12; தி.ப 23:1, 24:16). இங்கே பவுலடியார் தனது மனச்சான்றை மதிப்பீடு செய்கிறார்.

கிறிஸ்துவின் சட்டங்கள் கிடைத்திராத புறவினத்தார்கள் மனச்சான்றின் சட்டப்படி நன்மையையும் தீமையையும் பகுத்தறிய வேண்டும் என்று புனித பவுலடியார் கூறுகிறார் (உரோமையர் 2:15). பலவீன மனச்சான்று உள்ளவர்களை பாவத்திற்கு இட்டுச் செல்ல கூடாது என்றும் பிறரின் மனச்சான்றை பாவத்தில் விழச் செய்தல் கூடாது என்றும் அவர் கற்பித்தார் (1கொரிந்தியர் 10:29).

நல்ல மனச்சான்றிலிருந்து நன்மையும், அன்பும் புறப்படும் என்றும், நல்ல மனச்சான்றை புறக்கணிப்பவர் தன்னுடைய விசுவாசத்தையே புறக்கணிக்கிறார் என்றும் புனித பவுலடியார் கற்பித்தார்.

3. மனச்சான்று தூய ஆவியாரின் குரல் என்று கூறுவது ஏன்?

மனச்சான்றை ஆண்டவரின் குரல் என்று நாம் அறிந்து கொண்டோம். நன்மையை ஏற்றுக்கொள்ளவும் தீமையை விட்டு விடவும் இடைவிடாது மனித மனதைத் தூண்டுகின்ற கடவுளின் ஆவியின் குரல் ஒவ்வொரு மனிதரிலும் உண்டு.

ஆனால் திருமுழுக்கின் வழியாக தூய ஆவியால் புனிதப்படுத்தப்பட்டு, உறுதி பூசுதலின் வழியாக தூய ஆவியால் முத்திரையிடப்பட்ட கிறிஸ்தவனைப் பொறுத்தமட்டில் தூய ஆவியால் தூண்டப்படும் என் மனச்சான்றே நான் சொல்வதற்குச் சாட்சி (உரோமையர் 9:1). தூய ஆவியின் நிறைவில் வளரும் ஒரு கிறிஸ்தவனைப் பொறுத்தமட்டில் அவனுடைய மனச்சான்றின் தீர்மானத்துக்கு தூய ஆவி எப்போதும் துணை நிற்கின்றார்.

மனச்சான்று தூய ஆவியின் குரலாதலால் மனச்சான்றிற்கேற்ப செயல்படுபவர்கள் நன்மையில் வாழ்கின்றனர். நல்ல மனச்சான்று கொண்ட செயல்பாடும் தீய வாழ்வும் இணைந்து செல்ல முடியாது. பாவம் கடவுளின் உறவிலிருந்து நம்மைப் பிரிக்கிறது. தூய மனச்சான்று நம்மை கடவுளிடம் ஒன்றிணைக்கிறது. அதன் பலனாக, மனச்சான்றிற்கேற்ப வாழ்பவர்கள் மன அமைதியும், சமாதானமும் அடைகின்றனர்.

பெரிய தீமையைச் செய்தாலும் 'என் மனச்சான்றிற்கேற்பவே செய்தேன்' என்று பலர் கூறுகின்றனர். இவ்வாறு கூறுபவரின் மனச்சான்று சரியான மனச்சான்று தானா, கிறிஸ்தவமாக உருவாக்கப்பட்ட மனச்சான்று தானா என்பது தான் பிரச்சனை. அதனால் கிறிஸ்தவமான ஒரு மனச்சான்று உருவாக்கப்பட வேண்டியது தேவையான ஒன்றாகும்.

4. மனச்சான்றின் உருவாக்கம் என்பதன் வழியாக பொருள் கொள்வது யாது?

தீமையை விட்டுவிடவும், நன்மையைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆழமன அழைப்பு ஒவ்வொருவருக்கும் பிறக்கும் போதே அமைகிறது. வளர்ச்சியடைவதற்காகவே ஒருவரின் அறிவும் மனமும் பக்குவப்படுவது போன்று மனச்சான்றும் பக்குவடைய வேண்டும்.

ஒரு கிறிஸ்தவ விசுவாசியைப் பொறுத்தமட்டில் அவரின் மனச்சான்றின் உருவாக்கம் குடும்பச் சூழலில் இருந்தே ஆரம்பமாகின்றது. குறிப்பாக பெற்றோர்கள், சகோதரர்கள் போன்றவர்களிடமிருந்து கிடைக்கின்றதான மனநிலை ஒரு குழந்தையின் மனச்சான்றுக்கு படிப்படியாக உருவம் கொடுக்கிறது.

நன்மையையும், தீமையையும் பகுத்தறிய சிறுவயது முதலே அவனுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். மறைக்கல்வி வகுப்புகள், மறைநூல் வாசித்தல், செபம், ஆராதனை முறைகள் போன்றவை உண்மையான கிறிஸ்தவ மனச்சான்றின் உருவாக்கத்துக்கு துணை புரிகிறது.

மனித மனம் தன்னலத்தை நாடுவதனால் தற்கால மகிழ்ச்சிக்காக தீமையைத் தேர்ந்தெடுக்க மனித மனம் இடைவிடாமல் தூண்டுகிறது. இவ்வாறாக உள்ளத்தில் சவால்கள் ஏற்படும் போது நன்மையைத் தேர்ந்தெடுக்கவும் தீமையை விட்டுவிடவும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

நன்மையை நிரந்தரமாகத் தேர்ந்தெடுக்கும் போது அது ஒரு நல்ல பழக்கமாக மாறும். இவ்வாறு நன்மையைத் தேர்ந்தெடுப்பதன் வழியாக நமது மனச்சான்றைபக்குவமடைந்த கிறிஸ்தவ மனச்சான்றாக உருவாக்க முடியும்.

கிறிஸ்தவர்களை பொறுத்தமட்டில் மனச்சான்றின் உருவாக்கத்துக்கு நம்பிக்கையையும், நன்னெறிகளையும் குறித்த திருச்சபை போதனைகள் இன்றியமையாததாகும். சிறுவயது முதல் திருச்சபையின் விசுவாசத்தைக் குறித்தும் நன்னெறிகளைக் குறித்தும் கற்பிக்க வேண்டும். இறைவெளிப்பாட்டை விளக்கிக் கூறதிருச்சபைக்கு உரிமையுள்ளதனால் திருச்சபையின் போதனைகளை விசுவாசிகள் மிகுந்த ஆதரவோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு திருச்சபையின் விசுவாச வாழ்வுடன் சேர்ந்து மனச்சான்றுக்கு உருவம் கொடுப்பதன் வழியாக அது கடவுளின் உண்மையான குரலாக மாறும். இத்தகைய மனச்சான்றிற்கேற்ப வாழ்பவன் இறைவனுக்கு எதிராகவோ அல்லது தீய செயல்களிலோ ஈடுபடமாட்டான்.

6. உண்மை மனச்சான்றின் வழியாக நாம் அறிந்து கொள்வது யாது?

பக்குவமடையாத மனச்சான்று எடுக்கும் தீர்மானங்கள் தவறிப்போகலாம். தன்னலம், நன்மையைக் குறித்த அறியாமை, உணர்வுகளின் ஆதிக்கம் பிறருடைய தீய போதனைகள் போன்றவை பல வேளைகளிலும் மனச்சான்றின் தீர்மானங்களை வழிதவறச் செய்கிறது. உண்மை மனச்சான்று அதாவது சரியான மனச்சான்று உருவாக்க விரும்புபவர்கள் மேற்கூறிய செயல்களுக்கு எதிராக தங்களை உறுதிபடுத்த வேண்டும்.

இறைச் சட்டங்களுக்கும், இறைவார்த்தைகளுக்கும், திருச்சபை போதனைகளுக்கும், இயற்கை சட்டங்களுக்கும் ஏற்ப உருவாக்கப்பட்ட பக்குவமடைந்த நன்னெறி நிலையே உண்மை மனச்சான்றின் தனிச்சிறப்பாகும்.

முதலாவதாக கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் குறித்த தெளிவான அறிவும், பயிற்சியும் பெறுதல் வேண்டும்.

இரண்டாவதாக நன்மை என்ன என்பதை தெளிவாக அறிந்து சந்தேகங்களுக்கு தீர்வு கண்ட பின் தீர்மானங்கள் எடுக்க வேண்டும்.

மூன்றாவதாக மனச்சான்றின் தீர்மானம், தீய தாக்கங்களிலிருந்தும், உணர்வுகளின் தாக்கத்திலிருந்தும், அதிகாரங்களிலிருந்தும் விடுபட்டு சுதந்திரமாக இருத்தல் வேண்டும்.

நான்காவதாக சரியான மனச்சான்றில் நிலைத்து நிற்க செபத்தின் வழியாக தூய ஆவியாரின் உதவியை நாடுதல் வேண்டும். தூய ஆவியின் செயல்பாட்டின் வழியாக தன்னல ஆர்வத்தை உணர்ந்தறிய நம்மால் இயலும்.

இவ்வாறாக உண்மை மனச்சான்றின் உடைமைகளாக உண்மையான கிறிஸ்துவின் சீடராக வளர்ந்துவர நாம் முயல்வோம்.

**குறு வினா விடைகள்**

1. மனச்சான்று என்பதன் ஆங்கிலச் சொல் என்ன? 'காண்சியன்ஸ்'
2. 'காண்சியன்ஸ்' என்னும் ஆங்கிலச் சொல் எந்த இலத்தீன் சொல்லிலிருந்து உருவானது? 'கோண்ஷியன்சியா'
3. 'காண்சியன்ஸ்' என்று வார்த்தையின் பொருள் என்ன? செய்யப் போகும் செயல்களைக் குறித்த இறுதித் தீர்ப்பு
4. மனச்சான்றுக்கும் இறைகுரலுக்கும் உள்ள தொடர்பு என்ன? நன்மையையும் தீமையையும் பகுத்தறியவும், ஒரு செயலின் அநநெறியை உணர்ந்து நன்மையைச் செயல்படுத்தவும் கடவுள் மனிதனில் எழுதி வைத்திருக்கும் இறைவனின் குரல் அல்லது உள்ளார்ந்த தூண்டுதலே மனச்சான்று.
5. அறச்செயலின் பொறுப்பை முழுவதுமாக ஏற்றெடுக்க ஒருவருக்கு மனஉறுதி அளிப்பது எது? மனச்சான்று
6. பழைய ஏற்பாட்டில் மனச்சான்று என்னும் வார்த்தை சாலமோனின் ஞானம் என்னும் நூலில் எங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது? சாலமோனின் ஞானம் 17:11
7. யூதர்கள் மனச்சான்றை எந்த வார்த்தை வாயிலாக புரிந்து கொண்டனர்? இதயம்
8. பழைய ஏற்பாடு பத்துக் கட்டளைகளை எதன் அளவுகோலாக அளித்திருக்கிறது? மனச்சான்றின்
9. மனச்சான்றை குறிக்கும் வார்த்தைகள் நற்செய்தியில் உண்டா? இல்லை
10. உண்மையான மனச்சான்றை உருவாக்குவதே கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை என்று கற்பித்தவர் யார்? புனித பவுல்
11. “கிறிஸ்துவைச் சார்ந்த நான் சொல்வது உண்மை, பொய்யல்ல. தூய ஆவியால் தூண்டப்படும் என் **மனச்சான்றே** நான் சொல்வதற்குச் சாட்சி. உள்ளத்தில் எனக்குப் பெருந்துயரமும் இடைவிடாத வேதனையும் உண்டு” (உரோமையர் 9:1-2).

12. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகின்ற பாவத்தைப் பற்றிய கண்ணோட்டங்களின் பின்னணியில் ஒருவன் தன் செயல்களைப் பற்றி மதிப்பீடு செய்வதை மனச்சான்று என விவரிப்பவர் யார்? புனித பவுல்
13. தம்மை ஒப்படைத்த வேலையை சரியாகவும் மனச்சான்றிற்கேற்பவும் செய்ததில் பவுல் அடிகளார் பெருமை கொள்கின்ற பகுதிகள் எவை? 2 கொரிந்தியர் 1:12; தி.ப 23:1, 24:16
14. கிறிஸ்துவின் சட்டங்கள் கிடைத்திராத புறவினத்தார்கள் மனச்சான்றின் சட்டப்படி நன்மையையும் தீமையையும் பகுத்தறிய வேண்டும் என்று கூறியவர் யார்? புனித பவுல்
15. பலவீன மனச்சான்று உள்ளவர்களை பாவத்திற்கு இட்டுச் செல்ல கூடாது என்றும் பிறரின் மனச்சான்றை பாவத்தில் விழச் செய்தல் கூடாது என்றும் கற்பித்தவர் யார்? புனித பவுல்
16. நல்ல மனச்சான்றிலிருந்து நன்மையும், அன்பும் புறப்படும் என்றும், நல்ல மனச்சான்றை புறக்கணிப்பவர் தன்னுடைய விசுவாசத்தையே புறக்கணிக்கிறார் என்றும் கற்பித்தவர் யார்? புனித பவுல்
17. கிறிஸ்தவரின் மனச்சான்றின் அடிப்படை என்பது என்ன? கிறிஸ்தவ விசுவாசம்.
18. விசுவாசத்தின் அடிப்படையில் ஒரு நபரில் உருவாகின்ற அறநெறி சார்ந்ததும் ஆழ்மனதில் உள்ளதுமான தூண்டுதலை என்ன என்கிறோம்? மனச்சான்று
19. மனச்சான்று **விசுவாசத்தால்** அடிமைப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல.
20. கிறிஸ்தவனைப் பொறுத்தமட்டில் விசுவாசத்துக்கேற்ப வாழ்வதும், **மனச்சான்றிற்கேற்ப** வாழ்வதும் ஒன்றாகும்.
21. ஆண்டவர் மனிதனுக்கு அளித்துள்ள நன்மையையும், தீமையையும் தேர்ந்தெடுக்கும் மிகப்பெரிய கொடை எது? சுதந்திரம்.
22. தீமை செய்வதால் கிடைக்கின்றதான தற்காலிக மகிழ்ச்சி அவனை எவற்றைச் செய்யத் தூண்டுகிறது? தீமை
23. மனிதனின் நன்மைக்கும் தீமைக்கும் இடையே உள்ள போராட்டத்தைக் குறித்து புனித பவுலடியார் கூறுவது என்ன? "நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை. விரும்பாத தீமையையே செய்கிறேன்" (உரோமையர் 7:19).
24. மனிதனுள் தூய ஆவியின் குரல் என்பது என்ன? மனச்சான்று
25. மனிதனுள் ஆண்டவரின் குரல் என்பது என்ன? மனச்சான்று
26. தூய ஆவியால் தூண்டப்படும் என் மனச்சான்றே நான் சொல்வதற்குச் சாட்சி என்றவர் யார்? புனித பவுல்
27. ஒரு கிறிஸ்தவனுக்கு அவனுடைய மனச்சான்றின் தீர்மானத்துக்கு துணை நிற்பவர் யார்? தூய ஆவி
28. நல்ல மனச்சான்றுடன் இணைந்து செல்ல முடியாதது எது? தீய வாழ்வு
29. கிறிஸ்தவ மனச்சான்றிற்கேற்ப வாழ்பவர்கள் எவற்றைப் பெற்றுக் கொள்கின்றனர்? மன அமைதியும், சமாதானமும்
30. ஒரு கிறிஸ்தவ விசுவாசியின் மனச்சான்றின் உருவாக்கம் எங்கே ஆரம்பமாகின்றது? குடும்பச் சூழலில்
31. உண்மையான கிறிஸ்தவ மனச்சான்றின் உருவாக்கத்துக்கு துணை புரியும் திருச்சபையின் செயல்கள் எவை? மறைக்கல்வி வகுப்புகள், மறைநூல் வாசித்தல், செபம், ஆராதனை முறைகள், திருச்சபையின் போதனைகள்
32. எதனை தேர்ந்தெடுப்பதன் வழியாக நமது மனச்சான்றை பக்குவமடைந்த கிறிஸ்தவ மனச்சான்றாக உருவாக்க முடியும்? நன்மை
33. மனச்சான்றின் தீர்மானங்களை வழிதவறச் செய்பவை எவை? தன்னலம், நன்மையைக் குறித்த அறியாமை, உணர்வுகளின் ஆதிக்கம் பிறருடைய தீய போதனைகள்
34. இறைச் சட்டங்களுக்கும், இறைவார்த்தைகளுக்கும், திருச்சபை போதனைகளுக்கும், இயற்கை சட்டங்களுக்கும் ஏற்ப உருவாக்கப்பட்ட பக்குவமடைந்த நன்னெறி நிலை என்பது என்ன? உண்மை மனச்சான்று
35. “கிறிஸ்துவை சார்ந்த நான் சொல்வது உண்மை. **பொய்யல்ல**, தூய ஆவியால் தூண்டப்படும் என் மனச்சான்றே நான் சொல்வதற்குச் சாட்சி" (உரோமையர் 9:1).

www.malankaralibrary.com